





கல்கி

KALKI 17-12-72

45 காசு



கல்கி

பொருளடக்கம்

பரிதாபி, மார்கழி 3 ○ டிசம்பர் 17. 1972



கல்கி

மலர் 32
இதழ் 20

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

மானுடருள் ஒரு மானஸ சரஸ்

இமாலய உச்சியில் பரம நிர்மலமாக அப்படியே தேங்கிக் கிடக்கிறது மானஸ சரஸ், அகண்ட வானத்தைப் பிரதிபலித்துக் கொண்டு. நூறாயிரம் போராட்டங்களில் சிதறிக் கொண்டிருக்கும் இந்த உலகில் பரந்த அன்பைப் பிரதிபலித்துக் கொண்டு ஸ்வபாவம் என்கிற நிர்மல தடாகமாக இருக்கும் ஒரு ஜீவன் இருக்கிறது. அதைத்தான் ஜே. கிருஷ்ணமூர்த்தி என்கிறார்கள். நெருங்கிப் பழகியவர்கள் 'கிருஷ்ணாஜி' என்பர். இறைவனின் தெளிந்த மனமே மானச சரஸாயிற்று என்பர். எந்தக் கலக்கமும் இல்லாத மனத் தெளிவின் மூர்த்தியே ஜே. கிருஷ்ணமூர்த்தி.


மக்களுக்கு வேண்டிய பயிர் பச்சைகளை விளைவிக்கும் கங்கை போலவும் யமுனை போலவும், மகான்கள் பலர் இமய உச்சியிலிருந்து மக்களின் மட்டத்துக்கே இறங்கி வந்து அவர்களுக்கு அவரவர் நிலையில் ஏற்கிற ஆத்ம பிட்சையை விளைவித்து வருகிறார்கள். மானஸ 'சரஸின் கரைகளில் ஜனங்களுக்கு வேண்டிய பயிர் பச்சை விளையாது. அது கீழே இறங்குவதும் இல்லை. தான்பாட்டுக்குக் கிடக்கிறது, 'ஜோ'வென்று, பரமசுத்தமாக. ஆனாலும் அப்படி ஒரு வாவி இருக்கிறது என்று எண்ணும்போதே நம் உள்ளத்துக்குக் குளிர்ச்சியும் தூய்மையும் ஏற்படுகின்றன. நம் நிலை என்பதாக எதையோ நாம் எண்ணத்தால் நம்மீது சுமத்திக் கொண்டிருக்கிறோமே அந்த மட்டத்துக்கு கிருஷ்ணாஜி இறங்கி வராமல் இருக்கலாம். ஆனால் தன்னிலையில் இப்படி ஒரு களங்கமற்ற ஆத்மா சிந்தனைச் சுமையும் ஆசாபாசமும் ஒட்டாமல் வாழ்கிறது என்று நினைப்பதே நம் நெஞ்சுக்குத் தண்மை ஊட்டுகிறது.


அவர் என்ன உபதேசிக்கிறார்? ஒன்றுமே உபதேசிக்கக் கூடாது என்கிறார். உள்ளத்தை உள்ளபடி காண்கிற உண்மை நிலையை, சிந்தனை என்கிற சுமையினால் மாசுபடுத்திக் கொள்ளக் கூடாது என்கிறார். இந்தச் சிந்தனையைப் பிறர் மீது திணிக்கிற உபதேசமும் செய்ய வேண்டாம் என்கிறார். முன் கூட்டிய அபிப்பிராயங்கள், ஆசாபாசங்கள், கட்டுப்பாடுகள், இவற்றால் நம்மை நாமே நெரித்துக் கொள்ளாமல் அப்பட்டமாக ஸ்வபாவப்படி விநாடிக்கு விநாடி வாழ வேண்டும் என்கிறார். ஸ்வபாவத்தைக் கற்றுக் கொடுப்பது உண்டோ? ஸ்வபாவத்துடன் இருக்க மதம் உட்பட்ட எந்தக் கட்டுப்பாடும் வேண்டுமோ என்கிறார்.

விந்தையிலும் விந்தை, நம்மால் ஏனோ ஸ்வபாவமாக வாழ முடியவில்லை. ஆசாபாசங்கள் நம்மைக் கட்டிப் போடுகின்றன. இந்தக் கட்டிலிருந்து விடுபடுவதற்காகவே, கங்கையும் யமுனையும் போன்ற ஞானியர் பலர் நம் மட்டத்துக்கு வந்து, நமக்குப் புரிகிற நிலையிலிருந்து தொடங்கிச் சமயக்கோட்பாடுகளால் நம்மைக் கட்டுகிறார்கள். இந்தக் கட்டின் நெருக்கத்தில் பழைய ஆசாபாசக் கட்டு நெகிழ்ந்து கொடுக்கிறது. பிறகு இந்தச் சமய சித்தாந்தக் கட்டும் தெறித்துப் போகிறது. முடிவில் — உண்மையான நம்மிடமே நாம் வந்து சேர்ந்து கொள்கிறோம்.

இதற்குப் பிரயாசை என்ன, கட்டுப்பாடு என்ன என்று வியக்கிறது கிருஷ்ணமூர்த்தியின் உள்ளம். ஜே. கிருஷ்ணமூர்த்தி கட்டுப்பாடற்று வாழச் சொல்வதை, ஹிப்பிகளின் வாழ்வாக எண்ணிவிடலாகாது. ஹிப்பிகள் **எண்ணம் போனபடி** சுதந்திரமாக வாழ்கிறார்கள். ஜே. கிருஷ்ணமூர்த்தியோ **எண்ணங்களின் சுமையே போய்விட்ட** சுத்த நிலையின் சுதந்திரத்தைச் சொல்கிறார்.

பெரும்பாலும் லண்டனுக்கு அருகில் வசித்து வரும் கிருஷ்ணாஜி தற்போது சென்னை வந்திருக்கிறார். இம்மாதம் 20ந் தேதி வரை இங்கு தங்கியிருக்கிறார். அவர் தம்மைச் சிந்தனைச் சுமையிலிருந்து விடுவித்துக் கொண்டது போலவே, நம்மையும் நம்முடைய சிந்தனைச் சுமைகளிலிருந்து விடுவிக்கவே பார்க்கிறார். அந்த நிலையில் வணங்குகிற நிலையில் உள்ள ஒருவர், வணங்கப்படும் நிலையில் உள்ள ஒருவர் என்ற பேதங்கள் அவருக்குத் தெரிவதில்லையாதலால் நாம் அவரை வணங்குவதை ஏற்க மாட்டார்; நம் அன்பையே ஏற்பார். அன்பு என்ற அகண்ட ஆகாயமே அன்றோ அந்த மானஸ வாவியில் பிரதிபலிப்பது? அந்த அகண்டத்தை நாம் அநுபவிப்போமாக.


ஏழைமை
எப்படி பந்து வீசினாலும் அவுட் ஆக மாட்டேங்கிறானே!
நியூ பால் எடுத்துப் பாருங்களேன்!
சுதந்திரப் பொருளாதாரம்
சோஷலிசம்
இந்திரா
பிலு மோடி
அந்த 'டெஸ்ட்'டிலே கவனிச்சுக்கலாம்னேன்!
காமராஜ்
நெட் - பிராக்டீஸ்!


அடிப்படை உரிமைகள்!

தமிழ் நாட்டிலே...

தீரன்

ஈரோடு காங்கிரஸ் மகாநாடு

மதுரையில் நடைபெற்ற மாபெரும் விழாவுக்குப் பின் டிசம்பர் 2, 3 தேதிகளில் ஈரோட்டில் கோவை மாவட்ட காங்கிரஸ் மகாநாடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மதுரை மகாநாட்டின் மூலம் உருவான தேசிய எழுச்சியின் பயனை ஈரோட்டிலும் காண முடிந்திருக்கிறது. ஈரோட்டு விழா முதல் நாள் நடைபெற்ற மாபெரும் ஊர்வலத்தின்போதே களை கட்டி விட்டது. ஊர்வலம் முடிந்ததும் தொடங்கிய முதல் நாள் மகாநாடு விவசாயிகள் விழாவாகத் தொடங்கியது. இந்த விவசாயிகள் மகாநாட்டில் பேசும்போது திரு காமராஜ் அவர்கள், ''காந்திய நெறிகள்—கோட்பாடுகளின்படி கிராமங்களை அடிப்படையாக வைத்தே திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். சுதந்திரம் அடைந்தபின் கிராமங்களையும், காந்தியடிகளையும் சேர்த்தே மறந்து விட்டதனால் வந்த வினையைத்தான் இப்போது அனுபவிக்கிறோம். இனிமேலாவது திருந்தி நல்ல பாதையில் செல்வோம் என்று நான் சொல்லுகிறேன். ஆனால் மற்றவர்கள் இன்னும் தவற்றைத் திருத்திக் கொள்ள மறுக்கிறார்கள். பணம் சம்பாதிப்பது, பதவியைப் பிடிப்பது, பிறகு பதவியை வைத்து மேலும் பணம் சம்பாதிப்பது — இதைத்தான் இன்று நாம் எங்கும் காண்கிறோம்'' என்று வருத்தத்தோடு குறிப்பிட்டார். இரண்டாவது நாள் மகாநாடு மாதர் மகாநாடாகவும், மாணவர் மகாநாடாகவும் நடைபெற்றது. மாணவர் மகாநாட்டில் ஓட்டுரிமைக்கான வயதை 18 ஆக்குவது, படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது, கல்லூரிகளை நகர்ப்புறங்களில் அமைக்காமல், கிராமப்புறங்களில் அமைப்பது போன்றவற்றைப் பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சிவாஜி கணேசனின் நாடகம் மூலமாக வருவான ஒரு லட்சத்து ஐயாயிரம் ரூபாய் திரு காமராஜ் அவர்களிடம் காங்கிரஸ் நிதிக்காக அளிக்கப்பட்டது. இத்தொகையில் இருந்தும் திரு சிவாஜி கணேசனுக்கு அளிக்கப்பட்ட தங்கச் சங்கிலியை ஏலம் விட்டதிலிருந்தும் கிடைத்த ரூ. 20,000 தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கக்கன் அவர்களின் சேமநல நிதிக்காக அளிக்கப்பட்டது.

மாணவர் மகாநாட்டில் பேசும்போது, ''மாணவர்கள் எதிர்காலத்தைப் பற்றிக் கவலை கொண்டிருக்கிறார்கள். எதிர்காலம் இருள் சூழ்ந்திருக்கிறது. படிக்கும்போதே பல பிரச்னைகள். படித்த பின் வேலையில்லாப் பிரச்னை. படிக்கும்போதும் நன்றாகப் படிப்பவன் பாஸ் ஆகமாட்டேன் என்கிறான். அதே சமயத்தில் படிக்காதவன் பணத்தைக் கொடுத்தும் வேறு உபாயங்களைக் கையாண்டும் வெற்றியடைந்து விடுகிறான். இது நாட்டுக்கு மிகவும் அபாயத்தை உண்டாக்கக் கூடியது. நமது உள்நாட்டு மூலப் பொருள்களைக் கொண்டும், ஆள் பலத்தைக் கொண்டும் தொழில்களை ஏற்படுத்த வேண்டும். கஷ்டப்பட்டு உழைத்து முன்னுக்கு வர வேண்டும்'' என்று திரு காமராஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மாணவர் மகாநாட்டைத் தொடர்ந்து நடைபெற்ற அரசியல் மகாநாட்டில் திரு ரவீந்திர வர்மா ஆங்கிலத்தில் பேசியபோது ''திரு காமராஜ் அவர்களுடைய வாழ்க்கையே மற்றவர்களுக்குச் செய்தி. அவரைப் போன்ற அப்பழுக்கற்ற தலைவரைத் தமிழ்நாடு பெற்றிருப்பதற்காக மிகவும் பெருமைப்பட வேண்டும். அவரது ஒளியில் நாடே நன்மை பெறும்'' என்று பெருத்த மகிழ்ச்சி ஆரவாரத்துக்கிடையே குறிப்பிட்டார்.

தமிழக சட்டமன்றம்

டிசம்பர் 2ந் தேதி தமிழக சட்ட மன்றத்தில் நடந்த நிகழ்ச்சிகள் இந்த நாட்டில் இதற்குமுன் எங்கும் நடந்திராதவைகளாகும். ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள அனைவரும் இதற்காக வருந்தவே செய்வார்கள். மந்திரி சபையின் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அதுபற்றி எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே மன்றத்திலேயே மற்றொரு தாற்காலியில் துணை சபாநாயகர் இன்னொரு சபையையும் நடத்தியதாகப் பத்திரிகைகள் கூறுகின்றன. இது மரபுக்கு முரணானது. சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு 14 நாள் முன்னறிவிப்புத் தரவேண்டாமா, சபாநாயகர் சபையில் இருக்கும்வரை வேறொருவர் சபை நிகழ்ச்சிகளை நடத்த முடியுமா போன்ற கேள்விகளும் பிரச்னைகளும் எழுந்துள்ளன. அன்றைய தினம் சபாநாயகர் மேஜையின் மீதிருந்த மணி அகற்றப்பட்ட விதம், சபாநாயகரின் மூக்குக் கண்ணாடி உடைந்தது, சபாநாயகர், எதிர்க் கட்சி உறுப்பினர்களின் மைக்குகள் 'ஆஃப்' செய்யப்பட்டது, எல்லாம் பற்றித் தெரிய வருகிற செய்திகள் கவலை அளிப்பவை. சபாநாயகரும், பிறரும், வெளியேறும்போது செருப்பு வீசப்பட்ட கொடுமை தாங்க முடியாதது. இந்த அநீதி தொடர்பாக 4ந் தேதி எல்லா எதிர்க் கட்சிகளும் சட்டசபையைப் பகிஷ்காரம் செய்து விட்டன. 4ந் தேதிக்கு அப்புறமும் அ. தி. மு. க. வலது கம்யூனிஸ்ட், இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் தொடர்ந்து சபை பகிஷ்காரத்தைச் செய்து வருகின்றனர். ஸ்தாபன காங்கிரஸ், சுதந்திரா, உறுப்பினர்கள் 4ந் தேதிக்குப் பின் சட்ட சபைக்குச் சென்று சபையிலேயே எதிர்ப்புக் குரல் கொடுத்து வருகிறார்கள்; வெளி நடப்புச் செய்கிறார்கள். சபாநாயகர் திரு மதியழகன் நீதி கோரி வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

திருச்சி சம்பவங்கள்

இம்மாதம் 4ந் தேதி திருச்சி கிளைவ் ஹாஸ்டலில் நடந்துள்ள சம்பவங்கள்

தமிழ்நாட்டு மக்களின் அனுதாபத்தையும், கவலையையும் பெற்றிருக்கின்றன. இவேஸ் ஹாஸ்டலுக்குள் அத்துமீறி நுழைந்த போலீஸார் மாணவர்களை அடித்து நொறுக்கித் துன்புறுத்தியதாகச் செய்திகள் கூறுகின்றன. மாணவர்கள் மட்டுமில்லாமல் அந்த ஹாஸ்டலின் வார்டனும் அடிபட்டிருக்கிறார். மாணவர்களைத் தாக்குவதற்காக உள்ளே நுழைந்தவர்கள் தம்மிடமோ, நிர்வாகத்தினரிடமோ அநுமதி பெறாமலே உள்ளே நுழைந்தார்கள் என்பதை அந்த விடுதியின் துணை வார்டனே கூறிக் கண்டித்திருக்கிறார். ஏறக்குறைய 32 மாணவர்களுக்கு மேல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். திருச்சி கல்லூரி முதல்வர்களும், ஆசிரியர்களும் போலீஸாரின் அத்துமீறலைக் கண்டித்து ஒருமனதாக அறிக்கை விட்டிருக்கிறார்கள். திருச்சி வக்கீல்கள் சங்கம் போலீசாரின் போக்கைக் கண்டித்திருப்பதோடு 'நீதி விசாரணைக்'கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. டிசம்பர் 11ந் தேதி திருச்சியில் சர்வ கட்சியினரும் பேரணி நடத்த உத்தேசித்துள்ளனர்.

திருச்சி இவேஸ் ஹாஸ்டலில் டிசம்பர் 4-ந் தேதி நடந்த சம்பவம் பற்றி முதல் மந்திரி தமிழக சட்டசபையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஸ்தல அதிகாரிகள் தந்த தவறான தகவலின் அடிப்படையில் வெளியிடப்பட்டதாகும் என்று செயின்ட் ஜோஸப் கல்லூரி பிரின்ஸிபால் பூஜ்யர் காஸிமீர், செயின்ட் ஜோஸப் கல்லூரி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பூஜ்யர் ஆரோக்கியம் இருவரும் கூறியுள்ளனர். அவர்கள் இது சம்பந்தமாக ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளனர். கலெக்டர் அறிக்கையைக் குறிப்பிட்டு, ''பஸ் ஊழியர்கள் சிலரை மாணவர்கள், ஹாஸ்டலுக்குள் இழுத்து அடைத்து வைத்துக் கொண்டனர் என்றும், போலீஸார் அவர்களை விடுவித்தனர் என்றும் சொல்வது சரியல்ல'' என்று கூறியுள்ளனர்.

திருச்சியில் உள்ள கல்லூரிகள் அனைத்தின் பிரின்ஸிபால்கள் கூட்டம், ரெவின்யூ அதிகாரிகளாக இருந்தாலும் சரி, போலீஸாராக இருந்தாலும் சரி, பஸ் ஊழியராக இருந்தாலும் சரி, சமூக விரோத சக்திகளாக இருந்தாலும் சரி, கல்வி ஸ்தாபனங்களுக்குள்ளேயும் ஹாஸ்டல்களுக்குள்ளேயும் வேண்டுமென்றே அத்துமீறி நுழையும் போக்கை வன்மையாகக் கண்டித்துள்ளது.

திண்டுக்கல் உபதேர்தல்

தமிழ் நாட்டில் திண்டுக்கல் தொகுதியில் நடைபெற விருக்கும் லோகசபை உபதேர்தலில் (தேதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை) ஸ்தாபன காங்கிரஸ் சார்பில் வேட்பாளரை நிறுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. காங்கிரஸ் செயலாளர் திரு ரவீந்திர வர்மா இதை அறிவித்திருக்கிறார். இந்தத் தேர்தல் இப்போதுள்ள தமிழக அரசியல் சூழ்நிலையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். தி. மு. க.விலிருந்து அ. தி. மு. க. பிரிந்துள்ள இந்தச் சூழ்நிலையில் ஒரு பலப்பரீட்சையாக இத்தேர்தல் வருகிறது. இந்திரா காங்கிரஸ் சார்பில் இத்தேர்தலில் யாராவது நிற்பார்களா என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை. தி. மு. க. சார்பில் இங்கே யாராவது நிற்பார்களா, அல்லது அதன் உறவுக் கட்சியாகிய பார்வர்டு பிளாக் வேட்பாளரை நிறுத்தி வைத்து ஒத்துழைப்பார்களா என்பதும் தெரியவில்லை. அ. தி. மு. க.வின் நிலையும் இத்தேர்தலைப் பொறுத்து இன்னும் அறிவிக்கப்படவில்லை. எப்படி யிருந்தபோதிலும் இன்று உருவாகியுள்ள சூழ்நிலையில் இத்தேர்தல் ஒரு பலப்பரீட்சையாகவே இருக்கும் என்று எதிர்பார்க்க இடம் இருக்கிறது.

கல்லூரிகளும் மந்திரிகள் பெயரும்

தமிழ் நாட்டில் புதிதாகத் திறக்கப்படும் கல்லூரிகளுக்கு முதல் மந்திரி பெயரும், மற்ற மந்திரிகளின் பெயர்களும் அடுத்தடுத்துச் சூட்டப்படும் பழக்கத்தைத் திரு காமராஜ் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்.

''மேற் படிப்பையோ உயர்தரக் கல்வியையோ வளர்க்க வேண்டும் என்றோ பரப்ப வேண்டும் என்றோ இவர்கள் புதுக் கல்லூரிகளைத் திறப்பதாகத் தெரியவில்லை. தங்கள் பெயர்களைச் சூட்டுவதற்கு என்றே கல்லூரிகளைத் திறக்கிறார்கள். இது கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பது போன்றதாகும். சர்க்கார் கல்லூரி ஒன்றை ஆரம்பிப்பதற்கு அப்பகுதியிலுள்ள மக்களில் யாராவது ரூபாய் ஐந்து லட்சம் நன்கொடை தர முன்வந்தால் அப்படி முன்வருகிறவருடைய பெயரை அந்தக் கல்லூரிக்குச் சூட்டுவதுதான் முன்பு இங்கு இருந்த காங்கிரஸ் ஆட்சியில் வழக்கமாக இருந்தது. இப்போதோ கல்லூரிகளுக்குத் தங்கள் பெயர்களை வைக்கும் விஷயத்தில் தி. மு. க. மந்திரிகளே ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள்'' என்று திரு காமராஜ் அவர்கள் கூறியிருக்கும் கருத்து மக்கள் சிந்திப்பதற்கு உரியதாகும்.

மூர்த்தி வழிபாடும் முற்றிய ஞானமும்

இதோ எனக்கு முன்னால் வாழைப்பழச் சீப்பு வைத்திருக்கிறது. ''இதைப் பார், இது மஞ்சளாக இருக்கிறது'' என்று நான் சொன்னால் இது மஞ்சளாகத்தான் இருக்கிறது என்று காண்கிறீர்கள். அதற்குமேல் மனசில் அதைப் பற்றி எந்தப் பிரதி சிந்தனையும் (Reaction) எழுவதில்லை. மாறாக, இதே வாழைப் பழத்தைக் காட்டி, ''இதோ பார், இது சிவப்பாக இருக்கிறது'' என்று நான் சொல்லியிருந்தால்? உடனே உங்கள் மனசில் ஓர் ஆட்சேப உணர்ச்சி எழுந்திருக்கும். இது மஞ்சள் என்றோ, சிவப்பு என்றோ நான் சொல்லாமல், ''இந்த வாழைப்பழம் சிவப்பாக இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள்'' என்று சொன்னால் அப்போது உங்கள் மனசில் ஒருவிதமான பிரதி உணர்ச்சி உண்டாகிறது. மஞ்சள் பழத்தையே சிவப்பாக இருப்பது போல் உங்கள் மனசினால் கற்பனை செய்து பார்க்கிறீர்கள். மனசை ஒருமுகப்படுத்தினால் அப்படிப் பாவிக்கவும் முடிகிறது.

உபாஸனை என்பது இப்படிப்பட்டதுதான். பரம்பொருள் இப்படி இப்படி இருப்பதாகப் பாவியுங்கள் என்று பலவிதமான குணங்களைக் கொண்ட பல மூர்த்திகளைக் காட்டிக் கொடுக்கிறது உபாஸனா மார்க்கம். வாழைப்பழம் உண்மையில் மஞ்சள் நிறம் என்பது போல் பரமாத்மாவின் உண்மைக் குணம் என்ன? அது குணம் கடந்தது என்பதே. பரமாத்மா எல்லாவற்றையும் கடந்த வஸ்து என்று சொல்லி விட்டால், அப்புறம் ஜனங்களின் மனசு அதில் மேற்கொண்டு நிற்பதற்கு இடமே இல்லை. இது நமக்குப் புரிபடாத வஸ்து என்று விட்டு விடுவார்கள். வாழைப் பழத்தைச் சிவப்பு என்று சொன்னதை மனசு ஆட்சேபித்தது போல், ஒரு சிலையைக் காட்டி இதுதான் பரமாத்மா என்றால் அதை எவராலும் ஏற்க முடியாது. 'இது ஒரு கல் பொம்மை அல்லவா? இது எப்படி உலகத்தை நடத்துகிற பரமாத்ம சக்தி ஆகும்?' என்று தோன்றும். ஆனால் ஒரு சிலையைக் காட்டி, ''இதைப் பரமாத்மா என்று பாவியுங்கள்'' என்றால் கொஞ்சம் அப்படிப் பாவிக்க முடிவதாகத் தோன்றும் — வாழைப் பழத்தைச் சிவப்பாகக் கற்பனை செய்வது போல். ஆனால் சிவப்பு என்றால் என்னவென்று மனசுக்குத் தெரிவது போல் பரமாத்ம லட்சணம் தெரியாதே! அதனால் விக்கிரகத்தை 'ஏதோ பெரிய வஸ்து' என்று சிறிது எண்ணிப் பார்க்கலாமே தவிர அதிலேயே ஆழ ஊன்றி நிற்க முடியாது. தெரிந்த விஷயங்களில்தான் மனசு பிடிமானத்தோடு நிற்கும். எனவே ஒரே காருண்யமும் சௌந்தரியமும் வழிகிற மாதிரி ஸ்திரீ ரூபத்தில் விக்கிரகம் செய்து, ''இதில் பரமாத்மா தயாராக வந்திருக்கிறார் என்று பாவனை பண்ணு'' என்றால் மனசு அதை நன்றாகக் கிரகித்துக் கொண்டு அப்படியே ஆழ்ந்து ஈடுபட முடிகிறது.


குணமற்ற பரமாத்ம வஸ்துவிலிருந்துதான் அனந்த கல்யாண குணங்களும் வந்திருக்கின்றன. ரூபமற்ற பரமாத்மாவிடமிருந்துதான் சகல உருவங்களும் தோன்றியிருக்கின்றன. அந்தந்தக் குணத்துக்கு அநுகூலமான ரூபம், முத்திரை, ஆயுதம் முதலியவற்றோடு திவ்யமூர்த்திகளைக் காட்டினால் அவற்றில் மனசு ஈடுபடுகிறது. புரியாத பரமாத்ம தத்துவத்தை நமக்குப் புரிகிற விதத்தில் உபாஸிக்க முடிகிறது.

சகலமும் ஆன பரமாத்மா, நாம் அவரை எந்த ரூபத்தில் உபாஸித்தாலும் அதன் மூலம் அருள் புரிகிறார். படிப்படியாக நம் மனநிலையை உயர்த்துகிறார். கடைசியில் மனசே இல்லாத, மனசைக் கடந்த நிலை உண்டாகிறது. மனசு கடந்த அந்த நிலையிலேயே குணமும் ரூபமும் கடந்த பரமாத்மாவை உள்ளபடி அநுபவிக்க முடிகிறது. ஆரம்பத்தில் நமக்குப் பலவித மனோ விகாரங்கள் இருக்கும்போது, 'பரமாத்மா எல்லாம் கடந்தவர்' என்றால் அதில் பிடிப்புக் கொள்ள முடியவில்லை. பிறகு ரூபத்தில், குணத்தில் அவரை உபாஸித்து, அது முற்றிய நிலையில், எல்லாவற்றுக்கும் அதீதமாக பரமாத்மாவை அப்படியே அநுபவிக்க முடிகிறது. மஞ்சள் பழத்தை மஞ்சளாகவே பார்க்கிறபோது மேற்கொண்டு மனசுக்கு வேலை இல்லாததுபோல், பரமாத்மாவைப் பரமாத்மாவாகவே பார்க்கிறபோதும் மனசுக்கு வேலை இல்லாமல் போகிறது. உபாஸனையின்போது ''பரமாத்மாவை இப்படி இப்படி பாவனை செய்தால் அதற்கு இன்னின்ன மந்திரம் ஜபிக்க வேண்டும். இன்னின்ன ஆசாரம் வேண்டும்; இன்னின்ன பூஜா பத்ததி வேண்டும்'' என்று விதிகள் இருக்கின்றன. பாவனை போய், அவரை உள்ளவாறு அறிகிறபோது எந்த விதியும் இல்லை. செயலும் இல்லை. காரியமாகிற **உபாஸனை** இப்போதுதான் அநுபவமாகிற **ஞானம்** என்பதாகப் பழுத்து விடுகிறது.

இந்த ஞானம் நமக்கு ஆரம்பத்திலேயே வந்து விட்டதாகப் பாவனை செய்துவிடக் கூடாது. உபாஸனையே பெரும்பாலான ஜனங்களுக்கு ஞானம் பெற உபாயமாகும். திவ்விய மூர்த்திகள் நாமாகச் செய்கிற பாவனை மட்டுமல்ல. பரமாத்மாவே மகான்களுக்கும் ரிஷிகளுக்கும் இந்த ரூபங்கள் மந்திரங்கள் விதிகள் எல்லாவற்றையும் அநுக்கிரஹித்திருக்கிறார். அவற்றைச் சிரத்தையுடன் பின்பற்றினால் ஞானத்துக்கு வழி உண்டாகும்.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்


பரிசுத்தமான பாலினால் செய்யப்பட்டது
காட்பரிஸ் சாக்கலேட்
சுவையானது
மட்டுமல்ல...
போஷாக்கு
அளிக்கவும் வல்லது!
Cadbury's
MILK
CHOCOLATE
CADBURY'S MILK
Cadbury
Cadbury
பரிசுத்தமான பால்,
சத்துள்ள கோகோ,
இவையுடன் சர்க்கரையின்
இனிப்பு—அதுவே
காட்பரிஸ் மில்க் சாக்கலேட்!
காட்பரிஸ்
ஒவ்வொரு சாக்கலேட்டும்
பாலின் குணங்கள் அடங்கியது!



20. சிங்காரப் பூங்காவில்

சீதாவுக்கு உணர்வு வந்த போது பட்சிகளின் கானம் கலகலவென்று அவள் செவியில் கேட்டுக் கொண்டிருந்தது. இடையிடையே இலைகள் அசைந்தாடும்போது உண்டாகும் சலசலப்புச் சத்தமும் கேட்டது. இவற்றுடன் கண்ணனுடைய இடையில் அணிந்த மணிச் சதங்கைகள் குலுங்குவது போன்ற கிண்கிணிச் சத்தம் சில சமயம் கலந்து கொண்டிருந்தது. வேறு நினைவேயில்லாமல் அந்த இனிய சப்தங்களை அநுபவித்துக் கொண்டிருந்தாள். மூடியிருந்த கண்ணிமைகளைத் திறப்பதற்கு மனம் வரவில்லை.

கடிகாரத்தில் மணி அடிக்கும் சத்தம் அவளை அந்த இன்பமயமான நாத உலகத்திலிருந்து பூவுலகத்துக்குக் கொண்டு வந்தது. மணி ஆறு அடித்தது. உடனே அவளுடைய கண்ணிமைகள் திறந்தன. சுற்றுமுற்றும் மேலும் கீழும் அவள் கண்ட காட்சி அவளைத் திகைப்படையச் செய்தது. தந்தத்தைப்போல் வெண்மையும் பளபளப்பும் கொண்ட சலவைக் கல் சுவர்கள் நாலாபுறமும் அவளைச் சூழ்ந்திருந்தன. கீழ்த்தரையும் சலவைக் கல் பதித்ததுதான். ஆனால் அதில் பெரும் பகுதியைச் சித்திர விசித்திரமான இரத்தினக் கம்பளம் மூடியிருந்தது. மேலேயிருந்து கண்ணாடிக் குஞ்சலங்களுடன் கூடிய விதவிதமான வேலைப்பாடு அமைந்த 'குளோப்' விளக்குகள் தொங்கிக் கொண்டிருந்தன. பளிங்குச் சாளரங்களின் வழியாகச் சில சமயம் உள்ளே புகுந்த இனிய காலை நேரத்துக் காற்று அந்த விளக்குகளை ஆட்டி விட்டபோது கண்ணாடிக் குஞ்சலங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கிண்கிணிச் சத்தத்தை உண்டாக்கின.

அத்தகைய அறையின் மத்தியில் சப்ர மஞ்சக் கட்டிலில் பட்டு மெத்தை மேல் வெல்வெட் தலையணைகளுக்கிடையில் தான் படுத்திருந்ததைச் சீதா அறிந்தாள். சிறிது நேரம் ஒரே திகைப்பாயிருந்தது. முதல் நாள் இரவு நடந்த சம்பவங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக நினைவு வந்தன. நினைவு வந்த நிகழ்ச்சிகள் எல்லாம் உண்மைதான் என்பதை நிரூபித்துக் கொண்டு அவளுடைய முகத்தில் அடிபட்ட இடத்தில் 'விண் விண்' என்ற இலேசான வலி உணர்ச்சி இருந்து கொண்டிருந்தது. ஆகையால் அந்தச் சம்பவங்கள் எல்லாம் உண்மையேதான்!

தன்னைச் சில வடக்கத்தி மனிதர்கள் பலவந்தமாகக் காரில் ஏற்றிக் கொண்டு வந்ததும், சூரியா இன்னொரு காரில் தன்னைத் தொடர்ந்து வந்ததும், சூரியாவின் வண்டி யமுனைப் பாலத்தின் முனையில் தடுத்து நிறுத்தப்பட்டதும் உண்மைதான். வழியில் ஓர் ஊரில் தான் பசிக்கிறது என்று சொன்னதும், தனக்காகப் பூரி மிட்டாய், பால் வாங்கிக் கொண்டு வந்ததும் உண்மைதான். பாலைச் சாப்பிட்ட பிறகு அதில் மயக்க மருந்து கலந்திருக்குமோ என்ற சந்தேகம் உண்டானதும் வேறு வண்டிக்கு மாற்றப்பட்டதும் அதில் ஒரு ஸ்திரீ தனக்குத் துணையாக ஏறியதும்கூட உண்மையாகத்தான் இருக்க வேண்டும். அந்தப் பிரயாணம் இந்த அரண்மனையில் வந்து முடிவடைந்திருக்கிறது. ஆம்; இது யாரோ ஒரு மகாராஜாவின் அரண்மனை என்பதில் சந்தேகம் இல்லை. பலகணியின் வழியாகப் பார்த்தபோது வெளியிலே அழகான பூங்காவனம் தோன்றியது. செடிகளும், கொடிகளும், மரங்களும் பூத்துக் குலுங்கிய அந்தப் பூம்பொழிலில் ஆங்காங்கு பளிங்குக் கல் தடாகங்களும், தடாகங்களின் மத்தியில் முத்துத் துளிகளை வீசி விசிறிய நீர்ப் பொழிவுகளும் தோன்றின. பூங்காவனத்துக்கு அப்பால் அடுக்கடுக்கான மாடகூடங்களுடனும் கலசங்கள் ஸ்தூபிகளுடனும் மாளிகைகள் தென்பட்டன.

ஆம்; அது ஒரு மாமன்னர் வாழும் அரண்மனைதான். ஆனால் எந்த மன்னருடைய அரண்மனை? எதற்காகத் தன்னை இந்த அரண்மனைக்குப் பலாத்காரமாகப் பிடித்து வந்திருக்கிறார்கள்!

சுதேச சமஸ்தானங்களின் மகாராஜாக்கள் இந்தக் காலத்திலேகூடச் செய்யும் அக்கிரமமான காரியங்களைப் பற்றிச் சீதா எத்தனையோ கேள்விப் பட்டுத்தான் இருந்தாள். பம்பாய் நகரில் மலபார் குன்றில் நடந்த பயங்கரமான கொலையைப் பற்றித் தெரியாதா என்ன? எல்லாம் தெரிந்த

விஷயம்தான். அப்படி யாரேனும் ஒரு மகாராஜா தன் பேரில் மோகங் கொண்டு தன்னை இங்கே கொண்டு வரச் செய்திருப்பானோ? அவ்விதமானால் எந்த விதத்தில் தன்னுடைய கற்பைக் காப்பாற்றிக் கொள்ளுவது என்று சிந்தனை செய்தாள். பற்பல முறைகளைப் பற்றி யோசித்தாள். தப்பித்துக் கொள்ளப் பெருமுயற்சி செய்து பார்க்க வேண்டும்; முடியாமற்போனால் தற்கொலை செய்து கொள்ள வழி தேட வேண்டும். எந்த முறையைக் கைக்கொள்ளுவதாயிருந்தாலும் ஆரம்பத்தில் நயமாகவும் நல்லதனமாகவும் நடந்து கொள்ள வேண்டும்.



இந்தச் சமயத்தில் சமீபத்தில் காலடிச் சத்தம் கேட்கவே, சீதா பீதியடைந்து படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். அந்த அறையின் கதவு இலேசாகத் திறக்கப்பட்டபோது அவளுடைய நெஞ்சத்தின் கதவும் படபடவென்று அடித்துக் கொண்டது.

ஆனால் உள்ளே வந்தவள் ஒரு சாதாரணத் தாதிப் பெண் என்று பார்த்தவுடனே தெரிந்தது. வந்தவள் ஹிந்தி பாஷையில் மரியாதையாகவும் இனிமையாகவும் பேசினாள். பக்கத்து அறையில் முகம் கழுவிக் கொள்ளலாம் என்றும் காலைச் சிற்றுண்டி தயாராயிருக்கிறதென்றும் அவள் சொன்னதாகச் சீதா தெரிந்து கொண்டாள். அவளைப் பல கேள்விகள் கேட்கச் சீதா விரும்பினாள். ஆனால் பேசுவதற்கு நா எழவில்லை. துணிவும் ஏற்படவில்லை. பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணி முகம் கழுவிக் கொள்ளச் சென்றாள்.

காலைச் சிற்றுண்டி அருந்திய பிற்பாடும் தூக்க மருந்தினால் ஏற்பட்ட மயக்கம் முழுதும் தெளியவில்லை. மறுபடியும் படுக்கையில் படுத்தாள். அரைத் தூக்கமும் அரை விழிப்புமாய் இருந்த சமயத்தில் இரண்டு மூன்று குரல்கள் பேசிக் கொண்டே வருவது கேட்டது. குரல்களில் ஸ்திரீயின் குரல் ஒன்றும் இருந்தது. அவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்பித் தூங்குவதுபோலப் பாசாங்கு செய்து அசையாமல் இருந்தாள். வந்தவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். பேசியதெல்லாம் சீதாவுக்கு விளங்கவில்லை. ஆயினும், ''மகாராஜா'', ''மகாராணி'' என்னும் சொற்கள் நன்கு விளங்கின. ''தூக்க மருந்தின் சக்தி இன்னும் இருக்கிறது!'' என்று ஒரு குரல் கூறியது. அந்தக் குரல் முதல் நாள் இரவு தன்னை மோட்டாரில் ஏற்றி அழைத்து வந்தவனின் குரல் என்று சீதா அறிந்து கொண்டாள். ''இவள் என் சகோதரிதானா? நிச்சயமா?'' என்று ஒரு வாலிபனின் குரல் கேட்டது. ''ஆமாம், சந்தேகமில்லை. ராஜமாதாவின் கட்டளையை அப்படியே நிறைவேற்றி விட்டேன்!'' என்றது இன்னொரு குரல். முதிர்ந்த மாதரசி ஒருத்தியின் குரல், ''இந்தப் பெண் இந்த அரண்மனையில் உன்னைப் போலவே வளர்ந்திருக்க வேண்டியவள். விதியானது அவளை இத்தனை காலமும் பிரித்து வைத்திருந்தது'' என்று கூறியது. இதைக் கேட்ட சீதாவின் உடம்பு சிலிர்த்தது. உள்ளம் பரவசம் அடைந்தது. ஆயினும் அப்போது கண் விழித்து எழுந்திருக்க அவளுக்கு மனம் வரவில்லை. ஒரு வேளை இதெல்லாம் கனவோ, என்னமோ? கண்ணை விழித்தால் ஒரு வேளை மறைந்துவிடுமோ, என்னமோ? — இத்தகைய நெஞ்சக் கலக்

கத்தினால் மூடிய கண்ணைத் திறவாமல் இருந்தாள் சீதா.

சில நிமிஷங்களுக்கெல்லாம் அந்த மூதாட்டியின் குரல், ''கொஞ்ச நேரத்துக்குப் பிறகு மறுபடியும் வரலாம்!'' என்று சொல்லியது. இத்துடன், வந்திருந்தவர்கள் திரும்பச் சென்றார்கள். அவர்கள் கொஞ்ச தூரம் போவதற்கு அவகாசம் கொடுத்த பிறகு சீதா கண் விழித்துப் பலகணி வழியாகப் பார்த்தாள். கும்பலாகச் சென்றவர்களில் ராஜா மாதா யார் என்றும் ராஜ குமாரர் யார் என்றும் ஊகித்துத் தெரிந்து கொள்வதில் கஷ்டம் ஒன்றும் ஏற்படவில்லை.

தூக்கம் நன்றாகக் கலைந்து விட்டது. படுத்திருக்க முடியவில்லை. எழுந்து வெளியே வந்தாள். தான் படுத்திருந்த இடம் அரண்மனைப் பூங்காவனத்தின் மத்தியில் இருந்த மாளிகை என்று தெரிந்தது. பூந்தோட்டத்தைச் சுற்றி நாலுபுறத்திலும் இதைவிடப் பெரிய பெரிய மாட மாளிகைகள் காணப்பட்டன. மாளிகைகளுக்கு மத்தியில் தோன்றிய இடைவெளி வழியாகப் பார்த்தால் தூரத்தில் நீல நிறத்து ஏரி நீர் படர்ந்திருந்தது.

இது எந்த ஊர் அரண்மனை? எந்த ராஜாவின் சிங்கார மாளிகை? யார் வளர்த்த பூந்தோட்டம்?

இந்த மகிமையான ராஜரீகச் செல்வங்களில் எல்லாம் தனக்கும் உரிமை உண்டா? விதிவசத்தினால் இத்தனை காலமும் பிரிந்திருக்க நேரிட்டதா? ராஜ குலத்திலே பிறந்த ராஜகுமாரியா நான்? விதியின் விளையாட்டினால் ஏழைக் குடும்பத்தில் வளர்ந்து எளிய வாழ்க்கை நடத்தி எல்லையில்லாத கஷ்டங்களையெல்லாம் அநுபவிக்கும்படி நேரிட்டதா? அந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் இப்போது உண்மையிலேயே முடிவு வந்துவிட்டதா?

அந்த மூதாட்டி யார்? தன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற அன்னை தானா? பெரிய தாயார் அல்லது சிறிய தாயார் உறவு பூண்டவளா? அந்த அழகிய ராஜகுமாரன் தன்னுடன் பிறந்த சகோதரனா? .. ஆகா! இதெல்லாம் உண்மையாயிருக்க முடியுமா? சிறு வயதில் தான் கண்ட கற்பனைக் கனவுகள், கட்டிய ஆகாசக் கோட்டைகள், மனோராஜ்யங்கள் — எல்லாவற்றையும்விட இப்போது நடந்திருப்பது அதிசயமாயிருக்கிறதே?

அதிசயந்தான்! உலகத்தில் இந்த நாளிலும் எத்தனையோ அதிசயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த அதிசயங்களில் ஒன்று தன் வாழ்க்கையிலும் நடந்து விட்டிருக்கிறது. தான் ராஜ குலத்தில் பிறந்த ராஜ குமாரி என்பது உண்மைதான். இல்லாவிடில் தன்னை இங்கே கொண்டு வருவதற்கு



இவ்வளவு பிரயத்தனம் ஏன் செய்திருக்க வேண்டும்? அந்த மூதாட்டியும் ராஜகுமாரனும் பேசியதிலிருந்து அது நிச்சயம் என்று ஏற்படுகிறது.

இந்த விஷயம் எல்லாம் அவருக்குத் தெரியும் போது அவருடைய மனத்தின் நிலை எப்படியிருக்கும்? ராஜவம்சத்தில் பிறந்த ராஜகுமாரியைத் தான் மணந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்தது பற்றிப் பெருமை கொள்வாரா? தன்னை இத்தனை காலமும் இவ்வளவு கொடூரமாக நடத்தியது பற்றி வருத்தப்படுவாரா? இதற்குப் பிறகும் அவரையே கணவர் என்றும் கடவுள் என்றும் கருதித் தான் நடந்துகொள்ளப் போவது குறித்து மகிழ்ச்சியடைவாரா? இனிமேலாவது தன்னை அவமதித்து அலட்சியமாய் நடத்தாமல் அன்புடன் போற்றி அருமையாக வைத்துக் கொள்வாரா? நியாயமாகப் பார்த்தால் தன்னிடம் அவர் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும்! தனக்கு இழைத்த அநீதிகளுக்காகவும் கொடுமைகளுக்காகவும் வருந்திப் பச்சாத்தாபப்பட வேண்டும். இனிமேல் அப்படியெல்லாம் நடந்து கொள்ளுவ இல்லை என்று உறுதி மொழியும் கொடுக்க வேண்டும். ஆனால் அப்படி மன்னிப்புக் கோர வேண்டும் என்று தான் வற்புறுத்தப் போவதில்லை. அந்த மாதிரியெல்லாம் அவரை அவமானப்படுத்தத் தனக்கு ஒரு நாளும் மனம் வராது. அவர் ஏதாவது சொல்ல ஆரம்பித்தால் உடனே அதை நிறுத்தி அவருடைய வாயைத் தன்னுடைய கையினால் பொத்தி, ''வேண்டாம்! வேண்டாம்!'' என்று சொல்ல வேண்டும். எப்படியிருந்தாலும் அவர் தன்னுடைய கணவர் அல்லவா? ஏழையும் அநாதையாகவும் இருந்த தன்னை ஆசைப்பட்டு மணந்த மணவாளர் அல்லவா? செல்வத்திலே பிறந்து செல்வத்திலே வளர்ந்த லலிதாவை வேண்டாமென்று சொல்லித் தன்னை விரும்பிக் கல்யாணம் செய்து கொண்ட பிராணநாதர் அல்லவா அவர்?

லலிதாவுக்கு இதெல்லாம் தெரியும் போது என்ன நினைப்பாள்? சந்தோஷப்படுவாளா? அசூயைப் படுவாளா? தன் அருமைத் தோழிக்கு இத்தகைய அதிர்ஷ்டம் கிடைத்தது பற்றிச் சந்தோஷப்படத்தான் செய்வாள். ஆயினும் மனத்துக்குள்ளே கொஞ்சம் அசூயையும் இல்லாமற் போகாது. கல்யாணத்துக்கென்று காலணாச் செலவு செய்ய நாதியற்று இரவல் மணப் பந்தலில் மாலையிட்ட அநாதைச் சீதா ஒரு பெரிய சமஸ்தானத்தின் ராஜ குடும்பத்தில் பிறந்த ராஜகுமாரி என்று தெரிந்தால் கொஞ்சமாவது அசூயை உண்டாகாமல் இருக்குமா? மனுஷர்களுக்குச் சாதாரணமாக உள்ள பொறாமை லலிதாவுக்கு மட்டும் எப்படி இல்லாமற் போகும்?

அதெல்லாம் இருக்கட்டும், இப்போது இவர்களிடம் தான் எப்படி நடந்து கொள்வது? தன் விஷயத்தில் இவர்களுடைய உத்தேசம் என்னவாக இருக்கும்? எதற்காக இவ்வளவு மர்மமாகவும் பலவந்தமாகவும் தன்னைப் பிடித்துக் கொண்டு வரச் செய்திருக்கிறார்கள்? இவர்களிடம் கொஞ்சம் கண்டிப்பாகவும் ஜாக்கிரதையாகவும் பேச வேண்டும். தன்னை இங்கே கொண்டு வருவதற்கு அவர்கள் கையாண்ட முறையைத் தான் விரும்பவில்லையென்று காட்டிவிட வேண்டும். மேலே அவர்கள் என்ன சொன்னாலும் சுலபத்தில் இணங்கிவிடக் கூடாது. அவர்களுடைய நோக்கம் இன்னதென்று தெரிந்து கொண்டு அதற்குத் தக்கபடி யோசித்துப் பதில் சொல்ல வேண்டும். அடாடா! இந்த மாதிரி சமயத்தில் சூரியாவின் உதவியும் யோசனையும் தனக்குக் கிடைக்கக் கூடுமானால் எவ்வளவு நலமாயிருக்கும்? ஐயோ! பாவம்! சூரியா இப்போது எங்கே எந்த நிலைமையில் இருக்கிறானோ? ஒரு வேளை இன்னமும் என்னைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறானோ? அல்லது போலீஸார் அவனைப் பிடித்துக்கொண்டு விட்டார்களோ, என்னவோ!

இந்த அரண்மனையில் தன்னுடைய நிலைமை இன்னதென்று தெரிந்ததும் முதல் காரியமாகச் சூரியாவைப் பற்றி விசாரிக்க வேண்டும். விசாரித்து அவனுக்கு வேண்டிய உதவி செய்ய வேண்டும். பார்க்கப்போனால் அவனைத் தவிரத் தன்னிடம் உண்மையான அபிமானம் உள்ளவர்கள் வேறு யார்? அவனைப் போல் தனக்காகக் கஷ்ட நஷ்டங்களையெல்லாம் அநுபவிக்கத் தயங்காதவர்கள் வேறு யார்?

இவ்வாறெல்லாம் சிந்தனை செய்த வண்ணம் சீதா அந்த அழகிய அரண்மனை உத்தியான வனத்தில் உலாவித் திரிந்தாள். ஆங்காங்கு நின்று செடிகளில் பூத்துக் குலுங்கிய புஷ்பக் கொத்துக்களிலிருந்து ஒவ்வொன்றைப் பறித்து முகர்ந்தாள். மரக் கிளையின் மீது அமர்ந்து கீதமிசைத்த பட்சிகளை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றாள். நடந்து அலுத்துக் கால்களும் வலி எடுத்த பிறகு அந்தப் பூங்காவனத்தில் போட்டிருந்த சலவைக் கல் மேடை ஒன்றின் மீது உட்கார்ந்தாள். அவ

"இவரது திறமை திரை உலகின் பெருமை"


என்று ரசிகர்கள் போற்றி மகிழும்..

கே. பாலசந்தர்

கல்கி ஜனவரி 14

பொங்கல் மலரிலிருந்து

தொடர் சித்திரம் எழுதுகிறார்



ளுடைய உள்ளத்தின் கற்பனா சக்தி விசுவரூபம் எடுத்துப் பூமியையும் வானத்தையும் அளாவிக் கொண்டு நின்றது. அவளுடைய சித்தம் மரங்களின் உச்சி மீது உலாவி வானத்துப் பறவைகளுடன் குலாவி மேகமண்டலங்களில் திரிந்து இன்ப ஒளிக் கடலில் நீந்தி விளையாடியது. காலக் கணக்கெல்லாம் குழப்பமடைந்து, ஒரு நிமிஷ நேரம் நூறு வருஷங்களாக நீடித்தது. ஆயிரம் வருஷங்கள் அரை நிமிஷமாகப் பறந்தது. எத்தனை எத்தனையோ மனோராஜ்யங்கள் எழுந்து உடனே சிதைந்து விழுந்தன. மின்வல் நேரத்தில் ஆகாச வெளியில் அற்புதமான கோட்டைகள் தோன்றின. அதே வேகத்தில் அவை மறைந்தன. அன்பும் ஆசையும் இன்பமும் துன்பமும் குரோதமும் குதூகலமும் அலை அலையாகவும் மலை மலையாகவும் கொந்தளித்து மேல் எழுந்து நொடிப் பொழுதில் அடங்கின.

அவர்கள் மறுபடியும் வந்தார்கள். ராஜமாதா, ராஜகுமாரர், அவர்களுடைய அந்தரங்கப் பணியாள் — மூவரும் வந்தார்கள்.

சீதா அவர்களை எதிர்ட்டுப் பார்த்தாள். கண்கொட்டாத ஆவலுடன் மூவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

ராஜமாதாவின் முகத்தில் புன்னகை மலர்ந்திருந்தது.

"மகளே! உன்னைச் சிங்கார மாளிகையில் தேடிவிட்டு வருகிறோம். அதற்குள் தோட்டத்தைச் சுற்ற ஆரம்பித்துவிட்டாயா? மிகவும் சந்தோஷம். இந்த அரண்மனைத் தோட்டத்திலே உலாவ உனக்குப் பூரண உரிமை உண்டு. இந்த அரண்மனையிலே வசிப்பதற்கும் உனக்குப் பாத்தியதை உண்டு. இதையெல்லாம் கேட்க உனக்கு வியப்பாயிருக்கிறதா?" என்று ராஜமாதா கேட்டாள்.

சீதா மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை. எத்தனையோ கேள்விகள் கேட்க அவளுடைய உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது. ஆனால் பேச முடியாதபடி உணர்ச்சி அவளுடைய தொண்டையை அடைத்தது. மேலும் ராஜமாதாவிடம் ஹிந்தி பாஷையில் பேசுவதற்கு வேண்டிய சக்தி தன்னிடம் இருக்கிறதா என்பது பற்றிச் சந்தேகம் உதித்தது. டில்லியில் வசித்த காலத்தில் வேலைக்காரர்களுடன் பேசிப் பழகியதனால் ஏற்பட்ட ஹிந்தி பாஷை ஞானம் இந்த மகத்தான சந்தர்ப்பத்துக்குப் போதுமானதா?

"மகளே, ஏன் பேசாமலிருக்கிறாய்? நாங்கள் உனக்கு அன்னியர்கள் அல்ல. நான் உன்னுடைய சிறிய தாயார்;



"மாப்பிள்ளை நம்ம ஜானுகிட்டே 'என் இதயத்தின் இதயம், என் உயிரின் உயிர்' என்றெல்லாம் கொஞ்சுகிறாராம்!"

"'என் செல்வின் செல்வு! என் கடனின் கடன்' என்று மாப்பிள்ளையிடம் நான் கொஞ்சவா?"

இவன் உன்னுடைய சகோதரன். காலம் செய்த கோலத்தினால் இத்தனை நாளும் நீ வேறு எங்கேயோ வசிக்க நேரிட்டது!" என்றாள்.

சீதாவுக்கு ஒரே பிரமிப்பாயிருந்தது. வியப்பும் மகிழ்ச்சியும் போட்டியிட்டுக் கூத்தாடின. தான் எண்ணிய எண்ணமெல்லாம் உண்மைதான்; கனவுமல்ல, கற்பனையுமல்ல. ஏழைச் சீதா உண்மையில் ராஜ குலத்தில் பிறந்த ராஜகுமாரி! அற்புதம் என்றால் இது அல்லவா அற்புதம்? அதிர்ஷ்டம் என்றால் இதைப் போன்ற அதிர்ஷ்டம் வேறு என்ன உண்டு?

"மகளே! இன்னும் நீ பேசவில்லை. ஒரு வேளை உன்னை இங்கே கொண்டு வந்த முறை உனக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது! அதனால் கோபமாய் இருக்கிறாயாக்கும்! ஆனால் உனக்கு நான் பல தடவை சொல்லி அனுப்பியும் எங்களிடம் வரச் சம்மதிக்கவில்லை. ஆகையினால்தான் உன்னைக் கட்டாயப்படுத்தி அழைத்து வருவது அவசியமாயிற்று. நீயே யோசித்துப் பார்! உன் சகோதரனுக்குச் சீக்கிரத்தில் மகுடாபிஷேகம் நடக்கப் போகிறது. அதற்கு முன்னால் இந்தக் குடும்பத்தில் உனக்குச் செய்யப்பட்ட அநீதிக்குப் பரிகாரம் செய்துவிட வேண்டும் என்று இவன் பிடிவாதம்

பிடித்தான். அப்படியானால் உன்னைப் பலவந்தமாகக் கொண்டு வருவதைத் தவிர வேறு வழி என்ன?'' என்றாள் ராஜமாதா.

இந்தச் சமயத்தில் ராஜகுமாரரும் சம்பாஷணையில் சேர்ந்து கொண்டார்: ''சகோதரி! அம்மா சொல்வது சரிதான். தங்களைப் பலவந்தமாக இங்கே கொண்டு வரச் செய்ததற்குக் காரணம் என் ஆவலே. பிரயாணத்தின்போது ஏதாவது கஷ்டம் ஏற்பட்டிருந்தால் அதற்காக மன்னிக்க வேண்டும். மேலும் தாங்கள் இந்தியாவின் சுதந்திரத்துக்காகப் பெருமுயற்சி செய்து வருகிறீர்கள் என்று அறிவேன். அதற்குக் குந்தகம் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. உண்மையில் எனக்கே இந்த சமஸ்தானத்து ராஜாவாக முடிசூட்டிக் கொள்வதில் விருப்பமில்லை. வெள்ளைக்காரர்களைத் துரத்தியடித்துவிட்டு இந்தியாவின் சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டும் என்று ஆசையாயிருக்கிறது. அதற்கு இந்த யுத்த சமயத்தைக் காட்டிலும் நல்ல சமயம் கிடைப்பது அரிது. ஆனாலும் என் தாயாரின் வற்புறுத்தலுக்காகவே இந்த ராஜ்யப் பொறுப்பை ஒப்புக் கொள்ளப் போகிறேன். தாங்கள் என்னுடன் இருந்து ஒத்தாசை செய்ய வேண்டும். சகோதரியே! ஒத்தாசை செய்வீர்களா?''

சீதாவுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டமாதிரி இருந்தது. இது என்ன கூத்து? இவர்கள் என்னென்னவோ சொல்கிறார்களே? ஒரு வேளை இவர்கள் பேசுகிற ஹிந்தி பாஷை சரியாகப் புரியாததினால் இப்படியெல்லாம் நமக்குத் தோன்றுகிறதோ?

இதற்கு மேல் சும்மா இருக்கக் கூடாதென்று தீர்மானித்து, ''நான் ஓர் அபலை ஸ்திரீ. என்னால் உங்களுக்கு என்ன உதவி செய்ய முடியும்? மேலும் என்னுடைய புருஷரிடம் கேட்க வேண்டாமா? என்னுடைய பதிக்குத் தெரியாமல் என்னை நீங்கள் கொண்டு வந்ததே பிசகு!'' என்றாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட ராஜமாதாவும் ராஜகுமாரரும் மலை சரிந்து தலையில் விழுந்தவர்களைப் போல் பிரமித்துப் போய் நின்றார்கள். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள். பிறகு சற்று விலகி நின்ற மூன்றாவது ஆளின் முகத்தையும் பார்த்தார்கள்.

''நன்றாகப் படித்திருக்கிறாள் என்று நீர் சொன்னீரே? இந்த மாதிரி கொச்சையான ஹிந்தி பேசுகிறாளே?'' என்று ராஜ மாதா கேட்டாள்.

''கணவனைப் பற்றிப் பேசுகிறாளே? கல்யாணம் ஆகியிருக்கிறதா, என்ன?'' என்று ராஜகுமாரர் கேட்டார்.

மூன்றாவது ஆசாமி திகைத்த முகத்துடன் சீதாவைப் பார்த்து, ''உங்களுக்குக் கல்யாணம் ஆகியிருக்கிறதா?'' என்று கேட்டான்.

''ஏன் ஆகவில்லை? ரொம்ப காலத்துக்கு முன்பே ஆகிவிட்டது! குழந்தை கூட இருக்கிறது!'' என்றாள் சீதா.

ராஜகுமாரர், ''இதென்ன அதிசயம்? அம்மணி! தாங்கள் யார்? எந்த ஊர்?'' என்று கேட்டார்.

சீதாவுக்கு எதனாலோ கோபம் அதிகமாகிக் கொண்டிருந்தது.

''நான் யார் என்று தெரியாமலா என்னைப் பிடித்துக் கொண்டு வரச் செய்தீர்கள்?'' என்றாள்.

''அம்மணி! தயவுசெய்து சொல்லுங்கள். தங்கள் பெயர் என்ன? தங்களுடைய பெற்றோர்களின் பெயர் என்ன?'' என்று ராஜகுமாரர் கேட்டார்.

''தாராளமாகச் சொல்கிறேன். என் பெயர் சீதா! என் தந்தையின் பெயர் துரைசாமி ஐயர். என் தாயாரின் பெயர் ராஜம்மாள். என் கணவன் பெயர் சௌந்தர ராகவன். என் மாமியாரின் பெயர் காமாட்சி அம்மாள். என் அருமை மாமனாரின் பெயர் பத்மலோசன சாஸ்திரிகள். இன்னும் யார் யாருடைய பெயர் உங்களுக்குத் தெரிய வேண்டும்?''


''போதும், அம்மணி! போதும்! ஜியான்தாஸ்! இது என்ன மூடத்தனம்? இது என்ன அசம்பாவிதம்? இந்தத் தவறு எப்படி நேர்ந்தது?'' என்று ராஜகுமாரர் பணியாள் மீது எரிந்து விழுந்தார்.

ஜியான்தாஸ் தன் சட்டைப் பையிலுள்ள புகைப்படத்தை எடுத்துச் சீதாவுடன் ஒப்பிட்டு இரண்டு மூன்று தடவை உற்றுப் பார்த்தான்.

''தவறு நேர்ந்துவிட்டது! ஐயோ! தவறு நேர்ந்துவிட்டது. இந்தப் பெண்ணும் அவள் மாதிரியே இருக்கிறாள். ஆனால் அவள் அல்ல! அடாடா! எவ்வளவு பெரிய தவறு நேர்ந்துவிட்டது? இப்போது என்ன செய்வது?'' என்று ஜியான்தாஸ் கூடச் சேர்ந்து அங்கலாய்த்தான்.

சீதாவைப் பார்த்து ராஜமாதா, ''பெண்ணே! உண்மையாகச் சொல்லிவிடு! உன்னுடைய பெயர் தாரிணி இல்லையா?'' என்று கேட்டாள்.

அந்த ஒரே கேள்வியின் மூலம் சீதாவுக்குச் சகல விவரங்களும் தெரிந்துவிட்டன. அவளுடைய ஆகாசக் கோட்டை



களும் மனோராஜ்ய மாளிகைகளும் இடிந்து தகர்ந்து பொடிப் பொடி யாகிக் காற்றிலே பறந்து மண்ணிலே விழுந்து மண்ணோடு மண்ணாகி மறைந்து தொலைந்து போயின !

ஆகா ! இந்த மூழு மூடர்கள் தன்னைத் தாரிணி என்று தவருக எண்ணி இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள் ! இத்தனை நேரம் அது தெரியாமல் நாமும் ஏமாந்து ஏதேதோ கோட்டை கட்டிக் கொண்டிருந்தோமே?

ஆசாபங்கத்தினாலும் அருவருப்பினாலும் ஆங்காரத்தினாலும் சீதாவின் உள்ளம் எரிமலையாகிறது. எரிமலை கக்கும் தீயின் கொழுந்தைப் போல் வார்த்தைகள் சீறிக் கொண்டு வந்தன.

" நான் தாரிணி இல்லை. நான் உங்கள் தூர்த்த ராஜகுலத்தில் பிறந்தவளும் இல்லை. தளுக்கினாலும் குலுக்கினாலும் மூடப் புருஷர்களை மயங்க வைக்கும் மாயக்காரியும் அல்ல. நான் ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஏழைப் பெண். தாலி கட்டிய புருஷனோடு மானமாய் ஜீவனம் செய்து வந்தேன். உங்களுடைய மூழு மூடத்தனத்தினால் இந்த மாதிரி என்னை அலங்கோலப் படுத்திவிட்டீர்கள். இனி என்னுடைய கதி என்ன?" என்று சீதா அலறினாள்.

"பெண்ணே! வீணாகக் கத்தாதே ! நடந்தது நடந்து விட்டது. நீ இருந்த இடத்தில் உன்னைத் திருப்பிக் கொண்டு போய் விட்டுவிடச் சொல்கிறேன் !" என்றாள் ராஜமாதா.


" உங்களுக்கு என்ன ? திருப்பிக் கொண்டு போய் விடுகிறேன் என்று சுலபமாய்ச் சொல்லிவிடுகிறீர்கள். இப்படித் தெறிகெட்டு எங்கேயோ போய் விட்டுத் திரும்பி வந்தவளை அவர் திருப்பிச் சேர்த்துக் கொள்ள வேண்டாமா ? நீங்கள் மகா பாவிகள் ! இரக்கமற்ற சுயநலப் பிண்டங்கள் ! உங்களுடைய வம்சம் அடியோடு நாசமாகிப் பூண்டற்றுப் போகும்......"

அதற்கு மேல் அங்கே நிற்க விரும்பாமல் ராஜமாதாவும் ராஜகுமாரரும் விரைந்து சென்றார்கள். போகும் போதே அவர்கள் அந்த மூன்றாவது ஆளை ஏதோ பலமாகக் கண்டித்துக் கொண்டு போக, அந்த ஆள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டும் சமாதானம் சொல்லிக் கொண்டும் போனான்.

அவர்கள் கண்ணுக்கு மறைந்ததும் சீதா விம்மி அழத் தொடங்கினாள். இதயத்தின் அடிவாரத்தில் வெகுகாலமாக மறைந்து கிடந்த துக்கம் பொங்கிப் பீறிக்கொண்டு வந்தது. கொதிக்கின்ற கண்ணீர் தாரை தாரையாகப் பெருகிக் கன்னத்தைச் சுட்டது. பழைய காலத்துக் காவியங்களிலே வரும் கற்பரசிகளைப் போலச் சீதாவுக்கு மட்டும் சக்தியிருந்தால் அந்த மூன்று பேரையும் அந்த க்ஷணமே சுட்டு எரித்துச் சாம்பராக்கியிருப்பாள் ! தண்டனை அளிக்கும் அதிகாரம் உடைய அரசியாயிருந்தால் தாரிணியைச் சுண்ணாம்புக் காளவாயில் போடும்படி கட்டளை யிட்டிருப்பாள்.

ஆகா! எங்கே போனாலும் அந்தப் பாதகி அல்லவா தன்னுடைய சத்துருவாக வந்து சேருகிறாள்? தன்னுடைய ஆசைகளைப் பங்கமுறச் செய்து தன்னுடைய வாழ்க்கையைப் பாழாக்குவதற்கென்றே தாரிணி பிறந்தவள் போலும் ! அடி! மோசன உருவங்கொண்ட பயங்கர ராட்சஸியே! கலிகால சூர்ப்பணகை என்றால் உனக்கல்லவா தகும் ? உன்னை மானபங்கம் செய்து புத்தி புகட்ட எந்த வீரபுருஷனாவது முன்வரமாட்டானா ? சூரியாவிடம் சொன்னால் அவனாவது செய்ய மாட்டானா? அப்படி யாரும் உன்னைப் பழி வாங்க முன்வராவிட்டால் அடுத்த முறை உன்னைப் பார்க்கும்போது நானே விஷம் கொடுத்துக் கொன்றுவிடுகிறேன், பார் !

அவமானத்துக்கும் ஏமாற்றத்துக்கும் உள்ளான சீதாவின் மனத்தில் இது போன்ற பயங்கர எண்ணங்கள் குடி கொண்டன ! (தொடரும்)



" உங்கப்பா கிட்டே 'ரகசியம்'னு ஒரு வார்த்தை காதிலே போட நெருங்க முடியாது !"

ராஜாஜியின் ஜெயில் டைரி

1922 ஜனவரி, 14உ

சனிக்கிழமை. நேற்று இரவும் ஆஸ்துமா நோய் வந்து விட்டது. என் பக்கத்து அறையில் வெங்கட்டப்பா என்பவரும் அலிக்குட்டி என்பவரும் தனிச் சிறைத் தண்டனை பெற்றுத் தனியாக அடைக்கப்பட்டிருக்கிறார்கள். வெங்கட்டப்பாவுக்குக் கோர்ட்டில் தண்டனை கொடுக்கும்போது நியாயாதிபதி தனிச் சிறைத் தண்டனை என்று கூறி விட்டார். ஆனால் அலிக்குட்டியையோ சிறை அதிகாரிகளே, சிறை விதியை மீறியதாகக் கூறி இப்படித் தனிச் சிறையில் அடைத்து வைத்திருக்கிறார்கள். அவர் கொலைக் குற்றம் செய்தவராம். அதற்காகப் பத்து வருஷக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார். அது போதாதென்றுதான் இந்தத் தனிச் சிறை வாசம். அவர்களுடன் தனிச் சிறையிலிருக்கிறேன். எங்களுக்கிடையே உள்ள வித்தியாசம் எல்லாம் அவர்கள் கயிறு திரிக்க வேண்டும், நான் கயிறு திரிக்க வேண்டாம் என்பது ஒன்றே. இதில் ஏதோ தவறு இருப்பதாக எண்ணுகிறேன். அதனால் சிறை அதிகாரியிடம் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். எந்தத் தண்டனையைக் கொடுத்தாலும் அதை ஏற்றுக்கொள்ளவே இங்கு வந்திருக்கிறோம். ஆயினும் 'பிழை' என்று பின்னால் சமாதானம் கூறுவதற்கு இடம் தரலாகாதல்லவா? அலிக்குட்டி சர்க்காருக்காகத் தம்முடைய அறையில் கயிறு திரிக்கிறார். நான் எனக்காக என்னுடைய அறையில் நூல் நூற்க ஆரம்பிக்கப் போகிறேன்.

வெளி உலகத்திலிருந்து சில வதந்திகள் வந்து எட்டுகின்றன. வெறும் நிழல்களை வைத்து எவ்வளவு தூரம் பொருள்களை நிதானிக்க முடியுமோ, அவ்வளவு தூரம்தான் சிறைக்கு எட்டும் வதந்திகளை வைத்து உண்மைகளை நிதானிக்க முடியும்.

சென்ற பத்து நாட்களாகச் சென்னை போலீஸ் படையினர் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்களாம். வேல்ஸ் இளவரசர் வந்த தினத்தன்று பூரணமான ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டதாம். அன்று சென்னை நகரம் முழுவதும் நிசப்தமாகவும் இருட்டாகவும் இருந்ததாம். தெருக்கள் மூலைகளிலெல்லாம் பிரசங்கங்கள் நடைபெற்றனவாம். சர்க்கார் சார்பாக யாரோ ஒரு செட்டியார் சுயராஜ்யத்தை இழிவாகப் பேசவே சிறிது குழப்பம் உண்டாயிற்றாம். உடனே ராணுவத்தார் வந்து துப்பாக்கியால் சுட்டார்களாம். ஆறு பேர் இறந்து விட்டார்களாம். வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் யுத்தம் நடக்கிறதாம். சர்க்கார் தரப்பில் அதிக நஷ்டமாம். மலையாளத்தில் கலகங்கள் ஒயவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

டாக்டர் ராஜனும், மற்றவர்களும் வந்து காத்துக் கொண்டிருப்பதாகப் பிற்பகல் 3—15 மணிக்குச் சேதி சொன்னார்கள். அவருடன் பேசிக் கொண்டிருந்தேன். அவருடன் என் மகனும் சகோதரரும் வந்திருந்தார்கள். அவர்கள் சந்தோஷமாயும் தைரியமாயும் காணப் பட்டார்கள். நான் விரும்பினதெல்லாம் அவ்வளவுதான். சேலத்தில் மறியல் வேலை நடப்பதாகச் சொன்னார்கள்.



அது கேட்கச் சந்தோஷமாயிருந்தது. ஆனால், பல கடைகளை எரித்துவிட்டார்கள் என்பதைக் கேட்க என் மனம் அதிகமாக வேதனை அடைந்தது. வாசுதேவய்யா பரிசுத்தமானவர். அவருக்கு ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை கொடுத்திருந்தார்கள். அனந்தாச்சாரி விசாரணைச் சிறையில் இருக்கிறார். திருப்பத்தூரில் சட்டத்தை மீறியதற்காக ராமகிருஷ்ணய்யாவும் முஸ்லிம் ஒருவரும் ஆறு மாத வெறுங்காவல் தண்டனை பெற்றிருக்கிறார்கள். இதெல்லாம் நல்ல செய்திகள்தான். ஆனாலும் இவை

போதுமா? ஏராளமான ஜனங்கள் வந்து சிறைகளை நிரப்ப வேண்டாமா? நாம் தமிழ் நாட்டில் பயனுறச் செய்யக் கூடிய காரியமும் அது ஒன்றுதான்.

என்னை மறுபடியும் மோதிலால் நேருவுடன் சேர்ந்து காங்கிரஸ் மகாசபையின் பொதுக் காரியதரிசியாக நியமித்திருக்கிறார்களாம். மோதிலால் நேரு சிறையில் இருப்பதால் அவருக்குப் பதிலாக வி. ஜே. படேலும், நான் சிறையில் இருப்பதால் எனக்குப் பதிலாக டாக்டர் ராஜனும் காரியதரிசி வேலையைப் பார்க்கிறார்களாம். காந்தியடிகள் கூட்டங்கள் கூட்டாமல் காரியங்களை நடத்துவதற்காகச் 'சர்வாதிகாரி'யாக நியமிக்கப் பட்டிருக்கிறாராம். அது நல்லதுதான். ஆனால் அவர் சிறைக்குச் சென்றால் அவருக்குப் பின்னால் அந்த வேலையை நடத்தக் கூடியவர் யார்? அப்படிப் பட்டவரைக் கண்டுபிடிப்பது கஷ்டமாகவே இருக்கும். கஷ்டப்பட்டாலும் கூடக் கிடைப்பது அரிதுதான். பலதரப்பட்ட கருத்துக்களை உடையோரின் மகாநாடொன்று பம்பாயில் நடக்கப் போகிறதாம். சங்கரன் நாயர் தலைமை வகிப்பாராம். காந்தியடிகளும் அதற்குப் போவாராம். அத்தகைய கூட்டத்தால் யாதொரு பயனும் உண்டாகப் போவதில்லை. நம்முடைய கோரிக்கைகளைக் குறைப்பதையும் காங்கிரஸ் திட்டத்தை நிறுத்தி வைப்பதையும் தவிர வேறு என்ன காரியத்தை அவர்கள் சாதிக்கப் போகிறார்கள்? வெற்றி கிடைக்கும் என்ற இந்தச் சமயத்தில் கோரிக்கைகளைக் குறைப்பதும், திட்டத்தை நிறுத்தி வைப்பதும் பெரும் தவறாகும்.

வேல்ஸ் இளவரசர் வந்த சமயத்தில் சென்னையில் ஜனங்கள் தவறாக நடந்து கொண்டதாக ராஜன் கூறுகிறார். அதைக் கேட்க எனக்கு வருத்தமாயிருக்கிறது. பலாத்காரம் தலைதூக்கி ஆடிற்றாம். ஹர்த்தால் வெற்றி பெற்ற போதிலும், அதில் ஓரளவு பயமுறுத்தலும் பலாத்காரமும் இருந்தனவாம். இவை இன்றியே இதற்கு முன் பல தடவைகளில் எளிதில் ஹர்த்தால் வெற்றிகரமாக நடந்திருப்பதால் இப்பொழுது இப்படி நடந்தது என்பதைக் கேட்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இந்தத் தடவை ஜனங்களுக்கு எதிராகச் சர்க்கார் ஏஜண்டுகள் வேலை செய்தார்களாம். அதனால்தான் ஜனங்கள் அதை எதிர்க்கும் பொருட்டுத் தவறான பாதையில் இறங்கி விட்டார்களாம். வெல்லிங்டன் சினிமாக் கொட்டகையில் ஆங்கிலக் கொடி பறக்கவே ஜனங்கள் பெருந் திரளாகப் போய் அதைத் தாக்கினார்களாம். ஆனால் போலீஸாரும் போர்வீரர்களும் ஒழுங்காக நடந்து கொண்டார்கள் என்று டாக்டர் ராஜன் கூறுகிறார். ஆனால், சினிமாக் கம்பெனியைச் சேர்ந்தவர் ஒருவர் கைத்துப்பாக்கியால் சுட்டாராம். அதன் காரணமாகத் திருவல்லிக்கேணியைச் சேர்ந்த முஸ்லீம் ஒருவர் இறந்து விட்டாராம்.

''சுயராஜ்யா''ப் பத்திரிகை நடந்து கொண்டிருப்பதாகவும் சந்தாதார் எண்ணிக்கை பெருகி இருப்பதாகவும் அறிந்தேன். ''இண்டிபெண்டண்ட்'' பத்திரிகை நின்று விட்டதாம். மகாதேவ தேசாய்க்கு 18 மாத தண்டனை கிடைத்திருக்கிறதாம். தேவதாஸ் கையெழுத்து வாரப் பத்திரிகை நடத்துவதாகவும் பிரதிகள் செய்ய நூற்றுக் கணக்கான தொண்டர்கள் உதவி செய்வதாகவும் அறிகிறேன்.

திரு ஆண்ட்ரூஸ் மலையாளத்துக்குச் சென்றுவிட்டுக் காந்தியடிகளிடம் திரும்பிப் போயிருக்கிறாராம். வாரி குன்னத்து மகமது ஹாஜியைப் பிடித்து விட்டார்களாம். அவரைப் பிடித்து விட்டால் அத்துடன் கலகம் முடிந்தமாதிரிதான்.

சிறையைப் பார்வையிடுவதற்காகச் சர்க்காரால் நியமிக்கப் பட்டிருக்கும் உத்தியோகப் பற்றற்ற கனவான் திரு துரைசாமி அய்யா என்பவர் அப்பழுக்கில்லாத உடையை அணிந்து கொண்டு வந்தார். நான் அப்பொழுதுதான் டாக்டர் ராஜனிடம் பேசிவிட்டு என்னுடைய அறைக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். அவர் என்னுடைய உணவு பற்றியும் ஆரோக்கியம் பற்றியும் விசாரித்தார். தனிச் சிறையில் அடைத்து வைத்திருப்பதைப் பற்றிக் கூறி, இவ்விதமாக வேண்டுமென்று செய்கிறார்களா அல்லது தவறுதலாகவா என்று விசாரிக்குமாறு சொன்னேன். விஷயத்தைக் குறித்துக் கொண்டேன் என்று கூறினார். அவரால் ஒன்றும் செய்ய முடியாது என்று எண்ணுகிறேன்.

டாக்டர் ராஜன் மூலம் வெளி உலகத்தை எட்டிப் பார்க்க முடிந்தது. ஆனால் அது என் மனத்துக்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை. வெற்றிக்குச் சமீபமாக வந்து விட்டதையும் அதை அடையச் செய்ய வேண்டிய ஒரு பெரு முயற்சியையும் ஜனங்கள் இன்னும் உணர்ந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். போதுமான தியாகம் செய்வதற்கு வேண்டிய ஆற்றலையும் அறிவையும் அவர்களுக்கு அருளுமாறு ஆண்டவனை வேண்டுகிறேன். ஆந்திரர்களைப் பற்றிக் கேள்வியுறும் செய்திகள் உற்சாகமூட்டுவதாக இருக்கின்றன. அவர்கள் சில தாலுக்காக்களில் வரிகொடா இயக்கத்தை ஆரம்பித்து விட்டதாக அறிகிறேன்.

(தொடரும்)



புதிய முச்செயல் புரியும் டெட்

புதிய டெட்—வெண்ணிறப் பவுடர்—அதிக வெண்மையான சலவைக்கு தரமுயர்ந்த வெண்மை தரும் சாதனம் கொண்டது.

புதிய டெட்—அதிக சலவைத் திறன் கொண்டது. மறைந்துள்ள அழுக்கைக்கூட முற்றிலும் அகற்றுகிறது; வண்ணத் துணிகளை அதிக பிரகாசமாக ஒளிவீசச் செய்கிறது.

புதிய டெட்—இதன் நுரை வளத்தில் மிருதுத்தன்மை தரும் தனிப்பட்ட சாதனம் உள்ளது. இதனால் உங்கள் துணிகளுக்குப் பாதுகாப்பு கிடைக்கிறது; கைகளுக்கு மிருதுவானது!

புதிய சைஸ்கள்: டெட் 200, 400, 600, 800, 1000 கிராம் பெட்டிகளிலும், டெட் சாம்பிள் பைகளிலும் கிடைக்கிறது.

NEW!
TRIPLE ACTION
white
det
WASHES WHITEST

Shilpi HPMA 42A/72 tam

எம்.ஜி.ஆரா? கருணாநிதியா?

அஜீத்தா? டோனியா?

உலக அரங்கில் ஹாக்கியில் நமக்கு ஏற்பட்டுள்ள தலைகுனிவை ஈடு செய்யும் விதமாக நமது கிரிக்கெட் கலைஞர்கள் அயல்நாடுகளில் இரு டெஸ்ட் தொடர்களில் வென்று நம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினர். அயல்நாட்டினர் கண்டு களித்த அந்த ஆட்டத் திறனை நாம் பார்க்கும் வாய்ப்பு தற்போது இங்கிலாந்து கோஷ்டியின் இந்திய விஜயத்தின்போது கிடைக்கப் போகிறது.

வரப் போகிற இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட்களில் வெற்றி அஜீத் வாடேகருக்கா? டோனி லூயிஸுக்கா? இந்த ஜோசியத்தில் ஈடுபடாமல் இரு காப்டன்களையுமே அட்டைப் படத்தில் 'மோத' விட்டு விட்டோம்! அவர்களோ குஷாலாகச் சிரிக்கிறார்கள்! — ஆசிரியர்

படங்கள்:
1. வாடேகரும், கவாஸ்கரும்
2. கிரிக்கெட் மைதானத்தில் வாடேகர்
3. வாடேகர் - ரேகா தம்பதி



தமிழக அரசியலில் 'கருணாநிதியா? எம். ஜி. ஆரா' என்று பரபரப்பு; போட்டி, பூசல். ஆனால் இன்னும் சில வாரங்களுக்கு மக்கள் 'அஜீத்தா, டோனியா?' என்றுதான் கேட்பார்கள் - சூடான அரசியலைக்கூடப் பின்னுக்குத் தள்ளிவிடும் கிரிக்கெட் ஜுரம் மக்களை ஆட்கொள்ளும்போது!

அன்று அன்னிய மண்ணில் ஆடப் புறப்பட்டபோதும் தலைமை வகிப்பது 'பட்டோடியா, வாடேகரா?' என்று பிரச்னை எழுந்தது. இதை நிர்ணயிக்கும் பொறுப்பு கிரிக்கெட் செலக்டர்களான விஜய் மர்ச்சென்ட் தலைமையில் இயங்கும் குழுவுக்கு இருந்தது. விஜய் மர்ச்சென்ட் தைரியமாக இளைஞரான வாடேகரைத் தேர்ந்தெடுத்துப் புரட்சி செய்தார்.

அயல் மண்ணுக்கு விமானமேறிய இந்திய இளம் கோஷ்டியினர் மாபெரும் இரு வெற்றிகளைச் சம்பாதித்தது இமாலய சாதனைதான்! வெற்றி அவர்களுக்கு மட்டுமா? செலக்ஷன் சேர்மன் விஜய் மர்ச்செண்டுக்கும் வெற்றி!

இப்பொழுது இந்தியாவுக்கு ஆட வந்திருக்கும் இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியினரும் இளம் ஆட்டக்காரர்களே. சராசரி வயது 29. இளமார்கன் கௌண்டி காப்டன் டோனி லூயிஸ் முதல் தடவையாக அயல் மண்ணில் இங்கிலாந்து கோஷ்டியின் காப்டனாக ஆட வந்திருக்கிறார்!

இந்திய செலக்ஷன் கமிட்டி சேர்மன் கோபிநாத் அன்னிய மண்ணில் மாபெரும் இரு வெற்றிகளைக் கண்ட வாடேகரையே மீண்டும் இந்திய காப்டனாகத் தேர்ந்தெடுத்துச் சிக்கலில்லாமல் ஏகோபித்த முடிவைக் கண்டிருக்கிறார்.

இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியிலே டெஸ்ட் அனுபவம் மிகுந்தவர்; 36 தடவை டெஸ்ட்கள் ஆடிப்பண்பட்டவர் ஆலன் நாட். இவர் விக்கெட்கீப்பர் — பாட்ஸ்மன்! இவருக்குப் பள்ளி ஆசிரியர்கள் கிரிக்கெட்டையே வாழ்க்கையாகக் கொள்ளக் கூடாது என்று புத்திமதி சொன்னார்களாம்! ஆனால் இவரது கிரிக்கெட் மோகம் புத்திமதியை ஏற்கவில்லை.

விஜய்யும் கிருஷ்ணராஜும் பம்பாய் பார்டா புதிய உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தனர். அந்தப் பள்ளியின் பிரின்ஸிபால் விஜய்யிடம், ''உங்கள் குடும்பப் பேர் என்ன?'' என்று கேட்டார்.

''அப்படி ஒன்றும் எங்களுக்குக் கிடையாது!'' என்றான் மாணவன் விஜய்.

''என்ன உளறுகிறாய்? உனக்கு நிச்சயம் குடும்பப் பெயர் இருக்கத்தான் செய்யும்'' என்றார் பள்ளி பிரின்ஸிபால். ''உங்கள் குடும்பம் எப்படி வழங்கப்படுகிறது?''

''தாக்கர்ஸே!'' என்றான் சகோதரன் கிருஷ்ணராஜ்.



அந்தச் சமயத்தில் விஜய், ''தாக்கர்ஸே என்பது எங்கள் முப்பாட்டனரின் பெயர். அது எப்படிக் குடும்பப் பெயர் ஆகும்?'' என்று வாதிட்டான்.

''உங்கள் சொந்தக்காரர்கள் என்ன தொழில் செய்கிறார்கள்?'' என்று பிரின்சிபால் கேட்டார்.

''ஜௌாத் மெர்ச்சண்ட்ஸ்!'' (துணி வியாபாரிகள்!)

''அப்படி யென்றால் உங்களுக்குக் குடும்பப் பெயர் மெர்ச்செண்ட் என்று போட்டு விடுகிறேன்!''என்றார் அந்தப் பள்ளி பிரின்சிபால்.

விஜய் மர்ச்செண்ட் செலக்ஷன் கமிட்டியின் சேர்மனாக இருந்து வாடேகரைக் காப்டனாக்கினார். அன்னிய மண்ணில் — மேற்கிந்தியத் தீவிலும் இங்லொந்திலும் அவர் இரு வெற்றிகளைச் சம்பாதித்துத் தந்ததும் மகிழ்ச்சியோடு மர்ச்செண்ட் சேர்மன் பதவியிலிருந்து ஓய்வுபெற்றார். தேசியப் பாதுகாப்பு நிதிக்காக நடந்த கிரிக்கெட் மாட்சுக்குப் பிறகு ஓர் அழகான மட்டையில் மிகப் பெரிய மனிதர்களின் கையெழுத்துக்களைப் பொறிக்கச்செய்து அந்த மட்டையை வாடேகருக்குப் பரிசளித்து மகிழ்ந்தார். காப்டன் வாடேகருக்கு அந்தப் பரிசு விலை மதிக்கவொண்ணாத பொக்கிஷமாகத் திகழ்கிறது.

பம்பாய், எல்பின்ஸ்டன் கல்லூரி விருந்தான மாணவரான வாடேகருக்கு, அவரது 'விசிறி'யான மாணவி ரேகாவின் மீது முதல் பார்வையிலேயே காதல் முகிழ்த்தது. அவர்கள் இருவரும் அடிக்கடி அருகில் உள்ள உடுப்பி ஹோட்டலில் சந்தித்து மனம் விட்டு அளவளாவினார்கள். அடடா! நம் உடுப்பி ஹோட்டல்கள் மசால் தோசை மட்டுமா வழங்குகின்றன? காதலுக்கும் அல்லவா கை கொடுக்கின்றன!

ஒரு நாள் ரேகா தன் கல்லூரியில் வாலி பால் விளையாடிக் கொண்டிருந்தாள். தம் அருமைக் காதலியைக் காண வந்த வாடேகர் அன்று குளிர் அதிகமாக இருக்கவே, தம் 'பிளேஸர்' கோட்டையே அவளுக்குப் போர்த்தி மகிழ்ந்தார். அவரது விசிறி ரேகாவும் அந்தக் கோட்டைக் 'காதல் பரிசாக' ஏற்றுக்கொண்டாள். ரேகாவின் அதிர்ஷ்டம், அவள் பொற்கரம் பற்றிய அதே வருஷத்தில் தான் வாடேகர் முதல் டெஸ்டில் அடியெடுத்து வைக்கும் பாக்கியம் பெற்றார்.



ரேகா, பம்பாயில் நடக்கும் அத்தனை மாட்சுகளுக்கும் கணவரின் ஆட்டத்தைக் காணத் தவறாமல் செல்லுவாள். அவளுக்குப் பதின்மூன்று ரன்களை வாடேகர் தாண்டும் வரை ஒரே பரபரப்பு! பதின்மூன்று என்ற எண் அவளுக்கு அலர்ஜி. தனக்குத் திருமணம் நடந்ததே பதின்மூன்றும் தேதிதான் என்பது அவளுக்கு அப்போது மறந்துவிடும்போலும்! தான் ரேடியோவில் ரன்னிங் காமெண்ட்ரி கேட்டால் தன் கணவர் 'அவுட்' ஆகிவிடுவார் என்று ஒரு விநோத நம்பிக்கை ரேகாவுக்கு! தன் கணவர் 1941 ஏப்ரல் 1ந் தேதி 'முட்டாள்' தினத்தில் பிறந்தும், அவர் முட்டாளாகாமல் பெரிய வெற்றிகளை நம் நாட்டுக்குத் தேடித் தந்திருப்பதைப் பார்த்தும் கூட அவளுக்கு இது போன்ற விசித்திர நம்பிக்கைகளை



''என்னப்பா! இந்தப் பல்லவா பஸ் டெர்மினஸ் வரைக்கும் போய்ச் சேருமா; சேராதான்னு கொஞ்சம் ஜோசியம் சொல்லேன்!''

விட்டொழிக்க முடியவில்லை. பக்கத்து வீட்டுக் காரர்கள் அவள் கணவரின் கிரிக்கெட் ஆட்டத்தைப் பற்றி அடிக்கடி அவள் மனம் புண்படும்படி பேசி வந்தார்களாம். அவர்களே அயல் நாடுகளில் இரண்டு டெஸ்ட் தொடர்களில் நமது கட்சியினர் வெற்றி பெற்ற பிறகு வாடேகரை 'ஓகோ' என்று புகழ்ந்து ரேகாவைக் கொண்டாடத் தொடங்கினராம்!

பம்பாய் தாதர் - சிவாஜி பார்க் அருகில் வசிக்கும் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர் வாடேகர். அவரது தந்தை லக்ஷ்மண் பாஸ்கர் வாடேகர் ரயில்வே கணக்குப் பிரிவில் ஓய்வு பெற்ற கிளார்க். அவரது அன்னை மனோரமா கடவுள் பக்தி மிகுந்தவர். வாடேகரும் அன்னையிடம் தேவதா விசுவாசம் பாராட்டுவார். இங்கிலாந்தில் ஓவல் டெஸ்டில் அபித் அலி வெற்றி 'ஷாட்' அடிப்பதை ரேடியோவில் கேட்டு வாடேகர் குடும்பம் ஆனந்தத்தில் கூத்தாடிக் களித்தது. மகிழ்ச்சிப் பூரிப்பில் மக்கள் கூட்டமே ஆரவாரத்தோடு பட்டாசுகளை வெடித்துக் கொண்டு அவர்களது வீட்டை நோக்கிப் படையெடுத்தது.

முப்பத்தொரு வயது வாடேகரை அவரது நண்பர்கள் 'புரொபஸர்' என்று அன்புடன் அழைக்கிறார்கள். ஏகாந்தத்தை விரும்பும் அவரது இயல்பும் ஒதுங்கிப் போகும் தன்மையும் அவருக்கு இந்தப் பட்டத்தைத் தேடித் தந்துள்ளன. கிரிக்கெட் ரசிகர்கள் அவரை 'இந்தியாவின் நீல் ஹார்வி' என்று வர்ணிக்கிறார்கள். ஸ்லிப் பீல்டிங்கில் இவர் சூரர்.

ஒரு கிரிக்கெட் கோஷ்டியைச் சிறக்க வைக்கவும் 'தலை குனிய வைக்கவும் காப்டனால் முடியும். முதல் தடவையாக வாடேகர் அன்னிய மண்ணுக்கு இளம் கோஷ்டியுடன் ஆடச் சென்றார். எதிர்த்த குழுவிலே உலகின் தலைசிறந்த ஆட்டக்காரர் என்று பெயர் பெற்ற காரி சோபர்ஸ் காப்டனாக இருந்தார். தம் தலைமையில் உள்ள இளைஞர்களின் திறமையை நன்கு பயன்படுத்திச் செல்வாக்கைப் பெருக்கினார் வாடேகர். பல பயங்கர பீல்டிங் இடங்களில் தாமே நின்று மற்ற நம் சகாக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார்.

வெற்றியின் சிகரத்தை எட்டிய போதிலும் வாடேகர் அடக்கத்துடன் விளங்குவதை அவருக்கும் பத்திரிகை நிருபருக்கும் இடையில் நிகழ்ந்த உரையாடல் மூலம் உணரலாம்.

கேள்வி: மேற்கிந்தியத் தீவில் இந்தியாவின் வெற்றிக்குக் காரணங்கள் என்ன?

காப்டன் வாடேகர் பதில்: வெங்கட், பிரஸன்னா, பேடி, அபித் அலி ஆகிய அனைவரும் வெகு நன்றாகப் பந்து வீசினார்கள். பீல்ட் அமைப்புக்கு ஏற்பப் பந்து வீசியது குறிப்பிடத் தக்கது. முதல் டெஸ்டில் சர்தேசாயின் அபாரமான இரட்டை சதம் நம்பிக்கை இழந்த இந்தியக் கோஷ்டிக்கு டானிக்காக அமைந்தது. இளைஞர்கள் ஸோல்கரும், கவாஸ்கரும் நன்றாக ஆடி ரன்களைப் பெருக்கி உறுதுணை செய்தார்கள். மேலும் மேற்கிந்தியத் தீவின் தட்ப வெப்ப நிலை இந்தியாவைப் போன்றே இருந்தது. கடைசியாக நம் கோஷ்டியினரின் நெருங்கிய 'பீல்டிங்' கடைசி டெஸ்ட் தவிர மற்ற எல்லா டெஸ்ட்களிலும் தரமாக இருந்தது.

வாடேகரின் நெஞ்சுறுதியைப் பின்வரும் கேள்வி பதில் விளக்குகிறது:

கேள்வி: மேற்கிந்தியத் தீவில் முதல் டெஸ்டில் இந்திய ஆட்டக்காரர்களில் பாதிப்பேர் 75 ரன்களுக்குள் அவுட்டானபோது இந்தியா தோல்வி அடையும் என்று பயந்தீர்களா?

காப்டன் வாடேகரின் பதில்: இல்லை. எனக்குப் பூரண நம்பிக்கை இருந்தது. ஆரம்ப நாளன்று மழை ஆட்டத்தை விழுங்கிவிட்டது. ஆகவே மாட்ச் நான்கு நாட்களுக்குள் நடைபெற வேண்டிய நிர்ப்பந்தம்! விக்கெட் ரொம்ப அழகாக அமைந்தது. நாங்கள் ஸ்டம்ப்களை வீழ்த்தச் சௌகரியமாயிருந்தது. கடைசி நாள் பிரஸன்னா பந்து வீச முடியாதது பெருங் குறை.

திட்டமிட்டுச் செயலாற்றும் ஆற்றலுக்கு உதாரணமாகும் ஒரு கேள்வி பதில்:

கேள்வி: இரண்டாவது டெஸ்டை மேற்கிந்தியத் தீவில் எப்படி வென்றீர்கள்?

பதில்: நாங்கள் புறப்படுவதற்கு முன்பே போர்ட் ஆப் ஸ்பெயின் விக்கெட் நல்ல 'ஸ்பின்' எடுக்கும் என்று கேள்விப்பட்டிருந்தோம். வெற்றிக்குச் சரியான இடம் என்று முடிவு செய்தோம். அந்தப்படியே அனைவரையும் வீழ்த்தினோம். இந்த மாட்சில் சர்தேசாயும், ஸோல்கரும், ஏ. மன்காடும், கவாஸ்கரும் சக்கைப் போடு போட்டார்கள்! 'டாஸ்' எனக்கு வெற்றி தராமல் போனது எங்கள் அதிர்ஷ்டம். விக்கெட்டில் ஒரே ஈரம். நீரினால் அங்கங்கே விக்கெட் மூடப்பட்டிருந்தது. விக்கெட் சமதளமாகவும் இல்லை.

இன்று லட்சோப லட்சம் மக்களின் மனத்தில் உள்ள பரபரப்புக்கு ஏமாற்றமளிக்காமல் - இங்கிலாந்து இந்தியா டெஸ்ட் மாட்சுகள் விறுவிறுப்புடன் நடந்தேறட்டும். பிரிட்டன் — இந்தியா நட்புறவு வலுப்படட்டும்.

— குண்டுமணி

உங்கள் வாய்க்கு பூரண பாது
காப்பு அளிக்கும் டூத் பேஸ்ட் இதுவே—**நீம்**

நீம் டூத் பேஸ்ட் உங்கள் பற்களை சுத்தம்
செய்வதுடன் வேறு பல நன்மைகளையும்
தருகின்றன. அதிலுள்ள சுகாதாரத்திற்கேற்ற
அரிய பொருள்கள் உங்கள் பற்களை பலப்படுத்தி;
ஈறுகளில் விஷக் கிருமிகள் தொத்திக்
கொள்ளாமல் தடுத்து, கெட்ட சுவாசத்தை
அறவே அகற்றி வாயை தூய்மை படுத்துகிறது.



இது ஒரு கல்கத்தா
கெமிகல் தயாரிப்பு.

NTP/2-70 Tam



தலைவலி • ஃப்ளூ • பல்வலி
• உடல்வலி முதலியவற்றை
உடனடியாகக் குணப்படுத்த

ஸலோஃபென்

வலி நிவாரண மாத்திரை

அமிர்தாஞ்சன் லிமிடெட் தயாரிப்பு

ஏனெனில் ஸலோஃபென் மாத்திரைகள்
டாக்டர்கள் சிபாரிசு செய்யும் மருத்துவ
முறைப்படித் தயாரிக்கப்பட்டவை.

ஸலோஃபென்
இருக்குமிடத்தில்
வலி இருக்காது!



FDSAS-1808 TM


ஜாங்கோ ஜக்கு
கதை: குட்டி கிருஷ்ணன்
சித்திரம்: ராஜு
11
ஜக்கு எதிர்பார்த்த குதிரையின் சேணத் துக்கு அடியில் தான் வைரங்கள் பதுக்கப்பட்டிருந்தன. அதை அறியாமலே ஏப ஜக்கு, யாரோ வரும் காலடியோசை கேட்டுத் தான் எழுதிக் கொண்டிருந்த காதல் கடிதத் தையும் அங்கு ஒளித்தான். வந்தது பிச்சுவா கத்தி பிச்சுமணி. அவனைக் கண்டதுமே தன் தந்திரம் அம்பலமாகி விட்டதை உணர்ந்தான் ஜக்கு.
பிளீஸ்! என் அம்மாவிடமும் அப்பாவிடமும் சொல்லிண்டு வந்துடறேன். என் கடைசி விருப்பத்தைத் தட்டாதே!
அசடு! உனக்கு நன்றி சொல்ல வந்தேன்!...
...உண்மை புரிஞ்சதும் கப்பண்ணுகிட்ட போய் 'ஜக்கு என்னை ஏமாத்த எப்படி அனுமதிச்சீங்க'ன்னு மிரட்டினேன். 'சும்மா இரு; கலாட்டா பண்ணாதே'ன்னு இரு நூறு ரூபா போனஸ் கொடுத்தார்!...
...அந்த டிராமா பிரமாதமா அமைஞ்சதாம். நியாயமா உனக்கும் இதில பங்கு தரணும்...
...ஆனால் நீ பிறர் பணத்துக்கு ஆசைப் படமாட்டே. அதனால் நானே வைச்சுக்கறேன்!
அப்போது....
ஜக்கு! பிச்சுமணி! பக்கத்து கிராமத்திலே சுமாரான வீடா பார்த்து இரவு எல்லாரும் தங்க ஏற்பாடு செய்திருக்கோம். போங்க, போங்க!
அப்ப நீங்க?


எனக்குக் குதிரைகள்னு ரொம்பப் பிடிக்கும்! இரவை இதுங்களோ டேயே திறந்த வெளியில் கழிக்க லாம்னு பார்க்கிறேன்.
எனக்குக் கூட பால்யத்திலிருந்தே! குதிரை விளையாட்டுத்தான் ஸார் பிடிக்கும்! டகடக் டகடக்!...
இருவரும் இரு வேறு காரணங்களுக்காகக் குதிரைகளுடன் இரவைக் கழிக்கத் தீர்மானிக்கின்றனர்.
ஷூட்டிங் கெல்லாம் அனேகமா முடியற கட்டம் வந்தாச்சு, தூங்கு.
என்னது!? டகடக் காட்சியும் குளியல் காட்சியும் தானே முடிச்சது? இன்னும் முதலிரவுக் காட்சி, நைட் கிளப் காட்சி, மரத்தைச் சுற்றும் காட்சி, கட்டிப் புரளும் காட்சி, ஷொத் ஷொக் காட்சி, டிஷூம் டிஷூம் காட்சி, கண்ணீர்க் காட்சி, திடு திடு காட்சி எல்லாம் பாக்கியிருக்கே?....
... திரைப்பட சாதனை வகுத்துத் தந்துள்ள இந்த அடிப்படைக் காட்சிகளை விட்டுக் கொடுப்பதா?
வைரங்கள் சென்னையை அடைந்த பிறகு சினிமா எதுக்கு? பணம் புரளும் என்று சொல்லிக் கம்பெனியை மூட வேண்டியதுதான்!
அப்போது குதிரையைப் பராமரிப்பவன் வந்து தீனி வைத்து, சேணங்களைக் கழற்றப் போக....
கொஞ்சம் இரு! சேணங்கள் மாறு வதை நான் விரும்பலே. இது என் சேணம். அடையாளம் போடறேன்.
ஐடியா! அபாரம்!
குதிரை பராமரிப்பவனாய் வந்தவன் பீ.க.பீ.ம.!
இரு நூறு ரூபாய் போனஸ் தரானே! குதிரைகள் அருகிலேயே படுக்கை விரிக்கிறான்! சேணங்கள் மாறக் கூடா துங்கறான்! இதில் ஏதோ மர்மம் இருக்கு!

தொடரும்

இதோ எந்தன் தெய்வம்

தெய்வம் என்பது ஆலயத்தில் விக்கிரக வடிவில் இருப்பது மட்டுமல்ல.... குழந்தையின் உருவில், குங்குமத்தின் ஒளியில், பாசத்தின் நிழலில், அன்பின் அரவணைப்பில் இரண்டறக் கலந்த ஒன்றுதான் தெய்வம் என்பதை வெளிப்படுத்துவதுதான் அமுதம் பிக்சர்ஸாரின் "இதோ எந்தன் தெய்வம்."

சுந்தரராஜனுக்கு இந்தப் படத்தில் நல்ல பாத்திரம்; சற்றுச் சிரமமான பாத்திரமும் கூட. அநாதையாகப் பிறந்து, அநாதையாக வளர்ந்து அயோக்கியனாக மாறிவிட்ட கொள்ளைக்காரக் காசிலிங்கமாக வந்து, அன்பையும், பண்பையும், பரிவையும், பாசத்தையும் நேருக்கு நேர் அறிந்துகொள்ளும் கட்டங்களில் அவர் திறமை பளிச்சிடுகிறது.

முத்துராமன் கடமையுணர்ச்சியுள்ள நண்பனாக வந்து அருமையாக நடித்திருக்கிறார். சிறைச்சாலையில் திருடன் காசிலிங்கமும் சோமுவும் சந்திக்கும் கட்டம் புதுமையாகவும் பாராட்டும்படியாகவும் இருக்கிறது.

கணவனைப் பிரிந்து பல விதத்திலும் வேதனைப்படும் மனைவியைக் கே. ஆர். விஜயாவின் நடிப்பில் நேரில்காண முடிகிறது. நல்லநடிப்பு.

இடைவேளை வரையில் ஒழுங்காகச் சென்ற கதை அதற்குப் பிறகு பல விபத்துக்களைச் சந்திக்கிறது. பல நம்பமுடியாத நிகழ்ச்சிகள், நடக்கக் கூடாத முறையில் நடந்து திரைக் கதையைப் பெரிதும் பாதித்து விட்டன.

குப்பைத் தொட்டியிலிருந்து ஓர் அநாதைக் குழந்தையைக் கண்டெடுக்கும் ஆரம்பக் காட்சியைக் கண்டு கதை புது மாதிரியா யிருக்கும் போல் இருக்கிறதே என்று சந்தோஷப்பட்டேன். அந்தச் சந்தோஷம் நீடிக்கவில்லை!

சிறையிலிருந்து தப்பி வந்த திருடன் காசிலிங்கம் நள்ளிரவில் சோமுவின் வீட்டுக்குப் போக, அங்கு போலீஸார் வர, சோமுவின் மனைவி சிவகாமி அவனுக்கு அடைக்கலம் தர, குழந்தை உமா, காசிலிங்கத்தைத் தந்தையாக நினைத்து" அப்பா!" என்று கதறி அழைக்க, சிவகாமி பதைத்து விடுகிறாள். இது திரைக் கதையின் முக்கியமான பகுதி.

ஒரு விபத்தில் பார்வையை இழந்த ஒருவனுக்குத் தன் மகனை அவன் குரலினாலேயே கண்டுபிடிக்க முடியாதா என்று கேட்டு வம்பு செய்யக் கூடாது! அதை ஒப்புக்கொண்டால் தான் நீங்கள் மேலே படம் பார்க்க முடியும். இந்த அசட்டுக் கற்பனையை நம்ப வைப்பதற்காகவே, சோமுவின் தந்தைக்கு 'ஸ்டவ்' வெடித்துப் பார்வை போய்விடுகிறது! சோமுவும் இந்தக் குழப்பத்துக்கு உறுதுணையாக இருக்கவே பல ஆண்டுகள் சிறைவாசம் சென்று விடுகிறான்! இப்படிக் கதாபாத்திரங்களும் சம்பவங்களும் திரைக் கதைக்குப் பூரண ஒத்துழைப்பைக் கொடுத்திருக்கும் போது ரசிகர்கள் மட்டும் எதிர்க் கேள்வி போட்டுக் குழப்பம் விளைவிப்பதால் பலன் எதுவுமில்லை!

மூலக் கதை தூயவனுடையது. வசனம் அருமையா யிருக்கிறது. அதற்காக நாம் 'வியட்நாம் வீடு' சுந்தரத்தைப் பாராட்ட வேண்டும். "தானே முளைத்த மரம்" என்ற கண்ணதாசனின் பாட்டு கேட்கச் சுவையா யிருக்கிறது.

படத்தின் டைரக்டர் ஏ. சி. திரிலோக சந்தர் தம் பொறுப்பைக் குறைவின்றி நிறைவேற்றி யிருக்கிறார்.

படத்துக்குத் திருஷ்டி பரிகாரமாக அமைந்து விட்டது நகைச்சுவைக் காட்சி! நாகேஷ், வி. கே. ராமசாமி, ஐ. எஸ். ஆர்., ஆகிய சிறந்த ஹாஸ்ய நடிகர்கள் தங்களால் இயன்றவரையில் முயன்றும் நம்மைச் சிரிக்க வைக்க முடியவில்லையே! அட தெய்வமே!

திரையுலகில் இப்பொழுது திடீரென்று தெய்வத்துக்கு ஒரு மவுசு ஏற்பட்டிருக்கிறது. எப்படியோ தெய்வ சிந்தனை இருந்தால் சரி என்கிறீர்களா? அதுவும் சரிதான். — **காந்தன்**



பள்ளித் தலைமை ஆசிரியர் திருநாவுக்கரசு ஏழாம் வகுப்பு பி பிரிவுக்குள் திடுமென்று நுழைந்தார். கரும் பலகையில் ஏதோ எழுதிக் கொண்டிருந்த நீலமேகம் அவரைப் பார்க்கவில்லை. மாணவர்கள் அனைவரும் எழுந்து நின்று, 'வணக்கம், ஐயா!' என்று ஒரு குரலாகக் கூறியதும் ஆசிரியர் திரும்பிப் பார்த்தார். தலைமை ஆசிரியரைக் கண்டதும், 'வணக்கம்' என்று வரவேற்றார். அதை ஏற்றுக் கொண்டு வகுப்பு ஆசிரியரின் நாற்காலியில் போய் அமர்ந்தார், திருநாவுக்கரசு.

தலைமை ஆசிரியரின் திடீர்ப் பிரவேசத்துக்குக் காரணம் இருந்தது. சென்ற சில வாரங்களாகவே நீலமேகத்தைப் பற்றிப் பல விதமான பேச்சுக்கள் அடிபட்டுக் கொண்டிருந்தன. ஆசிரியர்கள் ஓய்வு அறையில் உரையாடலின்போது நீலமேகத்தின் பெயர் ஒவ்வோர் ஆசிரியரின் வாயிலும் புகுந்து புறப்பட்டது. திருநாவுக்கரசுவின் செவிகளிலும் வம்பளப்பின் சில பகுதிகள் இடம் பெற்று அவரை மெல்ல அரிக்கத் தொடங்கின. சம்பந்தப்பட்ட விஷயம், நீலமேகத்தின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றியதுதான். பள்ளி அலுவல்களில் குறை வைக்காமல் தம்முடைய விருப்பப்படி தம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் உரிமை அவருக்கு உண்டு. அவர் தங்கியிருக்கும் இடத்துக்கு அருகில் புதிதாகக் குடி வந்துள்ள ஓர் இளம் கைம்பெண்ணை நீலமேகம் நேசிக்கிறாராம்! திருமணம் ஆகாத அவர், அந்தப் பெண்ணை மணப்பது சட்டப்படி குற்றமாகாதெனினும், சமுதாயம் அதை ஏற்றுக் கொள்ள வேண்டாமா? வேறு இனத்துக் கைம்பெண் ஒருத்தியை மணந்து கொண்ட ஆசிரியர் பணி புரியும் பள்ளிக்கு, தம் மக்களை அனுப்பப் பெற்றோர்கள் துணிய வேண்டாமா?

கிடக்கட்டும். நீலமேகத்தின் மனத்திலும் இந்தப் பிரச்னை முகிழ்த்திருக்கிறது. அதனால்தான் அவர் நிம்மதியின்றித் தவிக்கிறார். ஒருபுறம் இளமையின் காதல் வேகம்; மற்றொருபுறம் கட்டுப்பாடான சமுதாயத்திடம் ஓர் அச்சம்.

''**செ**வன்த் ஸ்டாண்டர்டு, பி செக்ஷன் மாணவர்கள் எல்லாம் படுமோசம்'' என்றார் தருமராஜன்.



திருநாவுக்கரசு நிமிர்ந்தார்.

''என்ன சொல்கிறீர்?''

''நீலமேகம் தம் வகுப்பில் அக்கறை காட்டவில்லை என்று நினைக்கிறேன். பக்கத்தில், டி செக்ஷனில் மாடாய் உழைக்கிறாரே, கோபாலன் — அவரைப் பார்த்தாவது இவர் திருந்த வேண்டாமா?''

''இரண்டு செக்ஷன் கட்டுரைகளையும் நீங்கள் தானே திருத்தினீர்கள்?''

''அதனால்தான் ஸார் சொல்கிறேன்.... நீங்கள் நீலமேகத்திடம் ஒரு வார்த்தை சொன்னால் நல்லது. இப்படியே விட்டுக் கொண்டிருந்தால், பள்ளிக்கூடத்துக்கு அவப் பெயர் வந்துவிடும்....''

திருநாவுக்கரசு மேஜையின் மேலிருந்த கண்ணாடிக் கல்லைப் பார்த்தார். வழுவழுப்பான கண்ணாடி. உள்ளுக்குள்ளே, கனத்த நீர்ச் சொட்டுப் போல் ஐந்து குமிழ்கள். காகிதம் பறக்காமல் இருப்பதற்காக எட்டு ஆண்டுகளுக்கு முன்பு வாங்கியது. ஒரு மாசு — மறு இல்லை.

தருமராஜன் தொடர்ந்தார்.

''நீங்கள் சொன்னால் மட்டும் அவர் கேட்டு விடப் போகிறாரா? ஆனால், அதற்காக, வகுப்பை அலட்சியம் செய்யக் கூடாது. பாருங்கள். இவர் தனிக்கட்டை. ஒருகவலை கிடையாது. அடுத்தாற்போல் கோபாலனைப் பாருங்கள். சம்சாரி. நான்கைந்து குழந்தைகள்!''

''...சரி, தருமராஜன். நான் கவனிக்கிறேன். கட்டுரைக் காகிதங்களை வைத்து விட்டுப் போங்கள்.''

தருமராஜன் அறையை விட்டு நீங்கியதும் ஏழாம் வகுப்பு டி பிரிவு மாணவர்கள் எழுதிய கட்டுரைக் கட்டைக் கையில் எடுத்தார், தலைமை ஆசிரியர். முதல் காகிதத்தின் மேல் பத்துக்கு எட்டரை மதிப்பெண் போட்டிருந்தது.

'குட்!...... கோபாலன் வகுப்புப் பையனல்லவா? அவர் வகுப்பில் சேர்ந்தால், படு மண்டுப் பயல் கூட அதி புத்திசாலியாகி விடுவானே?....'

ஒவ்வொரு மாணவனின் மனத்திலுடைய குறை நிறைகளை விநாடிப் போதில் உணர்ந்து கொண்டு விடுவார் கோபாலன். கெஞ்சல், கொஞ்சல், மிரட்டல், அவமானப்படுத்துதல், சீறி விழுதல், ஒதுக்கி விடுதல் — எல்லா முறைகளையும் பக்குவமாகக் கையாளுவார் அவர். பலன் என்னவென்றால் எல்லா மாணவர்களுக்கும் அவர் நண்பராக இருந்தார்!

மாணவர்களிடம் மட்டும் என்பதில்லை. உடன் உழைக்கும் ஆசிரியர்களிடமும் கோபாலனுக்குப் பெரு மதிப்பு உண்டு. எல்லாரையும் அரவணைத்துக் கொண்டு போகிற சுபாவம். பள்ளி விழாக்களில் அவர் பேசுகிறாரென்றால், மாணவர்களுக்குக் குஷி. கணீரென்று குரல். 'மேடையில் பேசுகிறேன்' என்ற நினைப்பே இல்லாமல், அந்தரங்கமாக அளவளாவுவது போல் பேசுவார். அவர் பையன் ஸி செக்ஷனில் நீலமேகத்திடம்தான் படிக்கிறான்.

திருநாவுக்கரசு தொண்டையைச் சரி செய்துகொண்டு மாணவர்களைப் பார்த்தார்.

''நீங்கள் எல்லாரும் நன்றாகப் படிக்கணும். இந்த வட்டாரத்தில் நம்முடைய பள்ளிக்கு மிகவும் நல்ல பெயர். அதை நிலைநிறுத்துகிற மாதிரி மாணவர்களும் ஆசிரியர்களும் நடந்து கொள்ளவேண்டும்'' என்றவர், நீலமேகத்தை நோக்கி, ''போன செவ்வாய்க்கிழமை உங்கள் வகுப்பு மாணவர்கள் எழுதிய கட்டுரை திருப்திகரமாக இல்லை. இன்றைக்கு, அடுத்த வகுப்பு கட்டுரை எழுதுதல்தானே?'' என்று கேட்டார்.

''யெஸ், ஸார்....''

''தலைப்பை முன்னதாகத் தெரிவித்திருக்கிறீர்களா? கட்டுரை எப்படி அமைய வேண்டும் என்று மாணவர்களுக்குப் புரியும்படியாகச் சொல்லிக் கொடுத்திருக்கிறீர்களா?''

''யெஸ் ஸார்...''

''என்ன தலைப்பு?''

'' 'எங்கள் தந்தை'...''

''குட்! வகுப்பு முடிந்ததும் கட்டுரைக் காகிதங்களை எனக்கு அனுப்பி வையுங்கள்.''

''யெஸ், ஸார்...''

தலைமை ஆசிரியர் எழுந்து போனார்.— நீலமேகத்தின் உள்ளத்தில் 'நான் கண்காணிக்கப்படுகிறேன்' என்ற எண்ணத்தை உற்பத்தி செய்துவிட்டு.


அறைக்குள் ஓசை எழுப்பாமல் காலடி எடுத்து வைத்தான் சாமிநாதன். அந்த அறைக்குள் நுழையவே அவனுக்கு அச்சமாகத்தான் இருந்தது. ஆனால், அவனுக்கு மிக அவசரமாகத் தேவைப்பட்ட ரப்பர்த் துண்டு, அந்த அறையின் அலமாரியில்தானே இருக்கிறது? அதை எடுத்து வராவிட்டால், 'மகதப் பேறரசு' என்று எழுதி விட்டதை, 'மகதப் பேரரசு' என்று எப்படி மாற்றுவது? 'ற'வை அழித்து விட்டுத்தான் 'ர' எழுத வேண்டும். அதற்கு ரப்பர் தேவை. ரப்பர் அலமாரியில். அலமாரி, அறையில்.

''...மட்டிப் பயலே, என்ன விஷமம் பண்ணிக் கொண்டிருக்கே?'' கனல் தெறிக்கக் கேட்டார், பேப்பர் திருத்திக் கொண்டிருந்த கோபாலன்.

''இல்லேப்பா.... வந்து.... ரப்பர் வேணும். அது....''

''இடியட். ரப்பர் வேணுமாம், ரப்பர். முதலில் தப்பாக எழுதுவானேன்? அப்புறம் ரப்பரைத் தேடுவானேன்?... படவா...''

சாமிநாதன் பேசாமல் நின்றான். அப்பாவின் குணம் அவனுக்குத் தெரியும். பேசா



மல் நிற்பது ஆபத்துத்தான் என்றாலும், வாயைத் திறந்து பேசுவது பேராபத்து என்பது அவன் அனுபவம்!

''வாயிலே என்ன, கொழுக்கட்டையா? இல்லே, தைத்து வைத்திருக்கிறதா? ஃபூல். என்னடா பண்ணிக் கொண்டிருந்தே, இத்தனை நேரம்?''

வாயை மென்று விழுங்கி, ''வரலாறு'' என்றான்.

''புளுகினியோ, மண்டையைப் பொளந்து விடுவேன்!... நெஜத்தைச் சொல்லு. விளையாடிண்டு இருந்தியா, வரலாறு படிச்சியா?''

காமாட்சிக்குச் சத்தம் பொறுக்கவில்லே. சாமிநாதன் கேள்வி — பதில் எழுதிக் கொண்டிருந்ததை அவள் பார்த்தாள். அவன் உண்மை பேசினாலும் அவர் நம்பத் தயாரில்லே. பிஞ்சு மனம் நொந்து போகும்படி பழி சுமத்திச் சீறி விழுகிறார். சே, என்ன மனிதர், இவர்? மகன் என்ற பரிவுணர்ச்சி கடுகளவேனும் இருக்காதா?

கதவருகில் வந்து நின்று கொண்டாள், காமாட்சி. ''அவன் பாடம்தான் படிச்சிண்டிருந்தான். விளையாடல்லே.''

''ஆமாம்... நீ பொரிசுக்கு வந்துட்டியாக்கும். இப்படி இடம் கொடுத்துத்தான் குழந்தைகள் குட்டிச்சுவராய்ப் போகிறதுகள்!... சுந்தரம் ஊர் சுற்றுகிறான். பேபி எப்போ பார்த்தாலும் மளிகைக் கடை வாசலில் நிற்கிறான். சனியன்கள்... ஒண்ணும் உருப்படப் போறதில்லே!... நம்ம தலையெழுத்து.. ஹும்....''

காமாட்சியின் அடிவயிற்றில் சுருசுருவென்றது. ''இப்போ சாமிநாதனைப் பற்றித்தானே பேச்சு? மற்றதுகளை ஏன் இழுக்கறும்?''

கோபாலனுக்குச் சுருதி இறங்கியது. ''பெரிய சாமிநாதன்!.. அவன் எழுதின கட்டுரை எங்கிட்ட வந்திருக்கு. இன்னும் அரை மணியிலே பையன் வண்டவாளம் வெளிச்சமாயிடும்!''

சாமிநாதனுக்குக் காலடியில் பூமி பிளந்தாற்போலிருந்தது.

நேற்றைக்கு எழுதிய 'எங்கள் தந்தை' அவன் தந்தையிடமேயா வந்து சேர்ந்திருக்கிறது?

சாமிநாதனின் கண்களில் குடைராட்டினம் சுழன்றது. இதயத்தில் விர்விர் என்றது. தட்டுத் தடுமாறிக் கொண்டு அவன் வெளியே வந்தான்.

இனி, அவனும் வீட்டில் இருக்கமுடியாது. அதாவது, அவனுடைய தந்தை அவனை வீட்டுக்குள் அனுமதிக்கப் போவதில்லே.

நீலமேகம் சார் எவ்வளவு அழகாகச் சொன்னார்? ஒவ்வொரு மாணவனும் உண்மையிலேயே அவனவனுடைய தந்தையைச் சித்திரிக்க வேண்டுமாம். 'காலை பத்து மணிக்கு அலுவலகம் சென்று மாலை ஐந்து மணிக்குத் திரும்புவார், தினமும் மிட்டாய், பிஸ்கோத்து வாங்கி வருவார், அக்காவுக்குப் பூ வாங்கி வருவார்' என்று காப்பி அடித்தாற்போல் எழுதக்கூடாதாம். சிரித்துக் கொண்டே வருகிற தகப்பன்மார்கள், வைது கொண்டே வருகிறவர்கள், தள்ளாடிக் கொண்டு கைகளில் சாமான் சுமந்து கொண்டு, ஊர் சுற்றிவிட்டு அரட்டை அடித்துக் கொண்டு... இப்படித் தந்தைகள் எத்தனை ரகம்!

'என் தந்தை என்னிடம் மிகவும் அன்பாக இருப்பார். தினமும் கொஞ்சி முத்தம் தருவார்' என்று புத்தகத்தில் போட்டிருக்கிற மாதிரி எழுதினால் மார்க் கிடைக்காது. புத்தகத்தில் வரும் தந்தை ஓர் இலட்சியத் தந்தை. 'எங்கள் தந்தை' இலட்சியத் தந்தையாக எப்படி இருக்க முடியும்?

நீலமேகம் சொல்லியதைக் கேட்கக் கேட்கச் சாமிநாதனின் மென்மையான நரம்புகளில் ஒரு வெறி பரவியது. எவரிடமும் சொல்ல முடியாமல் மனத்தளவில் தவிக்கிற தவிப்புக்களை வெளிப்படுத்துவது என்று தீர்மானித்துவிட்டான். கட்டுரையை வேறு யார் பார்க்கப் போகிறார்? இந்த நீலமேகம் சார்தானே? அவர் ஒன்றும் அப்பாவிடம் சொல்ல மாட்டார்.

—இப்படி யெல்லாம் எண்ணிக் கொண்டு ஒரு பக்கம் முழுதும் எழுதிவிட்டு வந்தானே? அது கடைசியில், அவன் தகப்பனார் கையில் வந்து சேர்ந்து விட்டதே!

அரச மரத்தடிப் பிள்ளையார் கோவிலில் உட்கார்ந்து, முந்தின நாள் நிகழ்ச்சிகளையும் எண்ணங்களையும் அசை போட்டுக் கொண்டிருந்தான் சாமிநாதன். மார்கழி மாத விடியப் போதில், ஆற்று நீரில் மூழ்கினவனைப் போல் அவன் உடல் பதறிக் கொண்டிருந்தது. வகுப்பு ஆசிரியரின் உரைக்கு ஏற்ப, தன் தந்தையையே அல்லவா தத்ரூபமாகச் சித்திரித்திருக்கிறான் — நேற்றைய கட்டுரையில்?

''என் தகப்பனார் ஒரு பள்ளிக்கூட ஆசிரியர். அவர் எல்லோரிடமும் நல்லவிதமாகப் பழகுவார். வீட்டுக்குள் நுழைந்தால் கோபம் பொங்கிக் கொண்டு வரும். அம்மா பொறுமையாக இருப்பாள். சில சமயங்களில் துயரம் தாங்காமல், அழுவாள். அப்பா, என் தம்பி, தங்கைகளை ஆசையாய்க் கூப்பிட்டதே இல்லே. பள்ளிக்கூடத்தில் சிரிக்கச் சிரிக்கப் பேசுவார். வீட்டில் 'காச் மூச்'சென்று கத்துவார். எங்களுக்கெல்லாம் அவரைக் கண்டால் நடுக்கம். அவர் கத்தினால், அம்மாவிடம் ஒண்டிக் கொள்வோம். இவர், ஒரு நாள் கூட, எங்களை வாக்கிங் அழைத்துக் கொண்டு போனது கிடையாது. பாடம் சொல்லிக் கொடுத்ததும் இல்லே. ரவி அழுதால் தூக்கி வைத்துக் கொள்ள மாட்டார்; பட் பட் என்று அடிப்

அவனுடன் சேருங்கள்!



'கிட்டி பாங்க்' கணக்கு வைத்திருக்கும் 60,000 சிறுவர், சிறுமியர்களில் அவனும் ஒருவன்



அவன் பணம் சேமிக்கிறான். அவன் பணம் சம்பாதிக்கிறான் — வட்டியின் மூலம். இதை ஒரு விளையாட்டாகக் கருதி மகிழ்ச்சியடைகிறான்.

அவனைப் போல் நீங்களும் ஏன் இருக்கக் கூடாது?

உங்கள் தாய், தந்தையிடம் பேசங்கள். உங்கள் 'கிட்டி பாங்க்' கணக்கைத் துவக்குங்கள். அது உங்களுக்கு மிகவும் பிடிக்கும்.

இன்றே அருகாமையிலுள்ள ஆந்திரா பாங்க் கிளையை அணுகுங்கள்.

THE ANDHRA BANK LTD

தி ஆந்திரா பாங்க் லிமிடெட்

மத்திய அலுவலகம்:
சுல்தான் பஜார், ஹைதராபாத்

கே. கோபால் ராவ் சேர்மன்

எம்.வி. சுப்பாராவ் ஜெனரல் மானேஜர்

நாட்டுப்பணிக்குத் தொண்டாற்றும் நாட்டுடமையாகாத ஒரு பாங்க்

FDS/AB-182, TM

பார். கோவிலுக்குப் போகும்போதெல்லாம் 'சுவாமி பகவானே, எங்க அப்பாவைத் திருத்து' என்று வேண்டிக் கொள்வேன்...''

சாமிநாதனின் நடு நெஞ்சிலிருந்து பயம், ஆவேசம், ஆற்றாமை, திகைப்பு, ஆகியவற்றின் உணர்ச்சிக் கலவை புகை மூட்டமாய் எழுந்து, மூளையின் ஒவ்வொரு நரம்பிலும் பாய்ந்து, அவனை என்னமோ எங்கோ...

மறுநாள் காலையில் யாரோ நாலு பேராய் அவனை வீட்டு வாசலில் கொண்டு வந்து நிறுத்தினார்கள். காமாட்சிக்கு வயிற்றில் பால் வார்த்தாற் போலிருந்தது. அப்படியே சாமிநாதனைக் கட்டிக் கொண்டாள். ''என் கண்ணே! எங்களை விட்டுட்டு எங்கேடா போயிட்டே?'' என்று அரற்றினாள்.

''ரா முளுக்கத் தோப்பிலே கிடந்திருக்குங்க. காத்துக் கோளாறு. மந்திரிக்கணும்...'' என்றான் வந்தவர்களில் ஒருவன்.

சாமிநாதன் திருதிருவென்று விழித்தான். ''நான்... கட்டுரை.... வாத்தியார் சொன்னார்.... மாட்டேன்... மாட்டேன்.... எனக்குப் பயமாயிருக்கு...''

காமாட்சி கண்ணீர் உகுத்தாள்.

''நீ சொல்றது ஒண்ணும் புரியல்லியேடா, குழந்தே. உன் கட்டுரைக்கு, பத்துக்குப் பத்து மார்க் போட்டிருக்கார், உங்கப்பா. அதைப் படிச்சுட்டு ரொம்ப நேரம் பிரமை புடிச்சாப்பலே உட்கார்ந்திருந்தார். எனக்குப் பதறிப் போச்சு. என்னன்னேன். ஒண்ணுமில்லேன்னு சொல்லிட்டுக் கண்ணுலே கரகரன்னு ஜலம் விட ஆரம்பிச்சுட்டார்.''

சாமிநாதன் உச்சி முகட்டைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''அரை மணி கழிச்சு வெளியே வந்தார். ரவி அழுதுண்டு இருந்தது. கிட்ட வந்து அதைத் தூக்கிண்டார்!...''

அவன் அம்மாவின் முகத்தைப் பார்த்தான்.

''ஆமாண்டா, சாமிநாதா! அப்புறம் பேபியையும் சுந்தரத்தையும் கூட்டிண்டு வாக்கிங் போனார்!...ஆமாண்டா!...''

சாமா உதட்டை நக்கிக் கொண்டான், நாக்கு நுனியால்.

''திரும்பி வந்து, நீ எங்கேன்னார். உன்னைக் காணும்!... வேதனையைச் சொல்லி முடியாது. தெருவே திரண்டு போச்சு. எங்கெங்கோ தேடினோம்.... அப்பா சாப்பிடவே யில்லே...''

'தண்ணீர் வேண்டும்' என்று ஜாடை காட்டினான் சாமிநாதன்.

சற்றுத் தூரத்தில் நின்றபடியே பார்த்துக் கொண்டிருந்த கோபாலன், ''காமாட்சி'' என்று அழைத்தார்.

''ஏன்?''

''அவனுக்குப் பசிக்கிறதோ, என்னவோ? வயிற்றுக்குப் போட்டுத் தூங்க வையேன்...''

''ஆமாம்னா! நான் அசடு!... இதோ சாதம் கொண்டு வரேன். தூங்கினால்தான் தெளிவு உண்டாகும்....''

அரை மணிக்குப் பின் அறையில் சாமிநாதன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். கோபாலன் பக்கத்தில் அமர்ந்து, மெல்ல விசிறிக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் பெருமிதம் பரவிக் கிடந்தது.

ஆமாம். எல்லோருக்கும் அந்தப் பேறு கிடைப்பதில்லை. ஆசானுக்குப் பணிவிடை செய்யும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைத்து விடுகிறதா, என்ன?



குமாரி ஜ்யோத்ஸனா லதா

இந்திர தனுவின் ஆதரவில் மியூஸிக் அகாடெமி அரங்கிலும், பார்த்தசாரதி ஸ்வாமி சபையின் ஆதரவில் அச்சபை மேடையிலும் சென்ற மாதம் நடைபெற்ற குமாரி ஜ்யோத்ஸனாலதாவின் பரதநாட்டிய நிகழ்ச்சி பம்பாய் ராஜ ராஜேச்வரி பரத நாட்டிய கலா மந்திருக்கு மற்றொரு வெற்றி. இவரும் இந்தக் கலைக் கோவிலில்தான் பயின்றார். இந்திய நகரங்களில் மட்டுமின்றி அயல் நாடுகளுக்கும் சென்று நமது கலையின் சிறப்பை உணர்த்தியுள்ளார் குமாரி ஜ்யோத்ஸனாலதா. தமிழ் நாட்டில் மிகப் பிரபலமாயிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் வி. கே. விஜயராகவனின் பேத்தி. சென்னையில் இரண்டு நிகழ்ச்சிகளும் எவ்வகையிலும் குறைவின்றி, கண்ணுக்கும் கருத்துக்கும் நிறைவை அளித்தன. சுமாஸ் வர்ணமும், ஜதிஸ்வரமும் நிருத்த, நிருத்திய அழகை அள்ளி வீசின. பாவ அபிநயங்கள், குமாரி ஜ்யோத்ஸனாலதாவின் நிகழ்ச்சியில் முழுமை பெற்றிருந்தன என்பதைத் திருப்தியுடன் சொல்ல வேண்டும். ''ஹரி தும் ஹரோ'' என்ற மீரா பஜனுக்குப் பிடித்த அபிநயங்களும், அருணாசலக் கவியின் அசாவேரி கீர்த்தனத்துக்கு அமைந்த பாவங்களும் குமாரி ஜ்யோத்ஸனாலதாவின் கலை முதிர்ச்சியை விளக்கின.

லக்மே அய் மேக்-அப்

மென்மையானது இளமைத் தோற்றம் தருவது

கண்களுக்குப் புத்தழகு ஊட்டுவது.





1 அகலமான மிருதுவான கண்களுக்கு—விரைவில் உலரும் **லக்மே அய்-லைனர்.** இது ப்ளாக் வெல்வெட், காபி பிரவுன், டவ் க்ரே வண்ணங்களில் வருகிறது. அய்-லைனர் பிரஷ் உபயோகியுங்கள்.

2 **லக்மே அய்-ஷாடோ:** மென்மையான மனங் கவரும் சாயல்கள். ஃப்ளேம் ப்ளு, ஜேட் க்ரீன், லாவெண்டர்.

3 **லக்மே ஃபோர்-இன்-ஒன் அய்-ஷாடோ:** நான்கு வண்ணங்கள்—நீயூ லீட், ஃபேட்னிங் பர்ல் லீட், உள்பட ஓர் அழகான மிக்ஸ்—அன்—மாட்ச் கேஸில்.


4 நீண்ட, தடித்த, படபடக்கும் கண்ணிமைகளுக்கு **லக்மே மஸ்காரா.** கறுப்பு, பழுப்பு—இரு வண்ணங்கள்.

5 மெல்லிய உருவுள்ள கண்களுக்கு—மிருதுவான இறகு போன்ற புருவங்களுக்கு **லக்மே அய்-பென்சில்** உபயோகியுங்கள். கறுப்பு வண்ணத்தில் இரு சைஸ்களில் கிடைக்கிறது.


ASP/L-103

ASP/AMP-14

அருமையான இனிப்புகள்! நீ இவற்றை எப்படித்தான் செய்கிருயோ!



இரகசியம்— அமுல் மில்க் பவுடர்!



ஹல்வா, பாயசம், மில்க் ஷேக், பர்ஃபி, ஐஸ் க்ரீம்—எது தயாரிக்க விரும்பினுலும், சுவை கொழிக்கச் செய்திடும் அமுல் மில்க் பவுடர்.

அமுல் மில்க் பவுடர் கைவசம் இருந்தால், ஆரோக்கியமான நல்ல பாலையும், கட்டியான ஆடைத் தயிரையும் தட்டில்லாமல் பெறலாம். கறியுடன் இரண்டொரு ஸ்பூன் அமுல் மில்க் பவுடர் சேர்த்தால், வளமையுடன் சுவை கொழிக்கும். மிகவும் வசதியானது; சிக்கனமானதும் கூட!

அமுல் மில்க் பவுடர்— ஆரோக்கியமான நல்ல பாலை அமோகமாகத் தருகிறது.

சத்திய வெள்ளம்

நா. பார்த்தசாரதி

இருபத்துநான்காவது அத்தியாயம்

யாழ்ப்பாணத்து மாணவி பாலேஸ்வரிக்கும், இரசாயனப் பேராசிரியர் ஸ்ரீராமனுக்கும் இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்துப் போராட முடிவு செய்த தினத்தன்று இரவு பாண்டியன் அண்ணாச்சியைச் சந்திக்கப் பதினொரு மணிக்கு மேலாகி விட்டது. வெளியே சென்றிருந்த அண்ணாச்சி அப்போது தான் திரும்பி வந்திருந்தார். தேயிலைத் தோட்டங்கள் அதிகமா யிருந்த பக்கத்து மலைப் பகுதி ஒன்றிற்கு அன்று அதிகாலையிலேயே புறப்பட்டுப் போயிருந்த அவர் இரவு திரும்பி வந்து கூறிய செய்திகளும் நிகழ்ச்சிகளும் கவலை அளிக்கக்கூடியவையாக இருந்தன. அங்கே நடைபெற்ற தொழிற்சங்கத் தேர்தல் ஒன்றில் போலீஸார் பாராமுகமாக நடந்து கொண்ட விதமும் ஆளும் கட்சிக்கு ஆதரவானவர்களின் வன்முறைகளும் பற்றி அண்ணாச்சி கதை கதையாகச் சொன்னார். தேசிய தொழிற் சங்கத்தின் சார்பாகத் தொழிற் சங்கத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டவரை ஒடுக்க நடந்த முயற்சிகளையும் மல்லை இராவணசாமியின் கட்சிச் சார்புள்ள தொழிற் சங்கம் மேற்கொண்ட கொலை கொள்ளை முயற்சிகளையும் அவ்வளவுக்கும் பின்னாலும் தேசிய சங்கத்தார் வெற்றி பெற்றதையும் அவர் விவரித்தார். பாண்டியன் அவரைக் கேட்டான்:

''நாட்டில் உள்ள தொழிலாளிகள், விவசாயிகள், மாணவர்கள் எல்லாரையும் பகைத்துக் கொண்டு, எல்லாருக்கும் கெடுதல்கள் செய்து கொண்டு எப்படித்தான் இந்த ஆட்சி இன்னும் நீடிக்கிறதோ?''

''உன்னைப் போலொத்தவங்க இப்பிடிக் கேட்கிறப்ப எல்லாம் 'இது சாமான்யர்களின் ஆட்சி. மேட்டுக்குடி மக்கள் இதைக் கவிழ்க்கப் பார்க்கிறாங்க'ன்னு அமைச்சர் கரியமாணிக்கம் குய்யோ முறையோன்னு அலறி ஒரு ஒப்பாரி வைப்பாரு. இப்படி ஒப்பாரி வச்சே அவராலே எதிலேருந்தும் தப்பிட முடியுது, பாண்டியன்!''

''நீங்கள் சொல்வது சரிதான் அண்ணாச்சி! 'மாணவர்கள் அமைதியாகவும் அடக்கமாகவும் இருந்து படிப்பைக் கவனிக்க வேண்டும். கலவரங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபடக் கூடாது' என்று இப்போது அமைச்சர் கரியமாணிக்கம் எங்களுக்கு அறிக்கைகள் விட்டு உபதேசம் செய்து கொண்டிருக்கிறார். சில ஆண்டுகளுக்கு முன் இதே அமைச்சர், 'செப்டம்பர் போனால் மார்ச், மார்ச் போனால் செப்டம்பர். பரீட்சையும் படிப்புமா முக்கியம்? முதலில் தமிழ்த் துரோகிகளை எதிர்த்துப் போரிடுங்கள்' என்று அறிக்கை விட்டு இரயில் பெட்டிகளை எரிக்கவும், பஸ்களைக் கொளுத்தவும் தூண்டினார்.''

''அன்னைக்கு அவர் ஆட்சியிலே இல்லே. இன்னைக்கு அவரே ஆட்சியிலே இருக்காரு. ஆட்சியைப் பிடிக்கிற வரை போராடச் சொன்னாரு. ஆட்சியைப் பிடிச்சப்புறம் உங்களையெல்லாம் அமைதியா யிருந்து தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாத்தச் சொல்றாரு.''

''போராட வேண்டிய காலங்களில் அமைதியைப் பற்றி உபதேசிக்கிறவர்களும், அமைதியா யிருக்க வேண்டிய காலங்களில் போராட்டங்களைப் பற்றி உபதேசிக்கிறவர்களுமாக இங்கே சில மனிதர்கள் சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற்போல் நடந்து கொள்கிறார்கள். இது எல்லாரையுமே குழப்பி விடுகிறது அண்ணாச்சி!''

''எஸ்டேட் தொழிலாளர் யூனியன் தேர்தலிலே மல்லை இராவணசாமியின் கட்சிக்கு எதிராக வேலை செய்த ஆட்கள் எல்லாம் சைக்கிள் செயினால் மூக்கு முகரை தெரியாமே அடிக்கப்பட்டு ஆஸ்பத்திரியிலே கிடக்கிறாங்க. தொழிலாளர் குடியிருப்புக்களிலே ஆம்பிளை ஆளுங்க வெளியிலே போயிருக்கிற நேரத்திலே புகுந்து பொம்பிளைகளை மிரட்டறாங்க. கன்னாபின்னான்னு பேசறாங்க. கீழ்மட்டத்திலே தங்க கட்சி ரௌடிகளைத் தூண்டிவிட்டு இவ்வளவு காலித்தனங்களுக்கும் ஏற்பாடு செய்து விட்டு மேல்

மட்டத்திலே இருக்கிற அமைச்சருங்க, 'அமைதி பேணுவீர். தமிழ்ப் பண்பாடு காப்பீர்' அப்பிடின்னு அடிக்கொருதரம் அறிக்கை விட்டுக்கிட்டிருக்காங்க. . . . கையைப் பிடிச்சு இழுக்க வந்தவங்களோட சண்டை போட்ட பொண்ணு மேலே விபசார வழக்குப் போடுறதும், நியாயம் கேட்கப் போன புரொபஸரைப் போலீஸ்காரர் அடிக்கிறதும் நடக்கிற ஊர்லே இனிமே எந்த அக்கிரமும் நடக்க முடியும் தம்பி!''

''கொஞ்ச நாளைக்கு முன்னே திடீர் திடீர்னு ஸ்லம் ஏரியாவிலே நூறு குடிசை, இருநூறு குடிசைன்னு தீப்பிடிச்சதாகவும், அப்படித் தீப் பிடிச்ச குடிசைகளுக்குத் தீவைச்சவங்க தேர்தலிலே தோற்றுப்போன கட்சியைச் சேர்ந்தவங்கதான்னும் சொன்னாங்க பாருங்க. அதுலேட இரகசியத்தை இப்பத்தான் மணவாளன் சொல்லித் தெரிஞ்சிக்கிட்டேன். குடிசைவாசிகளுக்குத் தேர்தலில் தோற்றுப்போன கட்சிகள் மீது வெறுப்பு உண்டாக்கவும், தங்கள் மேல் விருப்பு உண்டாக்கவும் என்று சிலர் திட்டமிட்டுச் செய்த அரசியல் சதி அது. 'அவர்கள் உங்கள் குடிசைகளை எரித்தார்கள். நாங்கள் கட்டித் தருகிறோம் பாருங்கள்' — என்பது போல் பிரசாரம் செய்ய வசதி பண்ணிக் கொண்டே இவை அனைத்தும் செய்யப்பட்டதாக மணவாளன் சொல்றாரு. முதல் தரமான மனிதர்கள் தங்கள் புகழைக் கூட விரும்புவதில்லை. இரண்டாம் தரமான மனிதர்கள் தங்கள் புகழை மட்டுமே விரும்புகிறார்கள். மூன்றும் தரமான மனிதர்கள் தங்கள் புகழ் என்பது அடுத்தவர்களை அவமானப்படுத்துவதன் மூலமாகவே வரவேண்டும் என்று கருதுகிறார்கள். குடிசைகளுக்கு நெருப்பு வைத்தவர்கள் இந்த மூன்றாவது வகைப் புகழை விரும்பியிருக்கிறார்கள் போலிருக்கிறது. இட்லர் தோற்றுப் போகணும் இவங்ககிட்ட.''

''அது மட்டுமில்லே தம்பி! தொழிலாளிங்க போராடினா உடனே 'ஐயோ! இது தொழிலாளிகளின் அரசு. இதை எதிர்த்தா போர்க் கொடி பிடிக்கிறீர்கள்?'னு கேட்பாங்க. மாணவர்கள் போராடினா, 'இது மாணவர்களின் அரசு. இதை எதிர்த்தா போர்?'னு கேட்பாங்க. விவசாயிங்க போராடினா, 'இது விவசாயிகளோட சொந்த அரசு. இதை எதிர்த்தா போராடறீங்க?'ன்னு நீலிக் கண்ணீர் வடிப்பாங்க. நரிக் குறவர்கள் போராடினாலும், 'அந்தோ! இது நரிக்குறவர்களின் சொந்த அரசு. இதை எதிர்த்து நீங்களே போரிடலாமா?' என்று தயாராக ரெடிமேட் ஒப்பாரி வைப்பாங்க. இட்லர் இத்தினி கெட்டிக்காரனா இருந்திருப்பானான்னு எனக்குச் சந்தேகம்தான் பாண்டியன்.''



''நாளைக்குக் காலையில் யூனிவர்ஸிடி திறந்ததும் நாங்கள் வகுப்புகளுக்குச் செல்லப் போவதில்லை. பாலேஸ்வரிக்கும் இரசாயனப் பேராசிரியர் ஸ்ரீராமனுக்கும் போலீஸ் இழைத்த அநீதியை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யப் போகிறோம். மல்லிகைப்பந்தல் சரித்திரத்திலேயே முதல் முறையாகத் துணைவேந்தரைத் தவிர மற்றெல்லா ஆசிரியர்களும் எங்களுடைய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளப் போகி



றார்கள். துணைவேந்தரும், டாக்டர் பொழில் வளவனாரும், பண்புச் செழியனும், வேறு சிலரும் மாணவர்களின் ஊர்வலத்திலோ ஆர்ப்பாட்டங்களிலோ கலந்து கொள்ளக் கூடாது என்று நினைக்கிறார்களாம். மற்ற எல்லா ஆசிரியர்களும் பேராசிரியர் ஸ்ரீராமன் போலீஸ் இன்ஸ்பெக்டரால் தாக்கப்பட்டது பற்றி ரொம்பவும் ஆத்திரமாக இருக்கிறார்கள், அண்ணாச்சி!''

''பொழில் வளவனாருக்கு எப்பிடித் தம்பீ ஆத்திரம் வரும்? அவருதான் 'அமைச்சர் கரியமாணிக்கம்பிள்ளைத் தமிழ்'னு அமைச்சர் மேலே பிள்ளைத் தமிழே பாடியிருக்காரே? அது போகுது. உனக்கு எந்த அளவு இங்கே நடந்ததை அப்பிடியே சொன்னாங்களோ சொல்லலியோ, எனக்குத் தெரியாது. கதிரேசனோ புரொபஸரோ, உங்ககிட்ட நடந்ததையெல்லாம் சொல்லியிருக்க மாட்டாங்க. வெளியிலே நாம் கேள்விப் படறதை விட அதிகக் கொடுமைகள் போலீஸ் ஸ்டேஷனில் நடந்திருக்குது.

'யாரிட்டவும் சொல்லிடாதீங்க அண்ணாச்சி! உங்க மனசோட இருக்கட்டும்'னு ஸ்டேஷன் ரைட்டரே எங்கிட்டச் சொன்னான். இராவணசாமி போட்ட தூண்டுதலாலேதான் இன்ஸ்பெக்டரு பொய்யா அந்தப் பொண்ணு மேலே 'விபசாரத்துக்கு அழைத்ததாக'க் குற்றம் சாட்டி எஃப். ஐ. ஆர். எழுதச் சொன்னாராம். வாத்தியாரு ஸ்ரீராமன் இதைப் பற்றி விசாரிக்கப் போனபோது இன்ஸ்பெக்டரு அவரைக் கழுத்தைப் பிடிச்சு வெளியிலே தள்ளினதாக மட்டும்தான் நீ கேள்விப்பட்டிருப்பே. ஆனால் அதைவிட மோசமானதெல்லாம் நடந்திருக்கு. சாதிப் பேரைச் சொல்லித் திட்டிக் கிட்டே பெல்டைக் கழட்டி வாத்தியாரை அடிச்சிருக்காங்க. அவரை அவமானப்படுத்தி யிருக்காங்க.''

''இனிமே இன்னின்ன சாதிக்காரங்க நியாய அநியாயங்களைப் பற்றிப் பேசக்கூடாதுன்னு நம்ம

அரசியல் சட்டத்தையே மாத்திக்க வேண்டியதுதான் போலிருக்கு.''

''அப்பிடியில்லே தம்பீ! இன்னிக்கு நாட்டிலே இருக்கிறதே ரெண்டு சாதி தான். கொடுமைப்படுத்தறவங்க, கொடுமைப்படறவங்கன்னு; ரெண்டே சாதி தான் கண்ணுக்குத் தெரியுது. வேற சாதிகள் எதுவுமே இருக்கிறதாத் தெரியலே.''

இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் அண்ணாச்சியும் கதிரேசனும் போய் ஏரிக்கரைச் சாலையிலிருந்த அச்சகம் ஒன்றிலிருந்து மறுநாள் கடையடைப்பு, ஊர்வலம், ஆர்ப்பாட்டம் பற்றிய துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகளை எடுத்து வந்தார்கள். அண்ணாச்சி, பாண்டியன், கதிரேசன் ஆகியவர்களும் மற்றும் நூறு மாணவர்களும் குளிரைப் பொருட்படுத்தாமல் இரவோடு இரவாகச் சுவரொட்டிகளை ஒட்டுவதற்குப் புறப்பட்டார்கள். நகரை நான்கு பிரிவாகப் பிரித்துக் கொண்டு இருபத்தைந்து இருபத்தைந்து பேர்களாக அவர்கள் சுவரொட்டி ஒட்டுவதற்குச் சென்றிருந்தார்கள். கடை வீதியில் ஒவ்வொரு கடைக் கதவின் மீதும் சுவரொட்டி ஒட்டப்பட்டது. காலையில் கடையைத் திறக்க வருகிறபோது கடையடைப்பை நினைவூட்டுவதுபோல் அங்கங்கே சுவரொட்டிகளை ஒட்டியிருந்தார்கள். கடை வீதியில் கம்பளிக் கோட்டும் பனிக் குல்லாயுமாகக் கரும் பூதங்கள் நடப்பது போல் ரோந்து சுற்றிக்கொண்டிருந்த இரண்டு போலீஸ்காரர்கள் சுவரொட்டி ஒட்டும் மாணவர்களைப் பார்த்தார்கள். சுவரொட்டிகளை அவர்களும் நின்று படித்தார்கள். ஆனால் மாணவர்கள் செயலில் அவர்கள் குறுக்கிடவில்லை.

நகரத் தெருக்களிலும், பல்கலைக் கழக விடுதிச் சுவர்களிலும் ஒட்டி முடித்து அவர்கள் திரும்பும்போது இரவு மணி மூன்று. ஆசிரியர்களும், பல்கலைக் கழக ஊழியர்களும் அந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ள இருந்ததனால் ஊர்வலத்தைக் காலை பத்தரை மணிக்குப் பல்கலைக் கழக வாயிலிலிருந்து தொடங்க வேண்டும் என்று பேசி வைத்துக் கொண்டார்கள் அவர்கள்.

மறு நாள் பொழுது விடிந்ததுமே கடைவீதி வெறிச்சோடிக் கிடந்தது. எப்படிப்பட்ட அசாதாரணமான நிலைகளிலும்கூடத் திறந்திருக்கும் பல கடைகளே மூடப்பட்டிருந்தன. மாணவர்களும், மாணவிகளும் அன்று காலையில்தான் ஊரிலிருந்து திரும்பி வரத் தொடங்கியிருந்தனர். விடுதி அறைகளில் போய்ப் பெட்டிப் படுக்கைகளை வைத்துவிட்டு உடனே பல்கலைக் கழக வாயிலில் கூடினார்கள் மாணவர்கள். பத்தேகால் மணிக்குக் கண்ணுக்கினியாள் மதுரையிலிருந்து வந்து மல்லிகைப் பந்தல் பஸ் நிலையத்தில் இறங்கியபோது அங்கே நின்று துண்டுப் பிரசுரம் வழங்கிக் கொண்டிருந்த மாணவர்கள் அவளை உடனே ஊர்வலத்துக்குப்போய் மாணவிகள் பிரிவுக்குத் தலைமை ஏற்கும்படி தெரிவித்தார்கள்.

அவள் அவசர அவசரமாக அண்ணாச்சி கடையில் கொண்டுபோய்ப் பெட்டியை வைத்து விட்டுப் பல்கலைக்கழக வாயிலுக்கு விரைந்தாள். காலை எட்டரை மணிக்கே துணைவேந்தர் தாயுமானவனார் பொருளாதாரப் பேராசிரியரையும் வேறு சில ஆசிரியர்களையும் கூப்பிட்டு, 'மாணவர்கள் நடத்தும் கண்டன ஊர்வலத்தில் ஆசிரியர்கள் யாரும் கலந்து கொள்ளக்கூடாது' என்று கல்வி மந்திரி விரும்புவதாகத் தெரிவித்தார்.

''போலீஸார் ஓர் ஆசிரியரிடம் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டிருப்பதால் அதைக் கண்டித்துத் தாங்களும் கண்டன ஊர்வலத்தில் கலந்து கொள்ளப்போவது உறுதி'' என்று ஆசிரியர்கள் சார்பில் துணைவேந்தரிடம் தெரிவிக்கப்பட்டது. துணைவேந்தர் தாம் முதலில் கூறியதையே மீண்டும் வற்புறுத்திக் கூறினார்.

''துணைவேந்தர் அரசாங்கத்திற்கும் ஆளும் கட்சிக்கும் ஏஜண்டு போல் செயல்படுவதைத் தாங்கள் வெறுப்பதாகவும், ஓர் ஆசிரியர் தாக்கப்பட்டதைப் பற்றி வருத்தம் தெரிவிக்காமல் இருப்பதைக் கண்டிப்பதாகவும்'' — அவர்கள் பதில் கூறினார்கள். பத்தரை மணிக்கு ஆசிரியர்களும், பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பிற ஊழியர்களும் ஊர்வலமாகப் புறப்பட்டு வந்து மாணவர்களோடு சேர்ந்து கொண்டபோது பேராசிரியர் பூதலிங்கம் இதைப் பாண்டியனிடம் தெரிவித்திருந்தார். மாணவர்களையும் ஆசிரியர்களையும், பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்களையும் தவிர நகரின் பொதுமக்களும், தொழிலாளிகளும், மல்லை இராவணசாமியின் கட்சி தவிர ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களும், ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்காகப் பெருந்திரளாகக் கூடியிருந்தனர். போலீஸுக்கு எதிராகவும், எதேச்சாதிகார ஆட்சிக்கு எதிராகவும் கொந்தளித்துக் குமுறும் மன நிலையோடு கூடியிருந்தது அந்தப் பெருங்கூட்டம். நகரைச் சேர்ந்த உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பப் பள்ளிகள்கூட அன்று நடைபெறவில்லை. உயர்நிலைப் பள்ளி மாணவர்களும், எல்லாப் பள்ளிகளின் ஆசிரியர்களும்கூட ஊர்வலத்தில் கலந்து


இரண்டுமே
இயக்கத்தில்
உன்னதமானவை.
CAMY
GENEVA


ஆல்போ-ஸாங்
எல்லா வயதினருக்கும்
ஒரு சிறந்த டானிக்
உங்களுடைய உடல் வளர்ச்சிக்கு ஆல்போ-
ஸாங் அவசியம் தேவை. ஏனெனில் இளை
யோர் முதியவர்கள் எல்லோருடைய ஆரோக்
கியத்திற்கும் உடல் வளர்ச்சிக்கும் தேவை
யான விசேஷப் பொருள்கள் ஆல்போ-ஸாங்
கில் இருக்கின்றன.
ALBO-SANG
FOR POORLY AND
IMPROPERLY NOURISHED
BABIES AND ADULTS
ஜே. அன் ஜே. டிஷேன்
ஹைதராபாத் (டெக்கான்)

“‘ஜாக்கிரதையாகக் கையாளவும்’ என்று எழுதட்டுமா?”

“அவசியமில்லை. ஸதர்ன் ரோட்வேஸில்தானே அனுப்பப் போகிறோம்?”

பிரதி வருடமும் பல லட்சம் டன் எடையுள்ள பார்ஸல்களை ஸதர்ன் ரோட்வேஸ் சுமந்து சென்று சேர்க்கிறது. பார்ஸல்களை அது ஜாக்கிரதையாகக் கையாள்கிறது. ஒவ்வொருவரையும் தனி அக்கறையுடன் கவனித்து சேவை செய்கிறது. இதனாலெல்லாம்தான் அதனிடம் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பார்ஸல்களை ஏற்றுவது, எடுத்துச் செல்வது, இறக்குவது அனைத்தையும் விசேஷப் பயிற்சி பெற்ற ஊழியர்களே செய்கிறார்கள்.

ஆகவே உங்கள் பார்ஸல்களை ஸதர்ன் ரோட்வேஸ் நல்லபடியாகவும் பத்திரமாகவும் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் வியப்பில்லை.

வாடிக்கையாளர்களிடை வளர்ந்து வரும் நல்லெண்ணமும் நம்பிக்கையும்தான் தென்னகம்பூராவையும் தன் பார்ஸல் ஸர்வீஸினால் ஸதர்ன் ரோட்வேஸ் அரவணைக்கத் துணை புரிந்துள்ளது. தங்கள் பண்டங்களை அனுப்புவதற்கு மேன் மேலும் அதிக மக்கள் ஸதர்ன் ரோட்வேஸைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்

டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று

மதுரை



கொள்ள வந்துவிட்டார்கள். ஒரு பாவமும் அறியாத ஒரு வெளிநாட்டு மாணவியிடம் அநீதியாக நடந்து கொண்ட போலீஸ் இன்ஸ்பெக்டரை உடனே நீக்கக் கோரும் வாசகங்கள் அடங்கிய அட்டைகளும், மேரிதங்கத்தின் தற்கொலை பற்றிய வாசகங்களும், பேராசிரியரிடம் முறைகேடாக நடந்து கொண்டதைக் கண்டிக்கும் வாசகங்கள் அடங்கிய பானர்களும் ஊர்வலத்தில் நிறைய இருந்தன. தடை உத்தரவு அமுலில் இருப்பதால் ஊர்வலம் நடத்தவோ, ஆர்ப்பாட்டம் நடத்தவோ முடியாது என்று போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. தெரிவித்துவிட்டு அதற்கு மாணவர்கள் என்ன பதில் கூறுகிறார்கள் என்று அறியுமுன்னேயே போலீஸ்காரர்கள் கூட்டத்தைக் கலைந்து செல்லுமாறு வேண்டத் தொடங்கி விடவே மாணவர்கள் ஆத்திரம் அடைந்துவிட்டனர்.

''ஆயிரம் தடைகள் இருந்தாலும் அதைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் நடந்தே தீரும்'' என்று உரத்த குரலில் கூறினான் பாண்டியன். எல்லா மாணவர்களும், மாணவிகளும் மக்களும் அதே குரலைத் திருப்பி முழக்கினார்கள். எல்லாவற்றையும் விடக் கொடுமை போலீஸ் ஜீப்பிலேயே மல்லை இராவணசாமியும் கோட்டச் செயலாளர் குருசாமியும் அங்கே ஏறிக் கொண்டு வந்திருந்ததுதான்.

'' இவர்கள் எப்போது சார், போலீஸ் அதிகாரிகளாகச் சேர்ந்தார்கள் ?'' என்று மாணவர்களில் சிலர் பயமின்றிப் போலீஸ் அதிகாரிகளை நோக்கிக் கேட்கக்கூடத் தயங்கவில்லை. போலீஸ் ஜீப்பருகே அலைமோதும் மாணவர் கூட்டத்தைப் பார்த்து இராவணசாமியும் குருசாமியும் மிரண்டனர்.

'விலைவாசி நிலவரம்—இந்த ஆட்சியில் கீழ்க்கண்டவற்றின் விலைகள் ஏறியுள்ளன'—என்று எழுதிய ஓர் அட்டையில் :

1. மெடிகல் காலேஜ் ஸீட் ரூபாய் பதினையாயிரம்.

2. குமாஸ்தா வேலை — ரூபாய் மூவாயிரம் + சிபாரிசு.

3. ஆசிரியர் வேலை — ரூபாய் இரண்டாயிரம்.

4. துணைவேந்தர் பதவி நீடிப்புக்கு— மந்திரிக்கு டாக்டர் பட்டம்.

என்று வரிசையாக எழுதப்பட்டிருந்தது. அந்த அட்டையை ஜீப்பின் அருகே கொண்டு வந்து, 'உங்களால் ஏறியிருக்கும் விலைவாசி உயர்வைப் பாருங்கள்' என்று சொல்லிக்கொண்டே இராவணசாமிக்கும், குருசாமிக்கும் காட்டினான் ஒரு மாணவன். 'விலைவாசிகள் இறக்கம் — இந்த ஆட்சியில் கீழ்க்கண்டவற்றின் விலைகள் படு மலிவாகியுள்ளன.

1. நீதி.

2. நேர்மை.

3. பெண்களின் கற்பு.

4. மக்களின் உரிமைகள்.

என்று வரிசையாக எழுதப்பட்டிருந்தது. இந்த வாசக அட்டைகளைப் போலீஸ் ஜீப் அருகே மாற்றி மாற்றிக் காட்டி விசிலடித்துக் கேலி செய்து இராவணசாமியையும் கோட்டம் குருசாமியையும்



சத்திய வெள்ளம்

முதல்தரமான மனிதர்கள் தங்கள் புகழைக் கூட விரும்புவதில்லை. இரண்டாம் தரமான மனிதர்கள் தங்கள் புகழை மட்டுமே விரும்புகிறார்கள். மூன்றாம் தரமான மனிதர்களோ தங்கள் புகழ் என்பது அடுத்தவர்களை அவமானப் படுத்துவதன் மூலமாகவே வர வேண்டும் என்று கருதுகிறார்கள்.

மடக்கி வளைத்துக் கொண்டார்கள் மாணவர்கள்.

'தோளில் பரிவட்டம் —
தொங்கும் தரை மட்டம் —
இதுதான் மாவட்டம்'

என்று அங்கேயே இயற்றிய ஒரு கவிதையைக் கோட்டம் குருசாமியை நோக்கி அப்போதே உரத்த குரலில் மற்ற மாணவர்களின் சிரிப்பொலிகளுக்கு இடையே அரங்கேற்றினான் ஒரு மாணவன்.

அங்கிருந்த போலீஸ் வேனில் போய் வயர்லெஸ் மூலம் யாரையோ கலந்து பேசிவிட்டுத் திரும்பிவந்து ஊர்வலத்துக்கு அனுமதி தர முடியும் என்றும் செல்லும் வழியை விளக்கி அனுமதி கேட்டு எழுதித் தரவேண்டும் என்றும் மாணவர்களிடம் தெரிவித்தார் ஒரு பெரிய போலீஸ் அதிகாரி. பாண்டியன் அப்படியே எழுதிக் கொடுத்தான். மல்லை இராவணசாமியும், கோட்டச் செயலாளர் குருசாமியும் போலீஸ் ஜீப்பில் ஏறி வந்து பார்த்தது மாணவர்களைக் குமுறச் செய்திருந்தது. போலீஸ் அதிகாரிகள் கட்சிச் செயலாளர், கட்சி

எம். எல். ஏ. ஆகியோரின் எடுபிடிகள் போல் நடப்பதைக் கண்கூடாகக் கண்டார்கள் மாணவர்கள். போலீஸ் ஜீப்பில் வந்திருந்த காரணத்தால்தான் இராவணசாமியும், குருசாமியும் மாணவர் கூட்டத்திலிருந்து தப்ப முடிந்தது. ''ஊர்வலத்துக்கு அனுமதி பெறுகிறீர்கள்! வன்முறைகள் எதுவும் இன்றி அமைதியாக ஊர்வலம் நடக்க வேண்டும்'' என்று தெரிவித்துவிட்டு கூடவிருந்த கட்சிப் பிரமுகர்களோடு புறப்பட்டுப் போய்விட்டார் போலீஸ் அதிகாரி.

ஊர்வலத்தினர் இரண்டு இரண்டு பேராக 'அணிவகுத்துச் செல்லுமாறு பாண்டியனும் மற்றவர்களும் ஒழுங்கு செய்தார்கள். முதலில் கண்ணுக்கினியாள் தலைமையில் மாணவிகள் அணிவகுத்து நின்றனர். 'பாலேசுவரியைப் பழி வாங்கிய போலீஸ் ஒழிக' 'பொய் வழக்குப் போடும் போலீஸ் ஒழிக' — 'மேரிதங்கத்தைக் கொன்ற நிர்வாகம் திருந்தட்டும்' 'பேராசிரியரை அவமானப்படுத்திய போலீஸ் ஒழிக' என்றெல்லாம் வாசகங்கள் எழுதிய அட்டைகள், பேனர்கள் மாணவிகளிடம் இருந்தன. மாணவிகளை அடுத்து மாணவர்கள் அணிவகுத்து நின்றனர். மாணவர்களைத் தொடர்ந்து பல்கலைக் கழக ஆசிரியர்களில் பெரும்பாலானவர்களும், ஊழியர்களும் நின்றனர். பொது மக்களும் தோட்டத் தொழிலாளர்களும் பின்வரிசைகளில் நின்றனர். பல்கலைக் கழகம் திறக்கின்ற தினத்தன்று மல்லிகைப்பந்தலுக்கு வந்து இறங்கியதும் இறங்காததுமாக ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்திருந்த மாணவ மாணவிகளுக்குக்கூட அவர்களிடம் அளிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தின் மூலம் எல்லா விவரங்களும் தெரிவிக்கப் பட்டிருந்ததன் காரணமாக உணர்ச்சிக் குமுறல் அதிகமாக இருந்தது. இரு பக்கங்களிலும், ஊர்வலத்தின் முன்னும் பின்னும் போலீஸ் வந்து கொண்டிருந்தது. கடை வீதிகளில் எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன. பாதை ஓரங்களில் தென்படும் பூக்கடை, பழம் காய்கறி விற்கும் தள்ளு வண்டிகள்கூடக் காணப்படவில்லை. விண்ணதிர முழங்கும் கோஷங்களுடன் அந்த மிகப் பெரிய ஐந்நாறு மைல் நீள ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது. ஊர்வலத்தின் முடி

சினிமா மன்னரும்



கிரிக்கெட் மன்னரும்

டிக்போர்ன் பார்க்கில் சினிமா மன்னர் டைரோன் பவர் சர் அந்தோணி குழுவுக்காகக் கிரிக்கெட் ஆட வந்தார். விக்கெட் அருகே நின்ற கிரிக்கெட் ஆட்ட மன்னர் டெனிஸ் காம்ப்டனிடம் ''மிஸ்டர் டெனிஸ்! நான் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிறிது விளக்கிச் சொல்கிறீர்களா?'' என்றார்.

டைரோன்பவருக்குக் காம்ப்டன் கிரிக்கெட் மட்டையைப் பிடித்துக் கொள்ளும் விதத்தை விளக்கினார்.

''எதிர்த்த பக்கத்திலிருந்து பௌலர் பந்து வீசும்போது நீங்கள் மட்டையைச் சுழற்றிப் பந்தை அடிக்க வேண்டும்.''

பௌலர் பந்தை வீசியதும் சினிமா மன்னர் டைரோன் பவர் மட்டையை வேகமாகச் சுழற்றினார். பந்து மைதானத்தைத் தாண்டி ஸிக்ஸராகியது.

''எப்படி டெனிஸ்? நான் இனி ரன்னுக்கு ஓட வேண்டுமா?''

''வேண்டாம்! நீங்கள் ஸிக்ஸர் அடித்துவிட்டீர்கள்!''

''அது நல்லதா? கெடுதலா?'' என்று சினிமா மன்னர் டைரோன் பவர் வினவினார்.

''அபாரம், டைரோன்! நான் அந்த மாதிரி சில ஸிக்ஸர்களை அடித்தால் உலகத்திலேயே தலைசிறந்த ஆட்டக்காரராகி விடுவேன்!''

''நன்றி டெனிஸ்!'' என்று மகிழ்ந்தார் சினிமா நடிகர் டைரோன்.

''மறுபடியும் அதே மாதிரி பந்தை அடித்தீர்களானால் பிரமாதமாயிருக்கும்!'' என்றார் காம்ப்டன்.

சினிமா நடிகர் டைரோன் பவர் மிகுந்த வேகத்தோடு மட்டையைச் சுழற்றினார். அடுத்த கணம் ஸ்டம்புக் குச்சிகள் பந்து பட்டுப் பறந்தன.

சினிமா மன்னர் டைரோன் பவர் தம் கப்பல் போன்ற காரில் ஏறினார்.

- பி. எஸ். எம்

வாழ்வே மென்மையின் உருவகம்



‘க்ளிக்’ அடித்துவைப்பீர்.. நிரந்தரம்

எப்போதுமே உங்கள் கையோடிருக்கட்டும் தப்பாத் துணையான க்ளிக் III, மறைந்தோடும் வாழ்வின் மணியான கணங்களை நிரந்தரமாக்கிக் காப்பீர்— நினைவுமுகம் கண்முன் நிற்பதற்கே.

‘இலக்கு வைத்ததும் சடக்’ என எடுக்கவே ஆக்பா க்ளிக். காரியத் தகுதி வாய்ந்தது. உண்மை தவறாதது. கையாள எளிது. சிக்கனமிக்கது.

- 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் பெரிது பெரிதாக (6 x 6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.
- சிறப்பானதோர் தயார்த் தோலுறை, போர்ட்ரெய்ட் லென்ஸ், ஃப்ளாஷ்கன் ஆகியவை மேற்கொண்டு தனிவிலைக்குக் கிடைக்கும்.

தெள்ளத் தெளிவான பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மெண்டுகளுக்கும் கண்டிப்புடன் கோருவீர் ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களை.

அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-கேவார்ட் விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.

ஆக்பா-கேவார்ட் AG லீவர்குஸன் அவர்களின் கூட்டுறவோடு இவற்றைத் தயாரிப்போர்: தி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.

விலை
ரு. 56.25
(எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).

SIMOES-AG-11-TAM



ஆக்பா க்ளிக—இந்தியாவின் உன்னதப் புகழ்பெற்ற காமிரா

ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்
பம்பாய் · நியூ டெல்லி · கல்கத்தா · சென்னை.

® புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட், ஆன்ட்வெர்ப்/ லீவர்குஸன் ஆகியோரின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

ஸ்ரீ கிருஷ்ண கான சபா (Regd.)

கிரிஃப்பித் ரோடு, தி. நகர், சென்னை - 600017

போன் : 442806 & 441953

கிரிஸ்துமஸ் & புத்தாண்டு கலை விழா - டிசம்பர் 1972 & ஜனவரி 1973

டிசம்பர் — நாடகங்கள்

● சனி 16; மாலை 6-30
ஞாயிறு 17; மாலை 6-30
பத்ம வியூகம்
புனிடெட் அமெச்சூர் ஆர்ட்டிஸ்ட்

● திங்கள் 18; மாலை 6-30
செவ்வாய் 19; மாலை 6-30
சொந்தம்
என்னெஸென் தியேட்டர்ஸாரால்

● சனி 23; மாலை 6-30
ஞாயிறு 24; மாலை 6-30
வெளிச்சம்
சாந்தி நிலையத்தார்

● திங்கள் 25; மாலை 5
மாலை 7-30
ஸ்டார் நைட்
ஸ்டேஜ் கிரியேஷன்ஸ்

1973 ஜனவரி

ஜனவரி, 2, 3; மாலை 6-30க்கு
'சோ'வின்
யாருக்கும் வெட்கமில்லை
விவேகா பைன் ஆர்ட்ஸ்

சனி 20, மாலை 6-30க்கு
'மனோஹரின்'
விசுவாமித்திரர்
நேஷனல் தியேட்டர்ஸ்

டிசம்பர் — நடனம்

சனி 30, மாலை 6-30க்கு
பரதநாட்டியம்
குமாரி ஸ்ரீ வித்யா
ஸ்ரீ கே.என். தண்டாயுதபாணியின் சிஷ்யை; ஸ்ரீமதி எம். எல். வசந்த குமாரி பதம் பாடுவார்கள்.

ஞாயிறு 31, மாலை 6-00க்கு
பரதநாட்டியம்
யாமினி கிருஷ்ணமூர்த்தி

டிசம்பர் — சங்கீதம்

புதன் 20, மாலை 5-45க்கு
சீர்காழி கோவிந்தராஜன், எம். சந்திரசேகரன், உமையாள்புரம் கே. சிவராமன், விநாயக்ராம்

வியாழன் 21, மாலை 5-45க்கு
ஓலேட்டி வெங்கடேஸ்வரலு, எம். எஸ். கோபாலகிருஷ்ணன், காரைக்குடி மணி, குன்றுபள்ளி கிருஷ்ணமூர்த்தி.

வெள்ளி 22, மாலை 5-45க்கு
லால்குடி ஜெயராமன்-வயலின் (ஸோலோ), பாலக்காடு ரகு, விநாயக்ராம்

ஞாயிறு 24, காலை 8-15க்கு
பேபி காயத்ரி-வீணை; நாகூர் அம்பி அய்யர்.

திங்கள் 25, காலை 8-15க்கு
எம். எஸ். கோபாலகிருஷ்ணன், எம். எஸ். அனந்தராமன்-இரு வயலின்கள்; டி. வி. கோபாலகிருஷ்ணன்

செவ்வாய் 26, மாலை 5-45க்கு
டி. எம். தியாகராஜன், வி. வி. சுப்ரமணியம், டி. கே. மூர்த்தி, ஆர். குருமூர்த்தி

புதன் 27, மாலை 5-45க்கு
நேதுநூரி கிருஷ்ணமூர்த்தி, லால்குடி - ஜெயராமன், முருகபூபதி, வி. நாகராஜன்

வியாழன் 28, மாலை 5-45க்கு
புல்லாங்குழல் மாலி, (தனி) எஸ்.பி. நடராஜன் டி. எஸ். வீரராகவன், சிவராமன், உபேந்திரன் (இரு மிருதங்கம்)

வெள்ளி 29, மாலை 5-45க்கு
பர்வீன் சுல்தானா அண்டு பார்ட்டி ஹிந்துஸ்தானி பாட்டு

ஞாயிறு 31, காலை 8-15க்கு
எமனி சங்கர சாஸ்திரி - வீணை; ராமபத்திரன்.
மாலை 3-00க்கு
நாதஸ்வரம் - எஸ். லட்சுமிநரசிம்ம அய்யர், கணேச அய்யர் - தவில்

1973 ஜனவரி திங்கள் 1, மாலை 8-15க்கு
டி. என். கிருஷ்ணன், எம். சந்திரசேகரன் (இரு வயலின்கள்), ராமபத்திரன், குற்றாலம் விசுவநாத அய்யர் (இரு மிருதங்கம்)
மாலை 5-45க்கு
பாலமுரளி, லால்குடி, ரகு, ஆலங்குடி

● **நாடகங்களுக்கு சீஸன் கட்டணங்கள்**

டிசம்பர் 72: 16, 18, 23, 25, மாலை 5 மணி மற்றும் 1973 ஜனவரி 3

ஸ்பெஷல் ரிஸர்வ்டு ரூ. 25/- ரிஸர்வ்டு ரூ. 15/-

நாடகங்கள், நடனம் தினசரி கட்டணங்கள் :
ரூ. 15, 10, 5 & 3

சங்கீதக் கச்சேரிகள் : சீஸன் கட்டணங்கள்

ஸ்பெஷல் ரிஸர்வ்டு ரூ. 50/-
ரிஸர்வ்டு ரூ. 40/-
முதல் வகுப்பு ரூ. 25/-

தினசரி கட்டணங்கள் : ரூ. 15, 10, 5 & 3


(ஜனவரி 20உ. நிகழ்ச்சிகள்) தவிர மற்ற எல்லா கலைவிழா நிகழ்ச்சிகளுக்கும் ரூ. 100; ரூ. 60. வார நாட்களில் மாலை 6 லிருந்து இரவு 8 வரையிலும், ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணியிலிருந்து 11 மணி வரையிலும் டிக்கெட்டுகளை முன்னதாகவே பதிவு செய்து கொள்ளலாம்.

வில் பாலேஸ்வரியிடமும், பேராசிரியரிடமும் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்ட இன்ஸ்பெக்டரை உடனே நீக்குமாறு கோரி ஆர்.டி.ஓ.விடம் ஒரு மனுவைக் கொடுப்பதாக இருந்தார்கள் அவர்கள். ஆர்.டி.ஓ. அலுவலகத்துக்கு முன்பாகவே நூறு கெஜம் இப்பால் தலைமைப் போலீஸ் அலுவலகம் இருந்தது. ஊர்வலத்தைப் போலீஸ் அலுவலக வாயிலிலேயே தடுத்து நிறுத்திவிடுவதாகவும் அதற்கு மேல் மாணவர்களின் பிரதிநிதிகள் நுவர் ஆர்.டி.ஓ. அலுவலகத்துக்குச் சென்று சந்தித்து மனுவைக் கொடுக்கலாம் என்றும் போலீஸ் தரப்பிலிருந்து முதலிலேயே தெரிவிக்கப்பட்டிருந்தது. மாணவர்களும் அதற்கு இணங்கியிருந்தார்கள். 'ஊர்வலமே நடக்கவிடாமல் செய்துவிட வேண்டும்' என்றுதான் மேலேயிருந்து போலீஸ், ஆர்.டி.ஓ. துணைவேந்தர் எல்லாருக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இருந்தும் பொதுமக்கள், மாணவர்களின் எழுச்சியையும் கூட்டத்தையும் பார்த்துத் தயங்கி மறுபடியும் மேலிடத்தை வற்புறுத்தி வேண்டிய பின்பே போலீஸ் அதிகாரிகள் ஊர்வலத்தை அனுமதித்திருந்தார்கள்.

மிகப் பெரிய அந்த ஊர்வலம் பஜார் ரோட்டில் போய்க் கொண்டிருந்தது. பஜார் ரோடு மல்லிகைப்பந்தல் நகரின் வீதிகளிலேயே மிகவும் நீளமானதாகும். வில்லின் முதுகுபோல் தெருவின் நடுப்பகுதி மேடாகவும் மற்ற இருமுனைகளும் தாழ்வாகவும் அமைந்த வீதி அது. நகரின் முதுகெலும்பு போல் இலங்கிய அந்தத் தெருவின் நடுப் பகுதியில் கோட்டச் செயலாளர் குருசாமிக்குச் சொந்தமான 'அறிஞர் கலைஞர் சுவை நீர் அங்காடி' (டீ ஸ்டால்) என்ற ஹோட்டல் திறந்து வைக்கப்பட்டு நடந்து கொண்டிருந்தது. மாணவிகள் அந்தக் கடைவாயிலைக் கடந்தபோது கண்ணுக்கினியாள் ஒரு துண்டுப் பிரசுரத்தை எடுத்து நீட்டி, ''தயவுசெய்து கடையை மூடிவிடுங்கள். எங்களுக்காகச் செய்யா விட்டாலும் எங்களுடைய கோரிக்கையில் உள்ள நியாயங்களை மதித்து மற்றெல்லாக் கடைக்காரர்களும் மூடியிருக்கும் போது நீங்கள் மட்டும் திறந்திருப்பது சரியில்லை'' என்று அமைதியாகவே கோரினாள். கடையிலிருந்த ஆட்கள் அதைப் பொருட்படுத்திக் கேட்கவில்லை.

''அந்தப் பருப்பெல்லாம் இங்கே வேகாதும்மா! இது யார் கடை தெரியுமில்லே....? கொள்கைக்காகவாவது வியாபாரமே இல்லாவிட்டாலும் நாங்கள் திறந்து வைத்திருப்போம்'' என்று பிடிவாதமாக மறுத்துவிட்டார்கள் அவர்கள். அதைக் கேட்டு மாணவிகள் 'அந்த முரடர்களோடு வம்பு வேண்டாம்' என்று அமைதியாகத் தலைமைப் போலீஸ் அலுவலகத்தை நோக்கி முன்னேறினர். (தொடரும்)





இன்றே ஐஓபியில் ஒரு "கல்வி சேமிப்பு கணக்கு" ஆரம்பியுங்கள்

இன்று உங்கள் குழந்தைக்கு பள்ளியில் முதல் நாள்.

நீங்கள் உணரும் முன்னரே அவன் கல்லூரிப் படிப்பை எட்டி விடுவான்.

அவன் உயர் கல்விக்கு தேவைப் படும் பணத்தை எளியமுறையில் சேமிக்க உதவுகிறது ஐஓபி அளிக்கும் கல்வி சேமிப்புத் திட்டம்.

விவரங்களுக்கு அருகில் உள்ள ஐஓபி கிளையை அணுகுங்கள்

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்
மத்திய அலுவலகம்
151, மவுண்ட் ரோடு, சென்னை-2

IOB/7114

மரகதமணி சிந்தும் பல வண்ணக் கதிர்கள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஏ. கே. வேங்கடேசன்

கவர்னர் ஜெனரல் ராஜாஜி தூத்துக்குடிக்கு விஜயம் செய்தார். தூத்துக்குடித் துறைமுகத்துக்கும் கொழும்புக்குமிடையே கப்பல் போக்குவரத்தைத் தொடங்கி வைப்பதற்காகச் சென்றார். இந்தப் புது மார்க்கத்தில் சென்ற முதல் கப்பலுக்கு இதே தூத்துக்குடியைச் சேர்ந்த கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் பெயர் இடப்பட்டிருந்தது.

அன்று தூத்துக்குடியில் அனைவரையும் விடப் பெருமிதத்தில் பூரித்தவர் கப்பல் நாயகரான காப்டன் கோர்ட்னே என்பவர்தான். அவரே கவர்னர்ஜெனரலை வரவேற்றுக் கப்பல் முழுவதையும் சுற்றிக் காட்டி அதன் சிறப்பு அம்சங்களையும், புதிய போக்குவரத்தின் வள



மான ஏதுக்களைப் பற்றியும் விவரித்துக் கூறினார். அவருடனும் மற்ற அதிகாரிகளுடனும் கவர்னர் ஜெனரல் அளவளாவினார். நான் என் காமிராவை இயக்கலானேன். ராஜாஜி, தமக்கே உரிய 'மௌனிக' ஞானத்தோடு இருவரது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்தார். கவர்னர் ஜெனரலுடன் படம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கப்பல் நாயகர் இரகசியமாக ஆசைப்பட்டது நிறைவேறியது; பிரத்தியேகமாக அவரை மட்டும் ஒரு படம் எடுக்க வேண்டும் என்று நான் விரும்பியதும் நிறைவேறியது! மகா புருஷர்கள் செய்கிற சிறு காரியங்கள்--சாமானிய சூழ்நிலையில் சாதாரண மக்களிடை அவர்கள் நடந்து கொள்ளும் பாங்கு மானுட இயல்பை ஆராய்பவர்களுக்கு மிகவும் சுவையான ஒன்றுதான்!

ராஜாஜியிடம் நான் பன்முறை கண்டுள்ள ஒரு குணாதிசயம், அவர் எவ்விஷயத்தில் ஈடுபட்டாலும் அதில் அபார சாதுரியம் காட்டுவதேயாகும். கைதேர்ந்த கொத்தனாரைப் போலக் கொல்லருவால் கலவையைப் பூசுவார். ரயில் பயணத்தின்போது தமது பெட்டியில் சகல வஸ்துக்களையும் அவரே அப்பழுக்கில்லாமல் சுத்தம் செய்வதைக் கண்டு வியந்திருக்கிறேன். வெகு நீண்ட பிரயாணம் செய்தாலும் கூட எவ்வாறோ தமது வஸ்திரங்களில் அழுக்கே படாமல் வைத்துக் கொள்வார். நல்ல காப்பியின் பரம ரசிகர் அவர் என்பது மட்டுமின்றிக் காப்பி ததும்பும் கோப்பையையும் சாஸரையும் ஒரு துளிக் கூடச் சிந்தாமலே ஓடுகிற ரயிலில் மேல் பெர்த்தில் உள்ளவருக்கு வழங்கும் சாதுரியமும் படைத்தவர் அவர். அவரது இந்த உபசரணைக்கு நானே ஒரு முறை வார்தா செல்லும்போது பாத்திரமாகி யிருக்கிறேன். அவர் இவ்விதம் உபசரிப்பது தகாது என்று நான் வெட்கத்துடன் ஆட்சேபித்தபோது, அவர் சகஜமாக, ''வார்தாவில் உங்களுக்கு இந்த மாதிரி நல்ல காப்பி கிடைப்பது சாத்தியமில்லை'' என்று மட்டுமே கூறினார்.

ராஜாஜி ஆரம்ப நாளிலிருந்தே சிறந்த எழுத்தாளராகவும், பத்திரிகையாளராகவும் இருந்திருப்பவர். காந்திஜி நடத்திய 'யங் இந்தியா' முதலிய பத்திரிகைகளிலும் வேறு சஞ்சிகைகளிலும் அவ்வப்போது அவர் எழுதி வந்த கட்டுரைகள் அவர் வரப்பிரசாதமாகப் பெற்றுள்ள எழுத்தாற்றலைக் காட்டுகின்றன. அவர் தொடுகிற விஷயம் அனைத்திலும் ஒரு புதிய, தமக்கே சொந்தமான அழகை மிளிரச் செய்வார். ஒரு புது சிந்தனை ஒளிரும். ஒரு புதிய கோணம் உருவாகும். புதியதொரு சொற்றொடர் சுடர் விடும். இது வாசகர் மீது பளிச்சென்ப் பதிவதாக இருக்கும்.

ராஜாஜி தாமே சிறந்த பத்திரிகையாளராகையால், பொதுமக்களுக்குச் சுவாரசிய



மான விஷயத்தை வெளிப்படுத்துவதில் செய்திப் பத்திரிகைக்காரர்களுக்கு உள்ள கடமையை உணர்ந்தவராவார். ஆயினும் அதிகாரபூர்வமில்லாமல் முன்கூட்டியே செய்திகளைப் பிரசுரித்ததற்காக அவர் நிருபர்களைக் குற்றம் கூறிய சந்தர்ப்பங்களும் உண்டு.

தேவை ஏற்பட்டதாகக் கருதும்போதெல்லாம் ராஜாஜி பத்திரிகை நிருபர்களைக் கூட்டிப் பேசுவார். வெளிப்படுத்துகிற அளவுக்குப் 'பழுத்து'விட்ட விஷயங்களைக் கூறி விளக்குவார். பத்திரிகைகள் மூலம் பொதுமக்களின் நாடியைப் பார்ப்பதில் அவருக்கு ஈடுபாடு உண்டு.

கொந்தளிக்கும் கடலில் சஞ்சலிக்காமல் நிற்கும் பாறை போல், எத்தனை எதிர்ப்பு வந்தாலும் சலனமடையாமல் நிற்பவர் ராஜாஜி. ஆனால் அதே சமயத்தில் பிறரது துயரம் என்று வந்துவிட்டால் — தனி மனிதர்களானாலும் சரி, பல மக்களானாலும் சரி, பிறர் அவதியுற நேர்ந்தால் — அப்போது ராஜாஜி ஆழ்ந்த உணர்ச்சியால் ஆட்டி வைக்கப்படுவார். 1952 செப்டம்பரில் விஜயவாடாவில் ஒரு பயங்கர விபத்து நடந்தது. கிருஷ்ணா நதியின் கிளைகளில் உடைப்பு எடுத்துக் கொண்டதால் பழுதான அணைக்கட்டில் எஞ்சினியர்களும், தொழிலாளர்களும் அவசரமான ரிப்பேர் வேலை செய்து வந்தனர். அப்போது சூப்பரின்டெண்டிங் எஞ்சினியரும் மூன்று சீனியர் எஞ்சினியர்களும் இரண்டு தொழிலாளர்களும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு அதிலேயே மூழ்கி மாண்டு போயினர். இந்த அதிர்ச்சியூட்டும் செய்தி ராஜாஜிக்குத் தெரிய வந்தபோது மரணமடைந்தோரின் குடும்பங்களின்பால் அவரது அநுதாபம் பொங்கிவழிந்தது. ''கடமை என்பது எத்தனை இடுக்கண்களைக் கொண்டது, எப்பந்திகள் எத்தனை பெரிய தியாகங்கள் செய்ய நேரலாம் என்பது இந்தப் பயங்கர சோக நிகழ்ச்சியிலிருந்து நிதரிசனமாகிறது. பிரார்த்தனையின் மூலம் சாந்தி காண வேண்டிய குடும்பத்தினரின் துயரத்தோடு என் மனத்துயரமும் கலக்கிறது'' என்று அவர்களுக்கு எழுதினார்.

சில வாரங்களுக்குப்பின் தஞ்சாவூரில் புயல் அடித்த போதும், ராயலசீமையில் பஞ்சம் பல கொடுமைகளை இழைத்த போதும், ராஜாஜி அந்தப் பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்ய வேண்டியதாயிற்று. துன்புற்ற மக்களுக்கு ஆறுதலும், உதவியும் தருகிற கருணை யாத்திரையாக அவை இருந்தன. மறக்க முடியாதபடி நெஞ்சைத் தொடும் நிகழ்ச்சிகள் அப்போது நடந்தன. ராயலசீமையில் அவர் கிராமம் கிராமமாகச் செல்கையில், காய்ந்து கிடந்த வயல்களும், கஞ்சி நிவாரண முகாம்களில் வாடி நின்ற மக்களும், சுருங்கிக் கிடந்த குழந்தைகளும் அவரது இருதயத்தைப் பிழிந்தெடுத்ததை உணர முடிந்தது. தஞ்சைப் புயல் கொண்ட பலி பயங்கரமானது. 340 பேர் உயிரிழந்தனர்; பதினைந்து பேர் காணாமற் போயினர்; ஏராளமான கால்நடைகள் நாசமாயின; பரவலாகப் பயிர்கள் பாழாயின. மக்களின் இன்னல், குறிப்பாக ஏழைகளின் உபாதை, கடற்கரைப் பகுதியில் வசித்த மீனவர் முதலிய கிராமவாசிகளின் துயரம் சொல்லத்தரமன்று. இயற்கையின் இந்த மகத்தான உற்பாதத்துக்கிடையிலும் மக்கள் காட்டிய நெஞ்சுரத்தை, தன்னம்பிக்கையை, ஒழுக்க நெறியைக் கண்டு ராஜாஜி களித்துருகினார். அதை உணர்ச்சி வசப்பட்டுப் பாராட்டினார். தலைநகருக்குத் திரும்பியவுடன் முதல் காரியமாக உதவித் தொகையைத் தாராளமாக உயர்த்தினார்; அதோடு அந்த உதவித் தொகை உண்மையில் அவதிப்படுபவர்களின் கைக்கே போய்ச் சேருகிறது என்பதை நிச்சயப்படுத்துவதற்குக் கண்டிப்பான நடவடிக்கையும் எடுத்தார்.

1952ல் நடந்த தேர்தலை அடுத்து மாநிலம் இருந்த நிலைமை நிலைகுலைவு என அவசியம். அரசியலில் பெரிய குழப்பமே ஏற்பட்டிருந்தது. ஸ்திரமான மந்திரி சபை அமைக்கிற அளவுக்கு எந்தக் கட்சியும் பலம் பெற்றிருக்கவில்லை. காங்கிரஸ் கட்சி ஏகப்பட்ட கோஷ்டிப் போட்டியிலும் சட்டசபையிலும் பிளந்து கிடந்தது. கம்யூனிஸ்ட் ஆபத்தும், மற்றும் பல நாசகரச் சக்திகளும் வளர்ந்து வந்தன. உணவுத் தட்டுப்பாடு, தானியக் கட்டுப்பாட்டின் அதிருப்தியான போக்கு, பஞ்சம் இவற்றோடு தனி ஆந்திர மாநிலக் கிளர்ச்சியும் சேர்ந்து மாநிலம் பல்வேறு பிரச்னைகளிடை சிக்கித் தவித்தது. இவை எல்லாவற்றையும்விட மோசமான அம்சம், அரசாங்கத்திடம் பொதுமக்களின் நம்பிக்கை மிகவும் குறைந்து போயிருந்தது. இந்த நெருக்கடிக் கட்டத்தில் மக்களின் நம்பிக்கையை நன்றாகப் பெற்று மாநிலத்தைக் காக்கக்கூடிய ஒரே ஒருவர் ராஜாஜிதான் என்று சகலரும் ஒருமனதாக உணர்ந்தனர். முன்னொரு காலத்தில் இருப்பாரங் குன்றத்தில் ராஜாஜி துவேஷத்தைச் செயலாக்கிய 'வீரர்' களும்கூட இப்போது அவரையே மாநிலத் தலைமையை ஏற்கச் செய்ய வேண்டும் என்று விரும்பினர்! காலச் சக்கரம் ஒரு சுற்றுச் சுற்றித் தன் வினையை முழுதும் செய்துவிட்டதாகத் தெரிந்தது! இச்சந்தர்ப்பத்தில் ராஜாஜியின் உயர்நிலையில் இல்லாத இன்னொருவராக இருந்தால், பழிக்குப் பழி வாங்குவது பற்றி எண்ணித் தலைமை ஏற்க மறுத்திருப்பார். ராஜாஜி நிலைமைத்தை அப்படியே உள்ளீடு ஏற்றுக் கொண்டு, சுருக்கமாகக் கூறினார்: ''நான் மாநிலத் தலைமை ஏற்றால் (கிரேக்கப் புராண வீரரான) ஹெர்குலிஸ் செய்ததைவிடப் பெரிய சாகஸத்தைச் செய்ய வேண்டியிருக்கும் என்று நண்பர் ஒருவர் கடிதம் எழுதியிருக்கிறார். அதை நானும் உணர்ந்திருக்கிறேன். இப்பணியை மேற்கொள்வது பொருத்த இடர்ப்பாடுகளைக் கொண்ட காரியம் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் எந்த சிரமத்தையும் ஏற்குமாறு கடமை உணர்வு நிர்ப்பந்திக்கிறது.'' அன்றைய நிலையில், ஏகோபித்த வேண்டுகோளை ஏற்க மறுத்தால், ''அது இதயமற்ற செயலாகும்'' என்றார் ராஜாஜி.

மகா பலசாலிகளும் நடுங்கக்கூடிய பணியை ராஜாஜி தம் மீது சுமத்திக் கொண்டார். ராஜாஜியின் தலைமையில் செயலாற்றிய இந்த இரண்டாவது அமைச்சரவையின் பணி ஒரு தனி இதிகாசமாக விரியும்.

ஒவ்வொன்றும் அந்தந்த பிரச்னைகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன; தீர்த்து வைக்கவும் பட்டன. மக்களின் நம்பிக்கை புத்துயிர் பெற்றது. அதிருப்தி ஓட்டம் பிடித்தது. நாசகரமான கம்யூனிஸ்ட் சக்திகளை அவர் எதிர்த்து அடக்கிய அருமை அவரது பதவிக் காலத்தை ஒளி மயமாக்கியது.

சட்டசபையின் காரசாரமான விவாதங்களில் அவர் கொண்ட பங்கினை நான் ஆர்வ உணர்ச்சியுடன் கவனித்து வந்தேன். சட்ட சபையாளரில் நமக்கு நிகர் வேறுயிலரே என்று நிரூபித்தார். அவரது வாதத்திறன், வளம் செறிந்த கருத்துச் செறிப்பு, பதிலடி கொடுப்பதில் துடிப்பு — இவை பிரமிப்பூட்டுபவையாகும். எதிர்க்கட்சி வாதங்கள் மீது இவரது வாதம் உலக்கை போல் விழுந்து நொறுக்கும்; அல்லது கூர்வாளாகத் துளைத்து அறுக்கும்.

அவரது தேர்ந்த ஆற்றலால் வெகு விரைவிலேயே மாநிலத்தின் நெருக்கடி மறைந்துவிட்டது! மக்களுக்கு நிம்மதி பிறந்தது. நிர்வாகத்தின் தேறி அற்புதமாக உயர்ந்தது. இவை இத்துணை விரைவில் நடந்த விந்தையை அனைவரும் போற்றிப் புகழ்ந்தனர்.

ஆனால் நெருக்கடியின் உச்சகட்டத்தின்போது அடியோடு புதைந்து கிடந்த சக்திகள் இப்போது தலைதூக்கத் தொடங்கின. மீண்டும் துவேஷ இயக்கம் தொடங்கப்பட்டது. சொந்த ஜோதாவில் ஆனைப்பிறர் பெருமையை உடைத்தெறிய அரசியல் 'நாஸ்திகம்', வகுப்புவாதம், சாதிவாதம் — எல்லாம் சேர்ந்து கொண்டன. பலவிதங்களில் சுயநலங் கருதும் கூட்டங்கள் தூபமிட்டன. அப்போது கிளப்பப்பட்ட அபவாதப் பிரசாரம் கண்டு ராஜாஜியின் இரும்பை நிகர்த்த சங்கற்ப பலமும், கடமையிலிருந்து இம்மியளவும் பிறழா உணர்வும்கூடச் சாம்பிவிட்டன!

இந்த நெரிசலில், 1954 தொடக்கத்தில், ராஜாஜியின் உடல் நலம் மிகவும் மோசமாகி விட்டது. சில நாட்கள் சட்டசபைக்கே அவர் வரமுடியாமற் போயிற்று. அவரது ஆரோக்கியக் குறைவு பற்றியும், மந்திரி சபையிலிருந்து விலக அவர் முடிவு செய்துவிட்டதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாயின. இச்செய்திகளில் சில அவரைத் தரும சங்கடத்தில் வைத்ததாகவும் தெரிந்தது. மார்ச் மாத முடிவில் தாம் பதவியை விட்டு விட விரும்புவதாகச் சட்டசபையில் அறிவித்துவிட்டார். அது பற்றி ''ஹிந்து'' அறிக்கை கூறுவதாவது: ''ரத்தசோகையாகவும், பலவீனராகவும் காணப்பட்ட ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் கழுத்தையும் தோளையும் கம்பளிச் சால்வையால் போர்த்திக் கொண்டு மெல்ல மெல்லச் சட்டசபை வராந்தா வழியாக வந்தார். சட்டசபை காலரி உள்பட எல்லாப் புறங்களிலிருந்தும் தானாகவே ஆரவாரம் பொங்கி வெடித்தது. தமது உடல் நிலைமையை முன்னிட்டுப் பதவியிலிருந்து விடுபட விரும்புவதாக அவர் சட்ட சபைக்குத் தெரிவித்தார். சட்டசபையின் பல பிரிவுகளிலிருந்து அவர் இம்முடிவை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று யோசனை விடுக்கப்பட்டது. ஆனால் அவர் தமது முடிவையே தீர்மானமாக வைத்துக் கொண்டு விட்டார். அவர்களது கோரிக்கைகளுக்குப் பதிலாக அவர், 'சரீரம் என்கிற கூட்டுக்கு அத்தியாவசியமான ஓய்வை அதற்குத் தந்தே ஆக வேண்டிய ஒரு கட்டமும் உண்டு' என்று சுருக்கமாகக் கூறினார். சட்டசபையினர் அனைவரும் தம்மிடம் ஏராளமாகக் காட்டி வந்த மரியாதைக்கும், அன்புக்கும் நன்றி தெரிவித்தார்.''

மின்வெட்டுடன் ஒரு காட்சியை வெட்டு!

மின்சார வெட்டினால் லாபம் சம்பாதிப்பவர்கள் சினிமாத்தியேட்டர்க்காரர்கள். மின் விசிறி ஏர் கண்டிஷனர் எதுவும் போடாமல் பழைய கட்டணம் வசூலித்து விடுகிறார்களே! பதிலாக ஒரு காட்சியை நிறுத்திவிடலாமே!

டெக். ஜெரால்ட் - 'பாலி'



சில நாட்களுக்குப் பிறகு தியாகராய நகரில் அவரது இல்லத்தில் அவரைச் சந்தித்தேன். ஒரு சாதாரணப் பிரம்பு நாற்காலியில் அமர்ந்திருந்தார். சுற்றிலும் புத்தகங்கள். ஒருசில செய்திப் பத்திரிகைகளும் இருந்தன. கைக்கெட்டும்படி காகிதங்கள், பேனா எல்லாம் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. நாற்காலிக்குப் பக்கத்திலுள்ள குட்டி மேஜையின் மீதிருந்த கம்ப ராமாயணப் புத்தகத்தின் இடையிலிருந்து நீட்டிக் கொண்டிருந்த அடையாளத் துண்டு, அவர் அதைத்தான் மும்முரமாகப் படித்துக் கொண்டிருக்கிறார் என்று அறிவித்தது. ரோமாபுரியைச் சேர்ந்த மகா புருஷன் ஒருவன் அந்த ராஜ்யத்தின் ஆட்சி மன்றத்தில் தன் கடமையை ஆற்றிய பின் தன் விவசாயப் பண்ணைக்குத் திரும்பி ஏர்க்காலை எடுத்துக் கொண்டதாக என் கல்லூரி நாட்களில் படித்தது நினைவுக்கு வந்தது.

கீதை கூறும் கர்மயோகிக்கு, இந்தப் பிரக்ருதிக்கு ஓர் உண்மையான உதாரணம் ராஜாஜி. கீதையை ஆழ்ந்த பற்றுடன் படித்து விளக்கி இருப்பவராயிற்றே! அவர் சர்வ சக்தி வாய்ந்த ஒரு பரம்பொருளிடம் ஆழ்ந்து வேரோடும் நம்பிக்கை கொண்டவர். பக்தி செலுத்துவதற்குப் பல சம்பிரதாயங்களும் சடங்குகளும் 'அவசியம்' என்று பொதுவாக நினைக்கப்படுகின்றன. ராஜாஜியின் தெய்வீகமான பக்தியோ இவற்றையெல்லாம் கடந்து மேம்

பட்டது. 'மராட்டா' பத்திரிகை அவரைப் பற்றி எழுதியது குறிப்பிடத்தக்கது. ''கல்வி, இலக்கியம், தத்துவம் ஆகியனவற்றை வளமுறச் செய்து, மனித வாழ்வின் ஒழுங்கு நெறி, ஆன்ம நலன் இரண்டையும் செழிப்புறச் செய்த ரிஷிகளையும் ஞானிகளையும் சேர்ந்தவர் ராஜாஜி'' என்றது 'மராட்டா'.

புனிதமான பூஜை என்றே சொல்லக்கூடிய ஒரு ரசமான அநுபவம் என் நினைவில் மிளிர்கிறது. 1952ல் பஞ்சச் சூழலில் அவர் பதவி ஏற்றிருந்தார். அப்போது அவர் நிகழ்த்திய முதல் பிரசங்கத்திலேயே மழை வேண்டி மக்கள் இறைவனுக்குப் பிரார்த்தனை புரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மழை இல்லாத பட்சத்தில், அரசாங்கம் எத்தனைதான் பஞ்ச நிவாரணப் பணி செய்தாலும் பயன்படாது என்றும், மழைபொழிய இறைவனையே வேண்டிக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார். ராமநாதபுரமாயினும் சரி, ராயலசீமையாயினும் சரி, அவர் எங்கு சென்றாலும் உண்மையான பிரார்த்தனைக்கு இறைவன் செவிசாய்ப்பான் என்பதையே வலியுறுத்தி மக்களின் துயர் தீர இறைவனை வேண்டிக் கொள்ளச் சொன்னார். ராயலசீமையில் ஜூன் மாதத்தின் போக்கும் வெயிலில் மூன்று முழு நாட்கள் காலையிலிருந்து சூரியன் அஸ்தமிக்கும் வரையில் ஒவ்வொரு மாவட்டமாகச் சுற்றுப் பயணம் செய்தார். காதம் காதமாகக் கடந்தாலும், கதிரவன் வறுத்தெடுத்த அதே காய்ந்த நிலம் தான்; அரைப் பட்டினி கிடந்த அதே மக்களின் பட்டாளம்தான். ராஜாஜியின் உடலும் உள்ளம் இரண்டும் துவண்டன. சித்தூரை நெருங்குகிறோம். வருண பகவானுக்கும் மனமிளகியதாகத் தோன்றியது. தலைக்கு மேல் கருமேகங்கள் சேரத் தொடங்கின. சித்தூர் நகரில் ராஜாஜி பொதுக்கூட்டத்தில் பேசத் தொடங்குகையில் பூஞ்சிதறலாகத் தூற்றலும் தொடங்கியது.

ராஜாஜியின் மனம் பிரார்த்தனையில் தோய்ந்துவிட்டதாகத் தெரிந்தது. புனித உணர்ச்சி செறிந்த வேதனைக் குரலில் அவர் பேசினார்: ''மழை ஒன்றுதான் உங்கள் கஷ்டத்துக்கு நிவாரணம் தரும். மழை பொழியட்டும். மேலும் பொழியட்டும். பிரசங்கம் எதுவுமே தேவை இல்லை. இப்போது மழை கொட்டினால் அதுவே எனக்குப் பரம சந்தோஷம். மழை செய்வதில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட என் பிரசங்கம் செய்யாது. ஆனபடியால் மழை பொழிந்தாலே எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியாகும். மழை பொழியட்டும், மேலும் பொழியட்டும்....''

தூற்றல் நின்றுவிட்டது. எத்தனை வேகமாக வந்ததோ அத்தனை வேகமாக நின்றது. கைப் பிடியில் அகப்பட்ட ஒரு விலைமதிக்க வொண்ணாப் பரிசு திடுமெனப் பறிபோனதுபோன்ற உணர்ச்சி ராஜாஜிக்கு உண்டாயிற்று.

பிரார்த்தனை மயமாகப் பேச்சை மீண்டும் தொடர்ந்தார்: ''மக்கள் படும் துயரத்தைப் பார்த்தேன். பஞ்ச நிலை அதிக நாள் நீடிக்க நீடிக்க அவர்களது வறுமையும் துயரமும் மேலும் மேலும் உக்கிரமாவதைப் பார்த்தேன். துரதிருஷ்டசாலியான இந்த முதன் மந்திரி தமது பாபங்களுக்கு உரித்தான சாபங்களைப் பெறுவதற்காகப் பகவானால் இந்த ஸ்தானத்தில் அமர்த்தப்பட்டிருக்கிறார்..... ஆனால் கருணையும் தயையும் கொண்ட பகவான் கிருபை செய்வாராயின், இந்த முதன்மந்திரிக்கு வெகுமதியும் கிடைக்கும். பகவான் நமக்கு மழை தருவாராக.''

உடனே மீண்டும் தூறல் தொடங்கியது.

தூறல் வலுத்தது. நல்ல மழையாகவே வலுத்தது. எல்லோரும் சொட்டச் சொட்ட நனைந்தோம். மக்கள், நிருபர்கள், முக்கியஸ்தர்கள், ராஜாஜி எல்லோரும் அடியோடு நனைந்தோம். தமது வஸ்திரங்களிலிருந்து நீர் பெருகி ஓடியபோதிலும் அவர் அசையாமலே நின்றார். அவரைப் பார்த்துக்கொண்டே கூட்டம் கலையாமல் நின்றது. ராஜாஜி உரையைத் தொடர்ந்தார். சற்றுமுன் அவர் குரலில் தொனித்த வேதனை அழுத்தம் இப்போது மறைந்துவிட்டது. மாறாக ஆனந்தம் மேலிட்டிருந்தது. ''எத்தனைக்கெத்தனை மழை பெய்கிறதோ, அத்தனைக்கத்தனை மக்களுக்கு இன்பம் அதிகமாகும். பகவான் நம் பிரார்த்தனையைக் கேட்டு நிறைவேற்றுகிறார் என்பதில் என் மகிழ்ச்சி சொல்லி முடியாது'' என்று கூறி அந்தப் பொதுக் கூட்டத்தை அதோடு முடித்துவிட்டார். அவர் நிகழ்த்திய உரைகளில் அதுவே மிகச் சிறியதாக இருக்கக் கூடும். ஆனால் அதுவே இன்றும் என் நினைவில் பச்சைப்பசேல் என்று நிலைத்திருக்கிறது.

* * *

பதவி துறந்தபின் ராஜாஜி ஒரு ராஜதந்திர வல்லுநராகவும், முனிவராகவும், ஞானியாகவும் ஓங்கி உயர்ந்திருக்கிறார். காலத்தின் போக்கில் அவரது மனிதாபிமானத்தின் வீச்சு மேலும் மேலும் பரந்து விரிந்திருக்கிறது. தம் தாய்நாட்டினருக்கு யதேச்சாதிகாரப் போக்குகள் வலுத்து வருவதன் ஆபத்தை எச்சரித்துச் சற்றும் சளைக்காமல் பிரசாரம் செய்து வருகிறார். சர்வதேசங்களுக்கும் அணு ஆயுத ஆபத்தை எச்சரித்து வருகிறார். எண்பதாண்டுகளுக்கு மேற்பட்ட பருவத்தில் ஏழு கடல் கடந்து சென்று, மனித குலத்தை நெரித்துச் சூழ்ந்துள்ள அணு ஆயுத ஆபத்தை எதிர்த்துப் புனிதப் போராட்டம் நடத்தினார். காந்திய இலட்சியங்களை அவர் பின்பற்றும் பாங்குக்கு இது ஓர் அற்புத நிறைவேற்றமாக இருந்தது.

அவரது பணி இன்னமும் தீவிரம் குன்றாமல் தொடர்ந்து நடைபெறுகிறது. புனிதப் போராட்டம் நடத்தும் மகா வீரர் தொண்ணூற்று நான்கு வயது வாலிபராகவே இருக்கிறார்!




நியூட்ரின்
வண்ணம்
தீட்டும்
போட்டி!
444
மத்திரைப்
பரிசுகள்
பெறலாம்!
போட்டி
முடிவு தேதி
டிசம்பர் 31, 1972
வயதுக்கேற்ப,
மூன்று குழுக்கள்:
முதற் பரிசுகள்-3
இரண்டாம் பரிசுகள்-9
மூன்றாம் பரிசுகள்-99
மற்றும் 333 சிறப்புப் பரிசுகள்
மிகவும் சுலபம்!
NCH-39A/72 TAM

பாஸ்கர் பல்லை நறநறவென்று கடித்தான். (அது எப்படி என்று என்னைக் கேட்காதீர்கள்) அவன் மீசை படபடவென்று துடித்தது. (அதுவும் எப்படி என்று தெரியாது) கண்கள் கனலைக் கக்கின.

விஷயம் என்ன என்கிறீர்களா? அன்று காலை அவன், சூடான செய்திகளைச் சொரு



நிலாவுக்கு காரில் ஒரு லிஃப்ட்!

சாகத் தரும் தினசரி ஒன்றில், 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' பகுதியில் வெளியாகியிருந்த ஒரு கடிதத்தைப் படித்ததன் பலன்தான் மேற்படி வர்ணனை. அது என்ன கடிதம்?

வாலிபர் உலகே! முன்னேறுவாயா?

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். வர வரச் சென்னை வாலிபர்கள் மிகவும் மோசமாகி விட்டார்கள். என் போன்ற அழகான இளம் பெண்கள் காரில் லிஃப்ட் கேட்டால் மறுக்காமல் கொடுக்கிறார்கள். உதாரணமாய், நேற்று மாலை மூர்மார்க்கெட் அருகே ஃபோர்டு காருக்குச் சொந்தமான இளைஞர் ஒருவர் எனக்கு ஸ்பென்ஸர் வரையில் லிஃப்ட் கொடுக்க முன்வந்தார். ஆனால் அவர் காரே நகரவில்லை. அது வேறு விஷயம். ஆனால் அதே இளைஞர் தொண்டு கிழவி ஒருத்தி லிஃப்ட் கேட்டிருந்தால் கொடுத்திருப்பாரா? சந்தேகம்தான். எனவே, நம் நாட்டுப் பண்பு வளர, நமது வாலிபர் உலகம் முதலில் பண்பட வேண்டும்.

இந்திரகலா,
சென்னை — 24


பேப்பரைக் கசக்கி மூலையில் விசிறி எறிந்தான் பாஸ்கர். "இருடி, இந்திரகலா.. இரு.. இரு... இன்று மாலை வந்து உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்" என்று வேகமாய்க் குளியலறையில் நுழைந்தவனுக்கு முந்திய நாளில் நடந்த நிகழ்ச்சிகள் நினைவுக்குவந்தன.

அன்று காலை, மூர்மார்க்கெட்டின் பழைய புத்தகக் கடைகளை அலசோ அலசு என்று அலசித் தனக்குத் தேவையான ஏழெட்டுச் சட்டப் புத்தகங்களை வாரி எடுத்துக்கொண்டு தன்னுடைய திரேதா யுகத்துத் தன்னுமாடல் காரை அணுகினான் பாஸ்கர். புத்தகங்களைப் பின் ஸீட்டில் தள்ளிவிட்டுக் காரை வலம் வந்து அதனுள் ஏறப் போனவன் நிலை மயங்கி, பொறி கலங்கி, விழி பிதுங்கி அசையாது நின்றுவிட்டான். காரணம்?

அவன் காருக்கு அருகே நின்றிருந்த அவள்தான்.

வெண்ணாற்றுப் படுகையில் வெடுக்கென்று பிடுங்கப் பட்ட வள்ளிக்கிழங் கைப்போல் மொழு மொழு வென்றிருந்த அவள் உட லும். அதில் கொடி யாய்ப் படர்ந்திருந்த ஜார்ஜெட் டும், மைதீட்டிய அகன்ற விழிகளும், எல்லோரா கொண்டையும்.....

அவள் மானிடப் பெண்தானா?



கேசி

பாஸ்கர் தொடையில் 'நறுக்' கென்று கிள்ளிப் பார்த்துக் கொண்டான். பிரமாதமாய் வலித்தது! தன் பவளச் செவ்வாய் திறந்து வீணையை மீட்டினாள் அவள்! (அது எப்படி வாயைத் திறந்து வீணையை மீட்ட முடியும் என்று கேட்கிறீர்களா? அது வேறொன்றுமில்லை. அவள் குரல்...!)

''சார்....ப்ளீஸ்... நீங்கள் மவுண்ட் ரோடு வழியாய்ப் போனால்.... தயவு செய்து ஸ்பென்சர் வரை லிப்ட் கொடுக்க முடியுமா?''

திரும்பிப் பரிதாபமாய்த் தன் காரை ஒருமுறை பார்த்துப் பெருமைப்பட்டுக் கொண்டான் அவன். 'ஏ, அல்ப காய லாங்கடை ஃபோர்டே! நீ என்ன புண்ணியம் செய்தனை, இந்த எந்திழையாள் மாந்தளிர் மேனியைச் சுமக்க' என்று ஒரு முறை மனத்துக்குள் சொல்லிக் கொண்டான்.

மறுநொடியே, ''ஓ! எஸ், அதற்கென்ன, ஏறுங்கள். ஸ்பென்சர் என்ன? வின்சென்ட் வரை வேண்டுமானாலும் கொண்டுபோய் டிராப் பண்ணுகிறேன்'' என்றபடி பின்பக்கக் கதவைத் திறந்து விட்டான்.

தன் கையில் வைத்திருந்த புத்தகத்தை மார்போடு

அணைத்தபடி ஸ்டைலாய்க் காரினுள் ஏறி அமர்ந்தாள் அவள்.

இந்தக் கார் எங்கே தன் மூக்கை உடைத்து விடப் போகிறதோ என்று பயந்து தன் இஷ்ட தேவதைகளை வேண்டியபடி 'இக்னிஷன் கீயை'த் திருப்பினான் பாஸ்கர்.

'கர்ர்ர்ர், புர்ர்ர்ர்'ரென்று ஏதேதோ விநோத சப்த ஜாலங்களையும், ஒரு வண்டிப் புகையையும் எழுப்பியபடி 'போர்டு' ஜம்மென்று கிளம்பிவிட்டது! பாஸ்கர் தலைக்கு மேலே தூக்கி ஒரு பெரிய கும்பிடு போட்டு விட்டு ஆக்ஸிலேட்டரை அழுத்தினான்.

சற்றுத் தூரம் போவதற்குள் கார் நின்று விட்டது. அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. முடுக்கி, உதைத்து, கிள்ளி, கீறி, திருகி என்னென்னவோ செய்து பார்த்தான். கார் கிளம்புவேனா என்று அடம் பிடித்தது.

"சே... சே.... நீங்கள் உட்காருங்கள். இதோ ஒரு செகண்டில் கிளம்பிவிடும்!" என்று பின் சீட்டுப் பேரழகியிடம் கூறிவிட்டுக் காரை விட்டு இறங்கினான்.

அவனுக்குத் தெரியும், நிச்சயம் இரண்டு ஆட்களாவது தள்ளினால்தான் அவனுடைய ஃபோர்டு கார் கிளம்பும் என்று. யாரையாவது இரண்டு ஆட்களைக் கூட்டி வரலாம் என்று வேகமாக ஓட்டமும் நடையுமாய் ஓடினான்.

மார்க்கெட் முனை திரும்பி இருப்பான். 'டமார்' என்று எதிரே வந்து கொண்டிருந்த கிழவர் ஒருவருடன் மோதி அவர் கீழே விழுந்து விட்டார். அவரைத் தூக்கியெடுக்க முயன்றபோது அவன் கையோடு அவர் கோட்டு 'டர்'ரென்று வந்து விட்டது.

'சாரி' என்று ஏதேதோ மன்னிப்புக் கேட்டுக் கொண்டு கிழவரை மெதுவாகத் தூக்கி விட்டான்.

தள்ளுவதற்கு ஆட்களை அழைத்துக் கொண்டு வந்தபோது அவன் கார்....

அங்கேயே நின்று கொண்டிருந்தது.

அவள்.... பின் சீட்டுப் பேரழகி....!

அவளைக் காணோம்!

பாஸ்கர் சட்டென்று காரின் பின்னுலிருந்த புத்தகக் குவியலைப் பார்த்தான். 'ஹிண்டு ஜாயிண்ட் ஃபேமிலி ஸிஸ்டம்'த்தைப் பற்றிய ஒரு சட்டப் புத்தகமும், இன்னொரு வருமான வரி சம்பந்தமான புத்தகத்தையும் காணோம்! அவனுக்குப் பகீரென்றது. அவனது சீனியர் கண்டித்துச் சொல்லியிருந்தார், வருமான வரி பற்றிய புத்தகம் அவசியம் என்று.

பாஸ்கர் கைகளைப் பிசைந்து கொண்டான். சடக்கென்று மூர் மார்க்கெட்டில் நுழைந்து மறுபடியும் நுழைந்து அதே புத்தகத்தில் இன்னொரு காப்பிக்குத் தண்டம் கொடுத்து வாங்கிக் கொண்டு வந்தான். அவன் அன்றிரவு புத்தகங்களைச் சரிபார்த்தபோதுதான் தெரிந்தது, காரில் வந்தவள் ஞாபக மறதியில் தன் கையிலிருந்த இரண்டு புத்தகங்களை வைத்து விட்டு அவன் புத்தகங்களை எடுத்துச் சென்றிருக்கிறாளென்று! அவள் விட்டுச்சென்ற புத்தகங்களில் அவள் வீட்டு விலாசம் இல்லை!

காலையில் பேப்பரைப் பார்த்தவுடன் நேரே அந்தப் பத்திரிகை ஆபீஸுக்கு ஓடி அவள் வீட்டு விலாசத்தைத் தெரிந்துகொள்வதற்குள் அவனுக்குப் போதும் போதுமென்றாகி விட்டது.

அடையாற்றில் அந்தப் பங்களாவின் போர்ட்டிகோவில் தனது அருமை வாகனத்தை நிறுத்திவிட்டு, உள்ளே நுழைந்தவன், ஒரு கணம் தான் வந்த காரியம் என்ன என்பதையே மறந்து போனான்.

★ ருஷ்யாவுக்கும் கிழக்கு ஜெர்மனிக்கும் சென்று கர்நாடக இசைக் கச்சேரிகள் செய்து புகழோடு திரும்பியுள்ள லால்குடி திரு ஜெயராமன், உமையாள்புரம் திரு சிவராமன், திரு விநாயகராம் ஆகியோருக்குப் பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்திய - ருஷ்ய, இந்திய - ஜி. டி. ஆர். நட்புக் கழகங்கள் நடத்திய இவ்விழாவில் திரு ஜெயராமன் அருமையாக வயலின் வாசித்ததோடு தாம் தயாரித்து வந்திருந்த ஆங்கில உரையையும் வாசித்தார். கிழக்கு ஜெர்மனியில் ஒரு நகரில் வித்வான்களை ஆடிப் பாடி மக்கள் வரவேற்ற உற்சாகத்தையும், அவர்கள் மறைந்த மேதைகளான தங்கள் இசைக் கலைஞர்கள் வாழ்ந்த இல்லங்களைக் கண்காட்சிகளாகவே மாற்றிவிட்டிருக்கும் அழகையும் விசேஷமாக எடுத்துக் கூறினார்.

★ கிரீஷ் கார்னட் நியூயார்க்கில் ஒரே மாதத்தில் பதினைந்து நாடகங்களையும் முப்பது திரைப் படங்களையும் பார்த்து ரிகார்ட் ஏற்படுத்தியிருக்கிறார். இவர் "ஸம்ஸ்காரா" என்ற திரைப் படத்தை எழுதி அதில் நடிக்கவும் செய்தார். இப்படம் லோகார்னோ திரைப்பட விழாவில் வெண்கலப் பதக்கம் பெற்றது.

அமெரிக்க சர்க்காரின் அழைப்பின்பேரில் கலாசார பரிவர்த்தனைத் திட்டத்தின்கீழ் அமெரிக்கா சென்றுள்ள கார்னட் இரண்டு மாதச் சுற்றுப்பயணத்தில் திரைப்பட நாடகத் தயாரிப்பு நுணுக்கங்களை நேரில் கண்டறிவார். ஏராளமான நாடகக் குழுக்கள் தவிர நாடகத் துறையின் பல்வேறு அம்சங்களைப் போதிப்பதற்கென்றே ஏற்பட்ட அறுபது நிறுவனங்கள் அந்நாட்டில் உள்ளன. இவை தவிர ஆயிரம் கல்லூரிகளில் நாடகத் துறை சம்பந்தப்பட்ட ஓரிரு அம்சங்களைக் கற்றறியும் வாய்ப்புகள் உள்ளன.

கிரீஷ் கார்னட் தமக்குள்ள இரண்டுமாத அவகாசத்தில் பலவற்றைப் பார்த்துவிட்டுக் கூழாங்கல்லை உடன் கொண்டுவந்த உணர்வைத்தான் பெற முடியும். அந்தமட்டும் லாபம்!









★ காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்த திரு கிருஷ்ணமூர்த்தி சென்னை சித்திரக் கல்லூரியில் முதல் வகுப்பில் முதல் ராங்கில் வந்தவர். ''ஸ்வீடன், டென்மார்க், அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளுக்கு என் சித்திரங்கள் எக்ஸிபிஷனுக்குப் போயிருக்கின்றன. நான் இன்னும் போகவில்லை!'' என்கிறார் திரு கிருஷ்ணமூர்த்தி அடக்கமாக. அமெரிக்காவில் டாக்டர் வாலஸ் பாக்ஸ் பரிசு இவரது சித்திரங்களுக்கு இரண்டு ஆண்டுகள் கிடைத்துள்ளது.

சென்னை மியூசியம் நூற்றாண்டு மண்டபத்தில் இவரது சித்திரக் கண்காட்சியில் கால் சதம் படங்கள் இடம் பெற்றன.

இவரது மாடர்ன் ஆர்ட் சித்திரங்களில் ஒரு வேகமும் ஒவ்வொரு பாத்திரத்திலும் செயல் துடிப்பும் இருப்பதைக் கண்டோம்.



★ எந்தப் பொருளையும் ஏற்றுமதி செய்யாமலேயே அந்நியச் செலாவணி சம்பாதித்துத் தரும் தொழில் ஒன்றுண்டு. அதுதான் ''டூரிஸம்.''

அயல்நாட்டுப் பிரயாணிகளைச் சுற்றுலாவுக்காக நம் நாட்டுக்கு ஈர்த்து அதன்மூலம் நாம் ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்: நல்லெண்ணம். 'சொர்க்க பூமி' என்று அழைக்கப்படும் நாடு ஸ்விட்ஸர்லாந்து, தன் வருவாயில் ஐம்பது சத விகிதம் சுற்றுலாப் பிரயாணிகளிடமிருந்து பெறுகிறது. நம் நாட்டிலும் அன்னிய நாட்டினருக்குக் கலைச் செல்வங்களைக் காட்டி, வருவாயைப் பெருக்கச் சமீப காலத்தில் பெருமுயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இதையொட்டி அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும், இங்கிலாந்துக்கும் அறுவர் அடங்கிய சுற்றுலாத் தொழில் மிஷன் சென்று இரண்டு மாத காலம் சுற்றிவந்து இந்தியாவுக்கு அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டது. இந்தச் சுற்றுலா மிஷனில் கலந்துகொண்ட ஒருவர் தமிழ்நாடு ஹோட்டல், ரெஸ்டாரண்டுகளின் பெடரேஷன் தலைவர் திரு பி. ஆனந்த ராவ்.

மேலே மாடியிலிருந்து வ(ா)ன தேவதையாய் இறங்கி வந்து கொண்டிருந்தாள் அவள்.

எங்கோ சித்தாரில் 'டிர்ர்ர்ர்ரிங்' என்று நரம்புகளை வருடி ஒலி எழுப்பினார்கள்.

''அடேடே.... வாருங்கள்... வாருங்கள்... எங்கள் வீட்டு விலாசம் எப்படித் தெரிந்தது உங்களுக்கு? உட்காருங்கள்.''

'நைட்டிங்கேலா'ய்த் தேனை வடித்தாள் அவள். மயங்கிவிடுவானா பாஸ்கர்?

''ஆஹா... நன்று யிருக்கிறது மிஸ் அல்லது மிஸஸ் இந்திர கலா. செய்வதெல்லாம் செய்து விட்டு இப்படிப் பசப்பல் வேறேயா? உங்களைப் போன்ற அழகான இளம் பெண்கள் கேட்டால்தான் லிப்ட் கொடுக்கிறோமா? தொண்டு கிழவி கேட்டால் கொடுப்பதில்லையா?... ம்ம்.... ஆமாம், நீங்கள் எல்லாம் ஏன் வாலிபர்களிடமே 'லிப்ட்' கேட்கிறீர்கள்? எவனாவது கிழவன் கார் ஓட்டிக் கொண்டு போனால் 'லிப்ட்' கேட்பதுதானே?''— பொரிந்து தள்ளினான் பாஸ்கர். பத்துப் படி பட்டாணி படு ஈசியாய்ப் பொரிந்துவிடும் அவன் பேச்சில். அப்படி ஒரு சூடு.

''என்ன பேசுகிறீர்கள் நீங்கள்?''

''உங்களுக்கா ஒன்றும் விளங்கவில்லை? இதோ பாருங்கள்!'' என்றபடி கையோடு கொண்டு வந்திருந்த அந்தத் தினசரியை வீசினான்.

பறந்து வந்த பத்திரிகையைப் பாவை பார்த்தாள்; படித்தாள்... சிரித்தாள்.

''இது தாத்தாவின் வேலையாயிருக்கும்.''

''யார் தாத்தா, என்ன தாத்தா, என்ன வேலை? அவர் ஏன் இதைச் செய்யவேண்டும்?'' குதித்தான் பாஸ்கர்.

''ஐயோ...முதலில் நீங்கள் உட்காருங்களேன். சொல்கிறேன். முந்தாநாள் இரவே வீட்டில் தாத்தாவுக்கும் மற்றவர்களுக்கும் தகராறு. இந்தத் தாத்தா இருக்கிறாரே, அவர் வேறு வேலை எதுவுமே உலகத்தில் இல்லாததுபோல், இந்தப் போஸ்டேஜ் ஸ்டாம்புகளைச் சேகரித்து, சேகரித்து ஒட்டி ஒட்டி அழகு பார்த்துக் கொண்டிருப்பார். பெரிய 'ஃபிலாட்டலிஸ்ட்' என்று அவருக்கு மனத்துக்குள் எண்ணம். எங்கள் பாட்டிக்கும் அவருக்கும் அது விஷயமாய்த் தகராறு முற்றிப் பாட்டி அவர் வசம் வைத்திருந்த ரெண்டு பெரிய பைண்டு செய்யப்பட்டிருந்த ஸ்டாம்ப் ஆல்பங்களைப் பிடுங்கி என் கையில் கொடுத்துக் காலையில் மூர்மார்க்கெட்டில் கொண்டு போய் விற்றுத் தொலைத்து முழுகும்படி சொன்னாள். அங்கே அதை ஒரு கடைக்காரனும் சீந்தவில்லை. ஸ்பென்ஸரில் என் ஃப்ரெண்ட் ஒருத்தி பிரெஞ்சுக்காரி இருக்கிறாள். அவளுக்கு இது ஏதும் பயன்படுமா என்று கேட்கலாம் என்று...''

''சரி, 'லிப்ட்' கேட்டீர்கள். அப்புறம் மாயமாய் மறைந்து போய் விட்டீர்களே...''

''என்ன செய்வது? உங்களுக்காக எத்தனை நேரம் காத்திருப்பது? உடன் எழுலே என்று பஸ்ஸுக்கு நின்று போனேன். அவசரத்தில் உங்கள் காரை விட்டுக் கிளம்பியபோது அந்த ஸ்டாம்ப் ஆல்பங்களை விட்டு விட்டு அதற்குப் பதிலாய் அதே போல் பைண்டு செய்யப்பட்டிருந்த வேறு இரண்டு புத்தகங்களை எடுத்துக்கொண்டு வந்து விட்டேன்.''

''ஓஹோ...''

''வீட்டில் ஒரே ரகளை. தாத்தாவுக்கு அந்த ஸ்டாம்ப் ஆல்பம் இல்லாமல் பைத்தியமே பிடித்து விடும் போல் ஆகிவிட்டது. காலையில் இதை விற்பதற்காக மூர் மார்க்கெட் போயிருக்கிறேன் என்று தெரிந்து என்னைப் பிடிப்பதற்காக அங்கு பின்தொடர்ந்து வந்திருக்கிறார். ஆனால் என்னைக் கண்டு பிடிக்க முடியவில்லை அவரால். அவர் வீட்டுக்கு வந்ததும் நடந்ததைச் சொல்லி அநேகமாய் உங்கள் போர்டு காரில்தான் அந்த ஆல்பங்கள் போயிருக்கும் என்றதும்....''

''உங்களுக்குத் தெரியாமலே உங்கள் பெயரில் இப்படி ஒரு கடிதாக எழுதிப் பயல் எப்படியும் சண்டை போட வீடு தேடி வருவான் என்று நினைத்திருக்கிறார், தாத்தா...!''

''கரெக்ட்.''

''பெரிய எமனாய் இருப்பார் போலிருக்கிறதே உங்கள் தாத்தா.''

''அவர்தான் இப்படி யெல்லாம் சிரமப்பட்டார் உங்கள் விலாசத்தைக் கண்டு பிடிக்க. எனக்கு முதலிலேயே தெரியும். உங்கள் கார் டேஷ் போர்டில் பிரிண்ட் செய்து செருகி யிருந்ததே விஸிட்டிங் கார்டு, அதை அப்போதே நான் எடுத்துக் கொண்டு வந்து விட்டேன்'' என்று நாணப் புன்னகை செய்து தலைகுனிந்தாள் இந்திரகலா.

''பின் உடனே ஆல்பம் விஷயமாய் என்னை வந்து சந்தித்திருக்கலாமே!''

''நான்தான் வேண்டாம் என்றிருந்தேன். இரண்டு மூன்று நாட்கள் தாத்தா அந்த ஆல்பம் இல்லாமல் எப்படி இருக்கிறார், பார்ப்போம் என்று. ரொம்பவும் ரகளை செய்தால் உங்களை உடனே சந்திக்கலாம் என்று எண்ணியிருந்தேன். அதற்குள் இவர் இப்படித் தந்திரம் செய்து...''

''ஆமாம்... இப்படி என் காரிலிருந்து எனக்குச் சொந்தமான இரண்டு புத்தகங்களையும் இன்னொன்றையும் திருடிக் கொண்டு வந்து விட்டீர்களே....''

''நான் ஒன்றும் திருடி வந்து விடவில்லை. எடுத்து வந்தவைகளுக்குப் பதிலாக வேறு சிலவற்றை விட்டு வந்திருக்கிறேனே...?''

''எப்படி.... இரண்டு புத்தகங்களுக்குப் பதிலாக இரண்டு ஆல்பங்கள்...என்...என்... இதற்குப் பதிலாக...'' என்றபடி தன் இதயத்தைக் காட்டினான் பாஸ்கர்! பயல் சினிமாப் பார்த்தது ஒன்றும் வீண் போகவில்லை!

அவள் சளைத்தவளா?

''நான் உங்கள் விஸிட்டிங் கார்டை எடுத்து வந்ததே... பின்பு உங்களைச் சந்தித்து...''

''சந்தித்து...''

''வந்து...வந்து...நீங்கள் எனக்குக் காரில் மட்டும்தான் இடம் கொடுத்தீர்களா.... இல்லை.... இல்லை.....'' என்று நாணினாள். (அவள் மட்டும் சினிமாப் பார்க்காதவளா? ஆணுக்குப் பெண் இங்கு தாழ்விலை கண்டீர்!)

''ஓஹோஹோஹோ.... அப்படியா விஷயம்...? பலே பலே....'' என்று மகிழ்ச்சியாய்ச் சிரித்தவன் திடீரென்று மிரண்டான்.

ஐயோ! ஹாலில் தொங்கிக் கொண்டிருக்கும் திரைச் சீலைக்குப் பின்னாலிருந்து வரும் கிழவர் யார்? அவர்... அவர் கோட்டையல்லவா அவன் கிழித்து, அவரைக் கீழே தள்ளி...

'ஹா....!' ஒரே தாவலில் வெளியே ஓடப் போனவனைக் கிழவர் சட்டென்று பிடித்து விட்டார்.

கலா, ''தாத்தா! இவர்தான் எனக்குக் காரில் இடம் கொடுத்தது...'' என்றாள்.

''இதயத்திலும் இடம் கொடுத்து விட்டார் இல்லையா?... எல்லா டயலாக்கையும் கேட்டுக் கொண்டுதாம்மா இருந்தேன்...'' என்றபடி அவர் பாஸ்கரை இன்னும் இறுகப் பற்றிக் கொண்டார்.

''சார்...! என்னை விடுங்கள் தயவுசெய்து நான் அவசரத்தில் உங்கள்மேல் மோதி...''

''அதெல்லாம் சரி.... அந்த ஆல்பம் இரண்டும்....''

''இருக்கு...இருக்கு... காரிலேயே இருக்கு. கொண்டு வந்திருக்கிறேன்.'' கதறினான் பாஸ்கர், அவர் பிடியின் வேகம் தாங்காமல்.

''சபாஷ்!'' என்றபடி பிடியைத் தளர்த்தினார் அவர்.

ஒரே தாவலில் காரிலிருந்து அந்த இரண்டு ஆல்பங்களையும் கொண்டு வந்தான் பாஸ்கர்.

ஆவலுடன் அவற்றை வாங்கிய கிழவரின் கண்களில் என்ன ஒளி!

''சார்! உங்கள் கோட்டை நான் வேண்டும் என்று கிழிக்கவில்லை. நீங்கள் தப்பாக நினைக்கக் கூடாது...'' என்று பாஸ்கர் இழுத்ததும், ''தம்பி, என் இரண்டு ஆல்பங்களையும் எனக்கு மீட்டுத் தந்திருக்கிறாய். அதுவே பெரிய உதவி. அதோடு இந்தக் கோட்டை நீ கிழித்தாயோ.... நான் பிழைத்தேன்'' என்றார் கிழவர்.

''என்ன சொல்கிறீர்கள்?''

கிழவர் சுற்று முற்றும் பார்த்தபடி ''இந்தக் கோட்டு என் கல்யாணத்துக்குத் தைத்தது. என் மனைவி — இவள் பாட்டி, என்னை வேறு கோட்டு இதுவரையும் தைத்துக் கொள்ள விடவேயில்லை. கிழிந்தபோதெல்லாம் ஒட்டுப் போட்டுக் கொடுத்து விடுவாள்'' என்றார்,

''தாத்தாவுக்கும் பாட்டியை எதிர்க்கத் தைரியம் கிடையாது.''

''போக்கிரி!'' என்றபடி இந்திரகலாவின் கன்னத்தைக் கிள்ளியவர் பாஸ்கரைப் பார்த்து, ''இப்பொழுது உன் புண்ணியத்தில் அந்தக் கோட்டு ஒழிந்தது. உனக்கு எப்படி நான் நன்றி சொல்வது?'' என்றார்.

''நன்றி மட்டும்தானா?'' என்றபடி பரிதாபமாய்க் கலாவைப் பார்த்தான் பாஸ்கர்.

''ம்ம்ம்ம்...எனக்குத் தெரியும், எனக்குத் தெரியும். ஜமாய்க்க விடுவோம்... புது டெரிலின் கோட்டு கல்யாணத்துக்கு வாங்கிக் கொடுப்பாயல்லவா?'' என்றபடி அட்டகாசமாய்ச் சிரித்தார் கிழவர்!


இந்திரகலாவும் பாஸ்கரும் அசடு வழிய ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்!

சாதாரண காப்பிகளுக்கு எதிரான புரட்சியில் சேருங்கள்!

வற்புறுத்தி வாங்குங்கள் ஒரு ஸ்பெஷல் காப்பி

விசேஷ செறிவு:
விசேஷ நிறம்:
விசேஷ பாக்கிங்:

விலை
ரூ. 2.87
வரிகள் தனி.




புதியது!
'அதி-ஸ்ட்ராங்கான'

ரிக்கரி®
இன்ஸ்டன்ட்

இது விசேஷமானது!
நெஸ்கஃபே தயாரிப்பாளர்கள் அளிப்பது

ACIL-R-635 (3) TAM



ஒளிமயமான வாழ்க்கை - உங்களைக் களிப்புடன், கதகதப்புடன்

வைக்க உதவுபவை பஜாஜ் சாதனங்கள்

குளிர் காலத்தில் குளிருவது சகஜம். சில சமயம் தாங்கமுடியாமலும் இருக்கும். அதைத் தவிர்க்க, வச தேவை. முன்பெல்லாம் சுலபமான வசதிகள் இருக்கவில்லை. ஆனால் இன்று, உங்களைக் கதகதப்புட வைத்திருக்க, பஜாஜ் பல சாதனங்களைத் தயாரித்துள்ளது. ரூம் ஹீட்டர், வாட்டர் ஹீட்டர் போன்ற பல்வேறு சூடு தரும் கருவிகளை உருவாக்கியுள்ளது பஜாஜ். அவை மின்விசையால் இயங்குவதால் வேகமும் வசதியும் மிகுந்துள்ளன. அந்த சாதனங்கள் உயர்ந்த தரமும், உன்னத திறனும் உறுதி செய்யும் பஜாஜ் சின்னம் தாங்கி வருகின்றன. ஆகையால் இன்று வாழ்க்கை வசதியுடன் இருப்பதில் வியப்பில்லை

எப்போதும் வாழ்க்கையைக் கதகதப்புடன் வைக் உதவுகிறது பஜாஜ்.

பஜாஜ் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்

45.47, வீர நரிமான் ரோடு, பம்பாய்-1. இந்தியாவெங்கும் கிளைகள்

heros' BE -125A TA

இலக்கிய மலர்கள்

5. வயிற்றுப்பாடு!

இந்த உலகத்தில் உயிர் இனங்கள் அனைத்தையும் இயக்குகிற வேகம் எது? காதலா? அல்லது பசியா? அந்த ஆற்றல் மனத்துக்கு இருக்கிறதா அல்லது வயிற்றுக்கு இருக்கிறதா என்று ஒரு பெரிய கேள்வி!

உலகப் பெரும் போர்களாகட்டும், அல்லது குடும்பத்துச் சண்டையாகட்டும், இல்லை, மனிதர்களிடையே சமுதாயத்தில் ஏற்படுகிற சிறிய பெரிய பூசல்களாகட்டும், எல்லாமே உள்ளத்தின் ஆசையினாலோ அல்லது வயிற்றுப் பசியாலோதான் நிகழ்கின்றன என்று மொத்தமாகச் சொல்லிவிடலாம். இரண்டுமே இரண்டு வகையான பசிகள்!

உள்ளத்தின் பசியைப் பற்றி, காதலையும் பேராசையையும் பற்றி உலக மகா காவியங்களும் ஓவியங்களும் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கலைகளிலே பேசி வந்திருக்கின்றன. மனித மனத்தின் தீராத தாபமாகிய இந்த உணர்ச்சிப் பசியானது உலகப் பேரிலக்கியங்களுக்கெல்லாம் வித்தாக அமைந்திருக்கிறது.

அது போலவே பொருளாதாரத் துறையிலே புகுந்து பார்த்தோமானால் வயிற்றுப் பசியானது மனித சமுதாயத்தை என்ன பாடு படுத்தி வந்திருக்கிறது என்பது ஒரு நீண்ட வரலாறு!

அவ்வையார் பாடுகிறார்:

நல்ல சுவையான உணவு அகப்படும்போது, கூட ஒரு நாளைக்குச் சேர்த்துச் சாப்பிட முடிகிறதா? இந்த வயிறு அதற்கு இடம் கொடுக்கிறதா? இல்லை! சரி, ஒரு நாள் நமக்கு உணவு கிடைக்கவில்லை என்றால் இந்த வயிறு பொறுத்துக்கொள்கிறதா? அதுவும் இல்லையே!

ஒரு நாள் உணவைஒழி
என்றால் ஒழியாய்

[ஒழி — விட்டு விடு: சாப்பிடாமல் இரு.]

ஏ வயிறே! ஒரு நாளைக்கு நீ பட்டினியாய் இரு என்று சொன்னால் சொன்னபடி கேட்கிறாயா? இல்லை.

ஒருநாள் உணவையொழி
என்றால் ஒழியாய்
இருநாளைக்கு ஏல்என்றால்
ஏலாய்—

[இருநாளைக்கு — இரண்டு நாட்களுக்குச் சேர்ந்தாற்போல். ஏல் என்றால் — ஏற்றுக் கொள் என்று சொன்னால். ஏலாய் — ஏற்க மாட்டாய்.]

''இன்று நல்ல உணவு, நிறைய உணவு கிடைத்திருக்கிறது. அப்படியே இரண்டு நாட்களுக்குக் காணும்படியாக இப்போதே சாப்பிட்டுக்கொள்!'' என்று சொன்னாலாவது இந்த வயிறு கேட்கிறதா? அதுவும் இல்லை!

— ஒருநாளும்
என்நோவு அறியா
இடும்பைகூர் என்வயிறே!

[ஒருநாளும் — என்றைக்குமே! என்நோவு— என்னுடைய சங்கடத்தை. அறியா — புரிந்து கொண்டு ஒத்துழைக்க மாட்டாத. இடும்பை கூர் — இடைஞ்சல் பிடித்த.]

ஒருநாளாவது நம்முடைய வசதி அல்லது வசதிக் குறைவை இந்த வயிறு புரிந்துகொள்கிறதில்லை. அதிகம் சாப்பிட்டாலும் தொந்தரவு, சாப்பிடா விட்டாலும் தொந்தரவு!

ஒருநாளும்
என்நோவு அறியா
இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல்
அரிது!

மீ.ப. சோமு





[அரிது—மிகவும் இன்னலான இடர்ப்பாடுதான்!]

இந்த வயிற்றோடு கூடி வாழ்தல் எத்தனை சங்கடமாக இருக்கிறது என்று கவியுள்ளம் அங்கலாய்க்கிறது.

சாதாரணமாக நாம் ஒவ்வொருவரும் அனுபவிக்கிற இந்தத் தொந்தரவை, வயிற்றையே கூப்பிட்டு வைத்துப் பேசுகிற பேச்சாக வேடிக்கைபோலச் சொல்லி, இந்த வயிற்றுக்கு அப்பால் நிற்கிற மனித வாழ்க்கையின் துயரங்களைக் கோடிட்டுக் காட்டுகிறது அவ்வையார் பாடல். வயிற்றுக்கு மட்டும் இந்தச் சமாளிப்புக் குணம் இருந்து விட்டால், உலகம் என்பது ஒரு நந்தவனமாக அல்லவா காட்சி தரும். ஆனால் வயிற்றுக்கு ஏது அந்த அரிய ஒத்துழைப்பு!

ஒருநாள் உணவையொழி
என்றால் ஒழியாய்
இருநாளைக் கேலென்றால்
ஏலாய் — ஒருநாளும்
என்னோ வறியா
இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல்
அரிது!

அவ்வையாருடைய குரலிலே மக்களினமாகிய இந்த மனித குலத்தின் வேதனை மட்டுமல்ல, உயிர் வர்க்கங்கள் அனைத்தினுடைய துயரமுமே எதிரொலிக்கிறது. அந்த எதிரொலிக்குள்ளே நுட்பமான நகைச்சுவை ஒன்றும் பின்னி நின்று கவிக் குரலிலே பேசுகிறது!

கணக்குத் தெரியாது!

பாரதப் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி தம்முடைய தேர்தல் செலவுக் கணக்கை எழுதி வைக்கவில்லையாம்! கணக்கை யார் எழுதி வந்தார் என்பதும் தெரியாதாம்! இவ்வாறு தேர்தல் வழக்கில் அவர் சாட்சி கூறியுள்ளார்.

—என். லட்சுமி



● இங்கிலாந்தில் ஒரு முறை 'காமிக் கிரிக்கெட்' என்ற ஒரு கிரிக்கெட் விளையாடினார்கள். அதில் காணப்பட்ட விசேஷங்கள்.

(1) ஒரு மணி நேரத்தில் ஆறு முறை 'ட்ரிங்க்ஸ்' வந்தன!

(2) மழையோ, வெய்யிலோ, இருட்டோ, வெளிச்சமோ ஆடியே தீர வேண்டும்.

(3) மதுவும் ஆட்ட மைதானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஏதேனும் ஓர் ஆட்டக்காரருக்குக் களைப்பு ஏற்பட்டால் பெவிலியனிலிருந்து ஒரு நாற்காலி அவருக்காகக் கொண்டு வந்து போடப்பட்டது!

ஆதாரம்: மைக்கேல் பார்க்கின்ஸன் எழுதிய நூல். 'கேளிவேம்'

வெளிச்சம் எங்கே?

மின்சாரத் தடையின் காரணமாக வீடுகளில் மின்சாரத்தைச் சேமிப்பதில் அரசுடன் ஒத்துழைக்கிறார்கள். ரைஸ்மில்களும், தொழிற்சாலைகளும் அரசு அனுமதித்த யூனிட்டை வைத்து நடக்கின்றன. ஹோட்டல்களில் சாப்பிடும் பொழுதும் சினிமாக் கொட்டகைகளிலும் மின்விசிறி போடுவதில்லை. தெரு விளக்குகளும் சரியாக எரிவதில்லை.

இவ்வாறெல்லாம் இருக்க நாகர்கோவிலிலுள்ள மிகப் பெரிய மைதானமான நாகராஜா திடலில் தம்பூலா என்ற சூதாட்டம் மாலையில் ஆரம்பித்து இரவில் ஒரு மணிவரை நடைபெறுகிறது. மக்கள் பலர் ஏராளமான ரூபாயை இழந்து ஓட்டாண்டியாகிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூதாட்டத்தை நடத்துவதற்கு 109 டியூப் லைட்டுகளும் பத்து பெரிய பல்புகளும் எரிகின்றன!

—எஸ். லட்சுமிநாராயணன்

தாய் போதிப்பது தத்துவம்.
தந்தை பேசுவது பழம்பெருமை.
இளைய பருவத்தினர் அலசுவது புதுமை.
ஆயினும் எல்லோரின் ஒருமித்த
கருத்து ஸிஸிஎம் பெருமை.

ஸிஸிஎம் தயாரிப்புகள்:
நியூ மிர்ராபோ ஃபுல்
வாயில் புடவைகள் •
ஸ்டேலாங்கர்,
ஸ்ட்ரேஞ்சர்
ஷர்ட்டிங்குகள் •
எலகன்ஸா சூட்டிங் •
லஸ்லின் ஷர்ட்டிங் •
சில்வர்லேன், சில்வர்
கிங் வேஷ்டிகள் •
மல் • காடா.

ஒருமித்த கருத்து!

நியூ மிர்ராபோ • லெஸ்லின் • எலகன்ஸா
ஸ்டேலாங்கர் • ஸ்ட்ரேஞ்சர்



உங்கள் குடும்ப நண்பன்...CCM

தி கோயம்பத்தூர் காட்டன் மில்ஸ் லிமிடெட்

மார்க்கெட்
செய்பவர்கள்:
வெங்கடேஷ்
வஸ்திராலயா

திருப்தி

உமாசந்திரன்

யார் செய்த புண்ணியமோ, அந்த பஸ் ஸ்டாண்டில் நிழல் தரும் மரம் ஒன்று இருந்தது. அந்த நிழலில் உருப்படியாக ஒரு சிமெண்ட் பெஞ்சியும் இருந்தது. அப்படி இருந்தும் நான் சற்று எட்டவே உச்சி வெய்யிலின் உக்கிரத்தையெல்லாம் தலையில் வாங்கிக் கொண்டு கால் கடுக்க நின்றிருந்தேன். அந்த நிழலும் அந்தச் சிமெண்ட் பெஞ்சியும் யாருக்கும் பயன்படவிடாமல் காலை நீட்டிப் படுத்திருந்தான் ஓர் ஒடிசல் பயல். படுத்திருந்தது மட்டுமல்ல, வாயில் வெற்றிலை பாக்கும் புகையிலையும் அடக்கிக் கொண்டு அவ்வப்போது மனம் போன திசையில் துப்பிக் கொண்டும் இருந்தான்.

துல்லியமாகச் சலவை செய்த உடை அணிந்த ஒரு பெரிய மனிதர் அந்த நிழலை நாடிச் சென்று நின்று கொண்டே சில விநாடிகளுக்கெல்லாம் பதைபதைப்புடன் கூறினார்: "என்னப்பா, இது! காற்று அடிக்கும்போது கண்ணை மூடிக்கிட்டுத் துப்பறியே! மத்தவங்க மேலே தெறிக்கும் என்ற எண்ணம் வேண்டாமா?"

"நீ ஒதுங்கிப் போய் நில்லு சார்! காற்று எந்தத் திசையிலே அடிக்குதுன்னு அளந்து பார்த்துக்கிட்டா துப்புவாங்க!" என்று விறைப்பாகக் கூறிக் கொண்டே மறுபடியும் துப்பினான் அந்த ஆள்.

நல்ல வேளையாக அப்போது ஒரு பஸ் வந்து நிற்கவே, அந்தப் பெரியவர் அவசரம் அவசரமாகச் சென்று அதில் ஏறிக் கொண்டதும் பஸ் புறப்பட்டுச் சென்றது.

"சலவை துணி கட்டிக்கிட்டா பெரிய சீமான்னு நெனைப்பு! அவ்வளவு சீமானு இருந்தா பஸ் ஸ்டாண்டுக்கு வரக்கூடாது. டாக்ஸி வைச்சுக்கிட்டுப் போறதுதானே? ஆரு அதுக்கு வக்கு ஏது?" என்று முணுமுணுத்தான் அந்தக் காலிப் பயல். நான் நின்ற திசையில் ஒரு பார்வை பார்த்துவிட்டு மீண்டும் புகையிலைச் சாற்றை ஒன்று சேர்த்துப் 'புளிச்' என்று நடைபாதையில் சர்வ சுதந்திரமாகத் துப்பினான்.

ஏதோ கூறிவிட வேண்டும் என்று என் நாவு துடித்தது. ஆனால் நான் பல்லைக் கடித்துக் கொண்டு வேறு திசையில் பார்க்க ஆரம்பித்தேன்.

என்னுடைய பஸ் வருவதற்கு இன்னும் எவ்வளவு நேரம் இப்படித் தவமிருக்க வேண்டுமோ? எவ்வளவோ அவசரம் அவசரமாகத் தான் வீட்டை விட்டுப் புறப்பட்டேன். உத்தேசமாக அந்த பஸ் அந்த ஸ்டாண்டுக்கு வரும் நேரத்தை மனத்தில் வைத்துக் கொண்டு வேகமாகத்தான் பஸ் ஸ்டாண்டுக்கு விரைந்து வந்தேன். ஆறு பத்தடி தூரத்துக்குள் நான் வந்து கொண்டிருந்தபோதே நான் எதிர்பார்த்து வந்த அந்தப் பொல்லாத பஸ் என் கண்ணெதிரே நெடுஞ்சாலையில் வேகமாகச் சென்றது மட்டுமல்ல; ஸ்டாண்டில் நிற்காமலே டபுள் விசில் ஒலிக்க அதே வேகத்துடன் ஜிட்டாகப் பறந்து சென்று விட்டது. நான் துவண்ட நடையுடன் பஸ் ஸ்டாண்டில் போய் நின்றேன். நாற்பது நிமிஷங்களுக்கொரு முறை பெரிய மனசு பண்ணி விடப்படும் பஸ் அது. நடுநடுவே 'மகளிர் மட்டும்' பலகையைத் தொங்க விட்டுக் கொண்டு வருவது வேறு. அடுத்த பஸ் எப்படி வரப் போகிறதோ? பல்லவா போக்குவரத்தின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு அந்தக் கடும் வெய்யிலில் நிற்பதைத் தவிர வேறு வழி!

சிமெண்ட் பெஞ்சியை நோட்டம் விட்டேன். அந்த ஆசாமி அந்தப் பெஞ்சிக்கும் நிழலுக்கும் ஏகபோக உரிமை கொண்டாடிக் கொண்டு இன்னும் படுத்துக் கொண்டு தான் இருந்தான். அவன் வாய் இன்னும் புகையிலைச் சாறு உமிழும் ஊற்றாகத் தான் செயல்பட்டுக் கொண்டிருந்தது. தன் பக்கம் என் பார்வை திரும்பியதை அவன்



உணர்ந்தானோ என்னவோ, சட்டென்று முகத்தைத் திருப்பி என்னை முறைப்பது போலப் பார்த்தான். அற்பத்தனம் கூத்தாடும் அந்த முகத்தைப் பார்க்க விருப்ப

மில்லாதவனாக என் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டேன்.

உள்ளூற எரிச்சல் மூண்டது என் மனத்தில். பஸ்ஸுக்காகக் காத்து நிற்பவர்கள் சற்றுக் காலாற உட்காரட்டுமே என்ற கருணை உள்ளத்துடன் எந்தப் புண்ணியவானோ போட்டிருந்த பெஞ்சி அது. மற்றவர்களுடைய சௌகரியத்தைப் பற்றிக் கொஞ்சங்கூடக் கவலை இல்லாமல் அந்தக் காலிப் பயல் காலை நீட்டிப் படுத்திருக்கிறானே, இந்த அக்கிரமத்தைக் கண்டிக்க எனக்கு ஏன் வாய் வரவில்லை? அவன் இளைஞன்தான். நோயாளி இல்லை. வேலை செய்து களைத்தவனாகவும் தோன்றவில்லை. அந்த முற்பகல் நேரத்தில் அப்படிப் படுக்க வேண்டும் என்ற எண்ணமே யார் மனத்திலும் தோன்ற முடியாது — தோன்றவும் கூடாது! 'அப்படிப் படுத்திராதே! மற்றவருக்கு இடைஞ்சல் செய்யாதே! எழுந்திரு!' என்று கூச்சல் போட்டால் என்ன? மனம் தான் கூச்சல் போட்டது. குரல் ஒத்துழைக்க மறுத்தது. நாகரிகக் குரல்! அந்தக் காலியுடன் மோத அதற்கு விருப்பமில்லை!

தள்ளாத பாட்டியம்மாள் ஒருத்தி மூச்சு வாங்க நடந்து வந்தாள்.

''ஏம்பா, எழும்பூர் பஸ் போயிடுத்தா?'' என்று கேட்டாள் என்னைப் பார்த்து.

''இன்னும் போகலே. இப்போ வரும் நேரம்தான்'' என்று அந்த அம்மாளை உற்சாகப்படுத்தும் நோக்கத்துடன் கூறினேன்.

அந்த அம்மாள் ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் நிழலை நோக்கிச் சென்றாள். அப்போதாவது அந்த ஆசாமி எழுந்து அந்த மூதாட்டி உட்கார்ந்து கொள்வதற்கு வசதி செய்து கொடுப்பான் என்று நினைத்தேன். ஆனால் அந்த ஆசாமி அசைந்து கொடுக்கவில்லை. ஏதோ சினிமாப் பாட்டை முணகியவாறு படுத்திருந்தான்.

பாவம், அந்த வயது முதிர்ந்த அம்மாள் எவ்வளவு தூரத்திலிருந்து நடந்துவந்தாளோ? அவளுடைய கால்கள் இரண்டும் எப்படிக் கெஞ்சிக் கொண்டிருந்தனவோ! சிறிதுநேரம் உட்கார்ந்து களைப்பை ஆற்றிக் கொள்ள வேண்டுமென்று அவளுக்குத் தோன்றாமல் இருக்குமா? ''ஏம்பா, சித்தே எழுந்திரேன்! நான் ஓர் ஓரமா உக்காந்துக்கறேன்!''

அந்த ஆசாமி அந்த மூதாட்டியை முறைத்துப் பார்த்தான்.

'' நிக்க முடியலேப்பா. கால் ரெண்டும் கெஞ்சறது!''


'' போம்மே! அப்படி மரத்தடியிலே உக்காரு!''

''எப்படி உட்காரறதுப்பா? எங்கே பார்த்தாலும் எச்சலும் துப்பலுமா இருக்கே?''

''அதெல்லாம் பார்க்கறவங்க வீட்டோட அடைஞ்சு கிடக்கணும். சாகப் போற வயசிலே பஸ் சவாரி கேக்குதில்லே, உனக்கு?'' என்று சிடுசிடுத்தவாறு அந்த ஆள் மறுபக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

எனக்கு வந்த ஆத்திரத்துக்கு அளவில்லை. அந்தப் பயலை அப்படியே தூக்கி அப்பாலெறிய என் கைகள் துடித்தன.

பாட்டியம்மாள் பாவம், நிலைகொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தாள். கடைசியில் வெய்யில் பகுதிக்கே வந்து எச்சில் துப்பப் படாத நடைபாதைக் குறட்டில் உட்கார்ந்து கொண்டாள். ஏளனச் சிரிப்புடன் புகையிலைச் சாற்றை உமிழ்ந்து விட்டு





"இந்த சோஷலிஸவாதிகள் இல்லாமலிருந்திருந்தால், நம் நாட்டுக்கு எப்போதோ சோஷலிஸம் உண்மையிலேயே வந்திருக்கும்."

சொன்னவர்: 'பெர்னார்ட் ஷா'

தகவல்: சம்பத்குமாரி

மீண்டும் சினிமாப் பாட்டு முனகலைத் தொடர்ந்தான் அந்தக் காவாலிப் பயல்.

அந்த நிலைமை இன்னும் சற்று நேரத்துக்கு நீடித்திருந்தால் நான் என்ன செய்திருப்பேனோ, எனக்குத் தெரியாது. ஆனால் என் நாகரிகப் பண்புகளுக்கு அப்படிப்பட்ட சோதனை எதுவும் வருவதற்கு முன்பே அந்த முதியவன் செல்ல வேண்டிய எழும்பூர் பஸ் வந்து காப்பாற்றிவிட்டது.

அந்த ஆசாமி இப்போது சினிமாப் பாட்டை முனகுவதோடு நிறுத்தவில்லை. உரக்கவே பாட ஆரம்பித்திருந்தான்.

அவிற்று. மணி பன்னிரண்டு அடிக்க இன்னும் சில நிமிஷங்களே பாக்கி இருந்தன. அடுத்த பத்து நிமிஷங்களுக்குள் என் பஸ் வந்து அதில் எனக்கு இடம் கிடைத்தால்தான் நான் பார்க்கப் போகும் நண்பரைச் சந்திக்க முடியும். பிற்பகல் டில்லி விமானத்தைப் பிடிக்க அவர் ஒரு மணிக்கே விமான நிலையத்துக்குப் புறப்பட்டுச் சென்றுவிடுவார். அதற்கு முன்பு அவரை நான் சந்தித்தாக வேண்டும்.

அந்த ஆசாமியின் சினிமாப் பாட்டு இன்னும் உரத்து ஒலித்து என் கவனத்தை அந்தத் திசையில் திருப்பியது. அதற்குக் காரணத்தையும் நான் கண்டு கொண்டேன்.

சற்றுத் தூரத்தில் இளம் பெண் ஒருத்தி வந்து கொண்டிருந்தாள். பள்ளிக்கூடத்துக் குழந்தைகளைக் கொண்டுவிடும் பணிப்பெண் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. துல்லியமாகவும் திருத்தமாகவும் உடை அணிந்து, பார்க்கும்படியாக இருந்தாள். வேண்டுமென்றே அவளுடைய எடுப்பான தோற்றத்தையும் ஒயிலான நடையையும் சுட்டிக்காட்டுவதுபோல் அமைந்திருந்த ஒரு சினிமாப் பாட்டின் வரிகளையே உரக்கப் பாடினான் அந்தச் சோம்பேறி. அந்தப் பெண் கூசிக் குலைந்து போவதை நான் காண முடிந்தது.

அவள் பெஞ்சியின் அருகே வந்தபோது ''அடாடா! இப்படி வெயில்லே நடந்து வந்தா உன் உடம்பு என்னத்துக்கு ஆகும்? நிழல்லே உக்காந்துட்டுப் போ ராசாத்தி. பெஞ்சியிலே வேண்டிய இடம் இருக்கு!'' என்றான்.

அவள் பதில் எதும் சொல்லவில்லை.

''புள்ளெங்களைக் கையைப் பிடிச்சுப் பள்ளிக்கூடத்துக்கு அழைச்சுக்கிட்டுப் போனியே, நான் பார்த்திருக்கிறேன். என்னையும் உங்க பள்ளிக்கூடத்திலே சேர்த்துக்க வேன். தெனமும் என்னையும் கையைப் புடிச்சு அழைச்சுக்கிட்டுப் போயேன்!''

அந்தப் பெண் மானி, பாவம்! அந்தக் காலிப் பயலுடைய வார்த்தைகள் எல்லை மீறிப் போவதற்குள் காது கேட்காத தூரத்துக்குப் போய்விடத் துடித்தாள். ஆனால் அந்தச் சமயம் பார்த்துத்தானா அவளுடைய செருப்பு காலை வாரிவிட வேண்டும்? அந்தச் சிங்கப்பூர்ச் செருப்பின் வார் கழன்றிக் கொண்டு வந்துவிடவே, அதைச் சரிப்படுத்துவதற்காக அவள் அங்கேயே நிற்கவேண்டியதாயிற்று.

அடுத்தடுத்துச் 'சூள்' கொட்டித் தன் அநுதாபத்தைத் தெரிவித்தான் அந்த விடலை.

''பார்த்தியா, பார்த்தியா? நீ வெயில்லே நடக்கறது அந்தச் செருப்புக்குக்கூடப் பொறுக்கலே. இப்பிடி உட்காந்துதான் அதைச் சரிப்படுத்திக்கிட்டுப் போயேன்!''

அந்தப் பெண் அவனைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. செருப்புக்களைக் கையிலேயே எடுத்துக் கொண்டு வெறும் காலுடன் நடக்க ஆரம்பித்தாள்.

''அடாடா! பூமாதிரி பாதம் ரெண்டும் கொப்புளிச்சுப் போயிடுமே!''

அவள் நடைபாதையைவிட்டு இறங்கிச் சாலையின் குறுக்காகக் கடந்து சென்றாள்.

''அக்கம் பக்கம் திரும்பாமல் போறியே, ராசாத்தி! எவனாவது கண் மண்ணு தெரியாம மோதிட்டுப் போயிடப் போறான்!'' என்று கத்தினான் அந்தக் காலி. பின்பு ஏளனச் சிரிப்புடன் மறுபடியும் பெஞ்சியில் காலை நீட்டிப் படுத்துக் கொண்டான்.

நான் ஒரு மனிதன் அங்கே நின்றுகொண்டிருப்பதை அவன் சட்டையே செய்யவில்லையா? அவன் கண்டபடி கத்தியபோது அந்தப் பெண் ஒரு முறை என்னைத் தீனமாகப் பார்த்தாள். நான் ஏதாவது அவளுடைய சார்பில் பேசி அந்த இக்கட்டான நிலையிலிருந்து அவளைக் காப்பாற்ற முற்படுவேன் என்று அவள் எதிர்பார்த்தாள் போலும்! நானோ? மனம் எரிமலையாய்க் குமுறியும் வாய்ப் பூட்டுப் போட்டுக் கொண்டு நின்றிருந்தேன். வெள்ளைச் சட்டை அணிந்தவன் சாக்கடையில் கல் எறியலாமா?

'அந்தப் பயல் மற்றவருக்கு வீண் தொந்தரவு கொடுப்பதற்காகவே அங்கே வந்து, அந்தப் பெஞ்சியை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறானா? அல்லது ஏதாவது பஸ்ஸுக்குக் காத்திருக்கும் நேரத்தை இவ்வளவு 'நல்ல' விதத்தில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறானா? அதோ தூரத்தில் பஸ் வருவது தெரிகிறது. கடவுளே! என் பஸ்ஸாக இருக்க வேண்டுமே! இவ்வளவு தூரத்திலிருந்து நம்பர் கூடச் சரியாகத் தெரியவில்லை. காலாகாலத்தில் கண்ணாடியை மாற்றியாக வேண்டும் — நல்ல வேளை! என் பஸ்தான்! நிரம்பி வழிந்து கொண்டுதான் வருகிறது' ஸ்டாண்டிலிருந்து பத்து கஜம் தள்ளிப் போய் நின்றது பஸ். வெட்கத்தை விட்டுவிட்டுத் தலைதெறிக்க ஓடிப்போய் பஸ்ஸின் கம்பியைப் பிடித்துக் கொண்டு படியில் கால் வைத்துக்கொண்டிரும் வழியை மறித்து நின்றிருந்த கண்டக்டரை இடித்துத் தள்ளியவாறு உள்ளே தாவி, மேல் கம்பியைப் பிடித்துக் கொண்டேன். கண்டக்டர் உதிர்த்த வசைமொழி என் காதில் விழுந்தது.

ஈடிலா இன்பம் காண ஆடவருக்கு உறுதுணை



எல்லையில்லா இன்பம், எங்கெங்கும் வெற்றி காணும் ஆடவருக்கே. உங்களுக்காகவே காத்திருக்கிறது ஆரோக்கியம்-வலிமை, வீரியம். வழிகாட்டுவது ஒகாஸா. வற்றாத இன்ப ஊற்று—அதுவல்லவா வாழ்வு! ஆடவருக்கு உண்டு ஒகாஸா. பெண்மணிக்கும் இருக்கிறது ஒகாஸா. தென்பைமீட்டு இன்பமூட்ட என்றுமே உண்டு நவீன டானிக் மாத்திரைகளான ஒகாஸா.

ஒகாஸா-ஹார்மோ-பார்ம் லிமிடெட்
லண்டன்-பெர்லின் தயாரிப்பு.

எல்லா முக்கிய மருந்துக் கடைகளிலும் கிடைக்கிறது.

ஒகாஸா பற்றிய இலவசத் துண்டுப் புத்தகம் பெற, எழுதுக:

OKASA CO. PVT. LTD.
P.O. BOX NO. 390, BOMBAY-1.

ஸ்பென்ஸரின்

ஸி.எ.க்யூ
(C.A.Q)

இருமல் மற்றும் ஜலதோஷத்துக்கு. திரவ வடிவிலும் மாத்திரையாகவும் கிடைக்கும்.

ஸ்பென்ஸர் & கம். லிட்.,
சென்னை & கிளைகள்

மூல நோயை

முற்றவிடாமல் நம்பிக்கையான

ஹெடன்ஸா

களிம்பு உபயோகித்து நிவாரணம் அடையுங்கள்;
—ரண சிகிச்சையையும் தடுங்கள்

Bensons-2141 TAM

பஸ் ஒரு குலுக்குக் குலுக்கிக் கொண்டு புறப்பட்ட அதே சமயத்தில் என்மேல் மோதி இடித்துக் கொண்டு வந்து நின்றான் ஓர் ஆசாமி. நான் எரிச்சலுடன் திரும்பிப் பார்த்தேன். சிமெண்ட் பெஞ்சு காவாலியேதான்! இந்த பஸ்ஸைப் பிடிப்பதற்காகத்தான் அவனும் காத்திருந்தானா?

''என்ன தாத்தா முறைக்கிறே?''

அவன் மூச்சுக் காற்று என் மேலேயே படும் அளவுக்கு என்னோடு ஒட்டினாற்போலேயே அவன் நின்றிருந்ததால் ஏற்பட்ட அருவருப்பு! அத்தனை பேர் எதிரில் என்னைத் 'தாத்தா' என்று சொல்லி விட்டானே! அதை நினைத்து எனக்கு ஆத்திரம் பொங்கியது.

''ஏம்பா, இடமா இல்லே? ஏன் இப்படி மேலேயே வந்து விழறே?'' என்று எரிந்து விழுந்தேன்.

''நீ முன்னாலே போ தாத்தா! ஏன் தாத்தா வழியை அடைச்சுக்கிட்டு நிற்கிறே?''

மானம் போவது போல் இருந்தது எனக்கு. சுற்று முற்றும் நோட்டம் விட்டேன். எல்லோரும் சிரிப்பை அடக்க முடியாமல் தவிப்பதாகவே எனக்குத் தோன்றியது. அதிலும் அருகிலேயே உட்கார்ந்திருந்த இளம் பெண் நாசூக்காக விரல்களை இதழ்களில் பதித்து உண்மையிலேயே சிரித்துக் கொண்டுதான் இருந்தாள்.

அதற்கு மேல் அந்தப் பயலுடன் மோதிக் கொள்ள விரும்பவில்லை நான். அடுத்த ஸ்டாப்பிலேயே ஒருவர் இறங்கி விடவே, காலாற உட்கார்ந்து கொள்ளவும் எனக்கு இடம் கிடைத்தது. ஆனால் மனம் மட்டும் குமுறிக் கொண்டிருந்தது. என்ன திமிர் இருந்தால் அந்த ராஸ்கல் என்னைத் 'தாத்தா' என்று அழைத்திருப்பான்!

ஊரைச் சுற்றிக் கொண்டு அண்ணா நகர் வரை போகும் பஸ் அது. வழி வளர்ந்தது போல் பொழுதும் வளர்ந்து கொண்டிருந்தது. 'தாத்தா' என்ற அழைப்பால் குன்றிப்போயிருந்த என் மனம் சற்று நேரத்தில் அதைத் துடைத்துப் போட்டு விட்டு வேறு சிந்தனையில் மூழ்கத் தொடங்கியது. பஸ்ஸில் உரத்த குரலில் ஒலித்த காரசாரமான பேச்சுக்கள் சிந்தனையிலிருந்து என்னைத் தட்டி எழுப்பின.

'' ஏண்டா, பெரிய கில்லாடின்னு நெனைப்பா உன் மனசுக்குள்ளே? எலும்பெல்லாம் நொறுக்கிடுவேன் ! ஜாக்கிரதை!''

''ஹா! எலும்பை நொறுக்கற ஆளைப் பாரு. என் கை என்ன புளியங் காயா பறிச்சுக்கிட்டிருக்கும்?''

''ஏன்ய்யா, இதென்ன பஸ்ஸா, இல்லே சந்தைக் கடையா? என்னய்யா தகராறு?''

''நானும் கவனிச்சுக்கிட்டே இருக்கேன் இந்த ஆளெ. பாவம், அந்தப் பொண்ணு கூசிக் குறுகிப் போகுது. வேணும்னே இந்த ஆளு அந்த இடத்தை விட்டு அசையாம அந்தப் பொண்ணு மேலே உராயற மாதிரியே நின்னுக்கிட்டிருக்கான். நகர்ந்து போயான்னு கோவம் பொத்துக்குது!''

''என்னை நகரச் சொல்ல நீ யார் ?''

''யாருன்னு காட்டணுமா? பொம்பளைங்களைச் சீண்டறதுக்கா பஸ்ஸிலே ஏறினே? சோம்பேறி!''

''யாரய்யா சோம்பேறி?''

''நீதான். வேறே யாரு? சித்த முன்னே அந்தப் பெரிய மனுஷரைத் 'தாத்தா'ன்னு நையாண்டி பண்ணினே. அவரு அப்பாவி பாவம். ஒண்ணுமே பேசாமப் போயிட்டாரு. ஏண்டா, நீ என்ன பேரனு, அவரைத் 'தாத்தா'ன்னு கூப்பிட?''

அப்போதுதான் நான் கவனித்தேன். தகராறுக்குக் காரணம் என்னைத் 'தாத்தா' என்று கிண்டல் செய்த அதே சிமிண்ட் பெஞ்சுக் காவாலிப் பயல்தான்! அவனுக்குச் சவால் விடும் மற்ற ஆளை நோட்டம் விட்டேன். முறுக்கிய மீசையுடன் வஸ்தாது மாதிரி இருந்தான்.

தகராறு அடங்கும் வழியாயில்லை. வலுத்துக்கொண்டே போயிற்று. என் உற்சாகமும் அதிகரித்துக் கொண்டே போயிற்று.

''அடாடா! இந்தக் கூச்சல்லே பஸ்ஸை எப்படிய்யா ஓட்டறது? அடங்கிப் போய்யா!''

''என்னை அடக்க வராதே! சரியான பாடம் கத்துக் குடுக்காம விடப் போறதில்லே இந்தச் சோமாறியை!''

''மறுபடியும் சோமாறின்னு சொன்னே...!''

''நூறுதரம் சொல்லுவேண்டா சோமாறி! பூச்சாண்டியா காட்டறே? பூட்டுப் பூட்டாக் கழட்டிடுவேன்!''

அபாயச் சங்குபோல் உரக்கக் கார்வை கொடுத்து விசிலை அடித்தான் கண்டக்டர். பஸ் ஓர் ஓரமாய்ப் போய் நின்றது.

''ரெண்டு பேரும் இறங்குங்கய்யா. உங்க சண்டையை வெளியிலே போய்ப் போட்டுக்குங்க. பஸ்ஸுக்குள்ளே வேண்டாம்!''

இரண்டு பேரும் ஒருவரை யொருவர் வீராப்புடன் பார்த்துக் கொண்டனர்.

''இறங்குடா சோமாறி!'' என்று சவால் விட்டான் மீசைக்கார வஸ்தாது. மற்றவனால் சவாலை ஏற்காமல் இருக்க முடியவில்லை.

இரண்டு பேரும் இறங்கிய அதே சமயம் நானும் சட்டென்று எழுந்தேன். நான் என்ன நோக்கத்துடன் அந்தப் பஸ்ஸுக்காகத் தவம் கிடந்து அதில் புறப்பட்டிருந்தேன் என்பதெல்லாம் எனக்கு மறந்து விட்டது. மீசைக்காரனிடம் அந்தக் காலிப் பயலுக்குக் கிடைக்கப்போகும் தண்டனையைக் கண்ணாரக் காண வேண்டும் என்ற ஆவல் என்னை உந்தித் தள்ளியது போதும்! என்னையும் அறியாமல் நான் முன்பக்கமாகப் பஸ்ஸை விட்டு இறங்கினேன்.

''நீங்க ஏன் சார் இறங்கறீங்க? இது ஸ்டாப் இல்லே!'' என்றான் கண்டக்டர்.

''அது எனக்குத் தெரியும்!'' என்று உற்சாகத்துடன் பதிலுக்குக் கத்தினேன் நான்.

கண்டக்டரின் விசில் ஒலிக்கவும் பஸ் உறுமிக்கொண்டு கிளம்பியது.

ஆனால் நான் பஸ்ஸைப் பற்றியோ வேறு எதைப் பற்றியோ கவலைப்படவில்லை. என் பண்பாட்டுச் சிறையில் செயலற்றுக் குமுறிக் கொண்டிருந்த என் ஆத்திரத்துக்கு நான் விரும்பிய செயல் வடிவம் யார் மூலம் கிடைத்தாலென்ன? அதை நேரில் காணும் திருப்திக்காக வேறு எந்த அசௌகரியத்தையும் வரவேற்க நான் தயாராயிருந்தேன்!

Printed & Published by B. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam



AIYARS-M.300 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)



எழுச்சி

ஒரு புத்தெழுச்சி நம் நாட்டின் பெரும் பாகங்களில் பெருக்கெடுத்தோடுகிறது. பல பரந்த நிலப்பகுதிகளில் உயர் விளைச்சல் வகைகள், உரங்கள், பூச்சித்தடுப்பு மருந்துகள், விவசாய இயந்திரங்கள் போன்றவற்றைக் கையாண்டு விவசாயிகள் பயிர் விளைச்சலில் அநேக அரிய சாதனைகள் புரிந்து வெற்றி கண்டுள்ளனர்.

இது ஓர் ஏற்றமிகு எழுச்சி. இதனைப் போற்றிக்காக்க வேண்டும். நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் இதனைப் பரப்ப வேண்டும். இப்பசுமைப்புரட்சிக்கு உதவிய கருவிகளும் செய்முறைகளும் பல்லாயிரம் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். அப்போதுதான் பெருக்கெடுத்தோடும் எழுச்சி நிரந்தரமான வளத்திற்கு வழி வகுக்கும்.

உலகில் மிகவும் விரும்பப்படும் டிராக்டரையும் விவசாய இயந்திரங்களையும் உற்பத்தி செய்யும் டாஃபி இப்பசுமைப் புரட்சியில் தனது பங்கு குறித்துப் பெருமையுறுவதோடு இந்திய விவசாயத்தை நவீனப்படுத்தும் மகத்தான பணியில் மேலும் உறுதியான பங்கேற்கக் காத்துக் கொண்டிருக்கிறது.

TAFE

டிராக்டர்ஸ் அண்ட் ஃபார்ம் எக்விப்மெண்ட் லிமிடெட் மதராஸ்